# வரலாறு

2540



மேலப்பழுவூர்த் தவ்வை

நல்வாழ்த்துக்கள்

# அபிராமி ஹோட்டல்

மத்திய பேருந்து நிலையம்

திருச்சிராப்பள்ளி-620 001.

"பொய்ம்மை இகழ்"

# வரலாறு 5

அரையாண்டு ஆய்விதழ்

ஆகஸ்டு 1995


***இரா. கலைக்கோவன்***

பொறுப்பாசிரியர்

***மு. நளினி***

***அர. அகிலா***

உதவி ஆசிரியர்கள்

***இரா. கண்ணையன்***

மேலாளர்



வெளியிடுவோர்

***டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்***

48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

# இந்த இதழில் . . .

பக்கம்

1. *புதிய கல்வெட்டுகள்*
   1. தென்காசி விசுவநாத சுவாமி கோயில் தேர்ப் பொறிப்புகள் — 1
   2. கொல்லன்பொற்றைக் கல்வெட்டு — 2
   3. முரம்பன் கல்வெட்டுகள் — 3
   4. திருவிசலூர்க் கல்வெட்டுகள் — 5
   5. அய்யன் குளக்கரை மராத்திக் கல்வெட்டு — 11
2. *விட்டுப்போன தொடர்ச்சிகள்*
   1. கீழப்பழுவூர்க் கல்வெட்டு — 13
3. *பதிப்பிக்கப்படாத பாடங்கள்*
   1. பெருமுடியீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள் — 15
4. *ஆய்வுக் கட்டுரைகள்*
   1. கண்ணில் கனிந்த கபிலர் மலை — 30
   2. காசுகள் — 41
   3. திருவமைந்த திருமால் செப்புத்திருமேனி — 44
   4. தளிச்சேரிக் கல்வெட்டு — 45
5. *பொதுப்பகுதி*
   1. நூல் மதிப்புரை — 100
   2. அன்புள்ள உங்களுக்கு — 113
   3. கட்டுரையாளர்கள் — 118

# எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

வரலாறு நான்காம் இதழ் அறிஞர் பெருமக்களின் பரவலான பாராட்டைப் பெற்றிருப்பது மேலும் திறம்பட உழைக்கும் ஆற்றலைத் தந்துள்ளது. வாழ்த்தி வழிகாட்டியுள்ள அறிஞர்கள் அனைவர்க்கும் வரலாற்றின் நன்றிக் கைகூப்பு.

தளிச்சேரிக் கல்வெட்டு, இவ்விதழின் தலையாய கட்டுரையாய் அமைந்துள்ளது. எதிர்பார்த்ததைவிட இக்கட்டுரையின் பக்க அளவு மிகுதியானதால், தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு, பெருமைச்சுவடுகள், அங்கும் இங்கும், யாவரும் கேளிர் ஆகிய பகுதிகளை இவ்விதழில் தரக்கூடவில்லை.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு இரண்டாம் பகுதியில் பல புதிய தரவுகள் தரப்பட்டிருப்பதை அன்பர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். அறிஞர்தம் கருத்துரைப்பகுதியும் வரவேற்பு பெற்றுள்ளது. இவ்விதழிலும் தளிச்சேரிக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சில சொற்கள் தொடர்பாக அறிஞர் கருத்துரை பெற்றுக் கட்டுரையொன்று வெளியிடக் கருதியிருந்தோம். நாங்கள் தொடர்பு கொண்ட ஆறு அறிஞர்களில் இருவர் மட்டுமே மறுமொழி தந்துள்ளனர். பிற அறிஞர் களுடன் மீண்டும் தொடர்பு கொண்டு, மறுமொழி பெற்று, அடுத்த இதழில் வெளியிட முயற்சிப்போம். சிக்கலான சொற்கள், தகவல்கள் குறித்துத் தீர்வுகாண வரலாறு மேற்கொள்ளும் இத்தகு முயற்சிகளுக்கு அறிஞர்கள் துணை நின்றால் பெரும் பயன் விளையும்.

துணுக்குச் செய்திகள் பெற்றிருக்கும் வரவேற்பு முனைப்பான தேடலுக்கு வித்தாகியிருக்கிறது. தமிழிலக்கியங்கள் தகவல் புதையல் களாய் இருப்பதால் தேடத்தேட அள்ளக் குறையா அமுதமாய் அரிய செய்திகள் கிடைத்தவண்ணமுள்ளன. நிறைய தொகுத்துள்ளோம். தொடரும் இதழ்களில் தொடர்ந்து அவை இடம்பெறும்.

வரலாறு முதல் மூன்று இதழ்களின் படிகள் கேட்டுப் பலர் எழுதி யுள்ளனர். இம்மூன்று இதழ்களும் இருப்பில் இல்லை. நான்காம் இதழ் மட்டுமே சில படிகள் உள்ளன. வேண்டுவோர் எழுதிப் பெறலாம்.

அன்புடன்,

**இரா. கலைக்கோவன்.**

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்."

## கழைக்கூத்து

கழைக்கூத்து தமிழ்நாட்டின் சீர்மிகுந்த ஊரக ஆடல் வடிவங்களுள் ஒன்று. அந்த நாள் முதல் இந்த நாள் வரை தொடர்ந்து பயிலப்பட்டு வரும் இக்கூத்து நற்றிணைக் காலத்தே நிகழ்ந்த முறை பற்றிக் கோட்டம்பலனார் குறிப்பு காட்டுகிறார் (95). தரையில் நின்றபடி கருவிகளின் இசைக்கேற்ப ஆடுவதும் கழைகள் நிறுத்திக் கட்டிய கயிற்றின் மேல் நடப்பதும் கழைக் கூத்தின் அங்கங்கள். இவ்விரண்டனுள் கோட்டம்பலனார் இரண்டாம் நிகழ்வைப் படம்பிடிக்கிறார். கழைகள் நிறுத்திக் கட்டியிருப்பது கொடும்புரி நோன்கயிறாம். இக்கயிற்றின் மேல் நடப்பவளோ ஆடுமகள். கயிற்றின் மேல் இவ்வம்மை நடக்கும்போது, அந்தப் பாடு கண்டு கயிறு கட்டப்பட்டிருந்த கழை இரங்கல் ஒலி செய்ததாம். நடைக்கு மெருகூட்ட, காண்பவர் செவி நிறைக்கப் பல்லியங்கள் கூட்டிசை தந்தனவாம். கயிற்றில் நடப்பது மட்டும் கழைக்கூத்து அல்ல என்பதைப் படிப்பார்க்குத் தெரிவிக்கவே, நடந்த பெண்ணை 'ஆடுமகள்' என்று பொருள் பொதிய அறிமுகப்படுத்துகிறார் புலவர்.

## குழந்தைப் பலி?

பலிக்கடன் செலுத்துதல் என்பது பண்டு தொட்டு இருந்துவரும் பழக்கமாகும். மறவர்கள் செலுத்திய பலிக்கடன்கள் பற்றிப் பாடல்களும் கல்வெட்டுகளும் பலபடப் பேசுகின்றன. பலிக் கடனாக ஊனும் குருதியும் உயிரழித்துச் செலுத்தப்பட்டமைக்குப் பல சான்றுகள் தமிழிலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. ஆனால் குழந்தைப்பலி பற்றி இதுநாள்வரையில் கேள்வியுற்ற தில்லை. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் நற்றிணைப் பாடலொன்றிற்கு (15) உரையெழுதுமிடத்துக் 'குற்றமற்ற கற்பினையுடைய மடவாள் ஒருத்தி தன் குழவியைப் பலி கொடுப்ப வாங்குதலும் அவள் அதனைக் கைவிட்டாற் போல' என்று பாடலில் வரும் குழந்தையிழப்பு பற்றிய வரிகளுக்கு விளக்கம் தந்துள்ளார். பொருளுரைப் பகுதியில் பாட வேறுபாடு கூறி, தாயிடமிருந்து குழந்தையைப் பேய் பறித்ததாகவும் கொள்ளலாம் என்கிறார். இவ்விளக்கங்களின் உண்மைத்தன்மை குறித்துத் தமிழ்ப் பேராசிரியர்களின் கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

# 1. புதிய கல்வெட்டுகள்

## 1. தென்காசி விசுவநாத சுவாமி கோயில் தேர்ப்பொறிப்புகள்

*எஸ். இராமச்சந்திரன்*

### *முதற் கல்வெட்டு*

***இடம்:*** நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியிலுள்ள விசுவநாத சுவாமி கோயிலின் முன்னர் (உலகம்மன் திருமுன்னுக்கு நேர் முன்புறம்) நிறுத்தப்பட்டுள்ள தேரின் சக்கர அச்சுகளுக்கு இடையே உள்ள 'பார்'(Bar) பகுதியில் இப்பொறிப்பு உள்ளது.

***செய்தி:*** திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஜான் பறலாண்டு பலிஷ்டோன் உத்தரவுப்படி, தென்காசி வட்டாட்சியர் சுவாமிநாத பிள்ளை தேர் செய்வித்து வெள்ளோட்டம் ஓட்டிப் பார்த்தார்.

***காலம்:*** கொல்லம் 996 (கி.பி. 1821).

1 திருநெல்வேலி சீற்மைக்கிக் கலட்டராகி
2 ய மகாராஜா மெஸ்தர்[1] ஜான் பறலாண்டு
3 பலிஷ்டோன் துரையவர்கள் உத்தரவுபடி
4 தென்காசி தாலுகா தாசில் சுவாமினா
5 த பிள்ளையவற்கள் தேற்முகித்து[2] 996 ௵
6 வைய்யாசி ௴ 23 உ நாயத்து கிளமை பு
7 னர்பூசம் நக்ஷ[த்தி*]ரத்தில் வெள்ளோட்டம் ஓட்டி
8 [பார்த்]தார்கள்

---

1 மிஸ்டர், மகாராஜா ஆகிய அடைமொழிகள் கோயில் நிர்வாகம் உள்நாட்டு அரசர்கள் கையிலிருந்து ஆங்கிலேயர் வசம் மாறிவிட்டமையை உணர்த்தும். கி.பி. 1820இல் சர். தாமஸ் மன்றோவின் நிலவருவாய் நிர்வாகச் சீரமைப்பு முறைப்படி கோயில் நிலங்கள், சொத்துகள் ஆகியன கணக்கெடுக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டன.

2 முடித்து என்பதன் நெல்லை மாவட்ட உச்சரிப்பு.

### இரண்டாம் கல்வெட்டு

***இடம்:*** தேர் வடம் கட்டும் வளையம்.

***செய்தி:*** சங்கர நாராயண சுவாமிகள் உபயம்.

***காலம்:*** கி.பி. 1834 ஆகலாம்.

1 விசைய வரு தைய் மீ 5 நல்ல

2 நாள் திரு சுவாமிகள் சங்கர

3 நாராயண[ன்*] உலகம்மனுக்கு

4 உபயம்

---

## 2. கொல்லன்பொற்றைக் கல்வெட்டு

*எஸ். இராமச்சந்திரன்*

***இடம்:*** நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், குத்துக்கல்வலசை என்ற ஊருக்கு அருகில் கொல்லன்பொற்றை என்ற பாறை உள்ளது. மைனர் நாடார் தோப்பு என வழங்கப்படும் இப்பகுதியில், தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் கசிவு நீர்க் குட்டைக்கு அருகில், பாறையில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

***செய்தி:*** பெரிய நாச்சியார்க்குப் பூஞ்சேரிப் பற்றில் கொள்ளப்பட்ட தேவதான நிலம் பற்றிய குறிப்பு உள்ளது. வைகுந்த வளநாடும் கருமாணிக்கத்தாழ்வாரும் பொருந்தும்விதம் எண்ணி மகிழ்தற்குரியது. கல்வெட்டின் பிற்பகுதி பெரிதும் சிதைந்திருப்பதால் முழுமையான செய்தியை அறியக்கூடவில்லை.

***காலம்:*** கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு . . . . . மாசி மாதம் நாள் 5

2 திருக்குற்றாலத்து மாசபை ஸ்ரீவயிகுந்த வளநாட்டுப் பெரும் பழஞ்சிக்குடி நாயனார் கருமாணிக்கத்தாழ்வார் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார்

3 கோயில் திருக்காமக்கோட்டத்துப் பெரிய நாச்சியார்க்கு தேவதானமாக பூஞ்சேரி பற்றில் கொண்டிட்ட . . . . . .

4 திருச்சூலக்கல் . . . . . கட விட்ட நன்செய் . . . . ண்டு சேரவும் — —

5 — — இக்கடமை ஆகக்கொள்ளக் கடவதாக — — களக்குடியார் — —

---

## 3. முரம்பன் கல்வெட்டுகள்

*எஸ். இராமச்சந்திரன்*

***இடம்:*** வ.உ.சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில் அமைந்துள்ளது முரம்பன். ஊரின் மேற்கு எல்லையில், தருமதாய ஊருணிக் (குடிநீர்க் கண்மாய்) கரையில், ஆ தீண்டு குற்றிக்கல் தூண்கள் நான்கு உள்ளன. இவற்றை இப்பகுதி மக்கள் மந்தைக்கல் என்றும் ஆனை கட்டும் கல் என்றும் கூறுகின்றனர். இவற்றைப் போன்ற மற்றொரு கல்தூண், வேங்கடாசலப் பெருமாள் கோயிலுக்கு முன்னர், சாலையோரத்தில் உள்ளது. இக்கல்தூண்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

***செய்தி:*** தூண்களை நிறுவியவர்களின் பெயர்கள் தெரிய வருகின்றன.

***காலம்:*** கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டாகலாம்.

### *முதற் கல்வெட்டு*

1 ஸ்வஸ்திஸ்ரீ முரம்
2 பன்னூற்
3 கு மூத்த அை
4 டவு அரை
5 சுதிகையன்
6 உத்தம பாண்டி
7 ய மூவேந்த வேள
8 ரர்

### *இரண்டாம் கல்வெட்டு*

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 நு[1]ரம்பனூ
3 ர்ருக்கு நால
4 ரம் அடைவு பி
5 டாரன் நம்பன்
6 னான சோழகுல
7 சுந்தர மூவேந்த
8 வேளார் தன்ம[ம்*]

---

1 'மு' என்று கொள்ளவும்.

### மூன்றாம் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 . ரம்பனூ .
3 . . த அடை
4 . . தென் . .

### நான்காம் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ இ
2 த்தம்ம[ம்*] அர
3 ங்கன் சோ
4 ளன்

### ஐந்தாம் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ முரம்பனூர்
2 ருக்கு மூன்றாம் அடை
3 வு குணவன் மாணிக்க
4 னான செயங்கொண்
5 ட பாண்டிய மூவே
6 ந்த வேளார் தன்ம[ம்*]

### ஆறாம் கல்வெட்டு

**இடம்:** முரம்பனுக்கு மேற்கில், 'நாயக்கர் மடம்' என வழங்கப்படும் கருங்கல் கட்டடம் ஒன்று உள்ளது. இக்கட்டடம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இக்கட்டடத் திற்குச் சற்று மேற்கே, முறம்பன் என எழுதப்பட்டுள்ள பெயர்ப் பலகைக்கு எதிரில், சாலையின் கீழ்ப்புறம் உள்ள தனிக்கல்லில் இக்கல்வெட்டு உள்ளது.

**செய்தி:** நாயக்கர் மடத்துக்கு விடப்பட்ட நிலவிவரம் கூறுகிறது.

***காலம்:*** கி.பி. 1669.

1 844 ஹூ மா
2 சி ஸ்ரீ 5 முரம்பன்
3 மடத்துக்கு விட்ட நி
4 லமாவது பண்ணை
5 க் குளத்துக்குள் வா
6 யில் 8 கலம் மரக்கா
7 ல் விரைப்பாடும்
8 வெரெட்டி கண்ணா
9 ற்றில் . . . வுமிதுக்கு
10 . . . . யிந்தப்படி
11 யே [கை*]யாடிக் கொள்
12 வாராகவு மிதுக்
13 கு குத்தம் சொன்
14 ன பேர் கங்கை க
15 ரையிலே காராம் பசு
16 வைக் கொன்ற தோ
17 ஷத்தில் போக க
18 டவாராகவு மிந்த த
19 ர்மத்தை பரிபாலன
20 ம் பண்ணின பேர்
21 . . . . . . ப் பதவி
22 யடைவாராக
23 வும் உ

# 4. திருவிசலூர்க் கல்வெட்டுகள்[1]

அர. அகிலா, இரா. லலிதாம்பாள்

கும்பகோணத்திலிருந்து பூம்புகார் செல்லும் கிளைச் சாலையில் எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருவிசலூர் என்னும் திருவிசநல்லூர். இவ்வூரிலுள்ள சிவயோகநாதசாமி கோயில் திருச்சுற்றுமாளிகையின் தென்புறத்தே சிறையுண்டு கிடக்கும் பிச்சதேவர் கோயில், படியெடுக்கப்படாத கல்வெட்டுகளின் பண்டாரமாய்க் காட்சியளிக்கிறது. இங்கிருந்து படியெடுக்கப்பட்ட ஐந்து கல்வெட்டுகள் வரலாறு மூன்றாம் இதழில் இடம்பெற்றன. இவ்விதழில் ஏழு கல்வெட்டுகள் பதிப்பிக்கப்படுகின்றன. இக்கல்வெட்டுகளைப் படி யெடுக்கப் பல்லாற்றானும் உதவிய கோயில் மணியம், சிவாச்சாரியார் ஆகியோர் நன்றிக்குரிய பெருமக்களாவர்.

## முதற்கல்வெட்டு

***இடம்:*** பிச்சதேவர் கோயிலின் மேற்குச் சுவர்.

***செய்தி:*** கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. திருவிசலூர்க் கோயில் இறைவனுக்குத் திங்கள் சங்கராந்திதோறும் நூற்றெட்டுக் குடம் கொண்டு முழுக்காட்டு நிகழ்த்த பரகேசரிவர்மரான கண்டராதித்தன் மதுராந்தகன் இக்கோயில் இறைவன் பெயரால் விலைக்குப்பெற்ற நிலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கீழ்முழையூர், திருவிசலூர் ஆகிய ஊர்களில் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன.

***காலம்:*** உத்தமசோழரின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 971.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மி[ர்க்*] கி யாண்டு 2 வதின் எதிர் ஆம்

2 மாண்டு வடகரை தேவதான ப்$_3$ரஹ்மதே$_3$யம் அவனி நாராயணச் சதுர்வேதி$_3$ ம

3 ங்கலத்து திருவிசல்லூர் மஹாதே$_3$வற்க்கு இக்கோப்பரகேஸரி பந்மரான ஸ்ரீகண்

4 டராதித்தன் மது$_4$ராந்தகன் சந்திராதித்தவல்த் திங்கள் ஸங்க$_3$ராந்தி$_4$தோறும் நூற்றெட்டு கல

---

1 மருத்துவர் திரு. இரா. குணசேகரன் அறக்கட்டளை உதவியுடன் இவ்வாய்விற்கான களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

5 சம் ஸ்நபனமாட்டுவதற்கு காசுகள் வரக்காட்டி இதே₃வர் பேராலேய் விலை கொண்ட நிலம்

6 இவ்வூர் வங்கிப்பூறத்து ஸிகதைய திருவரங்கதே₃வ ப₄ட்ட நிடையும் மக்கள்ளிடையு

7 ம் ஆகக் கொண்ட நிலம் கீழ்முழையூர் எழுமாவரையும் குஞ்சிப [விபல] நாராயண ப₄

8 ட்டன்னிடை விலை கொண்டது திருவிசல்லூரின் வடபக்கத்து அரைய்க்கால்லும் மாவண்டூ

9 ர் அத்தோண க்ரேமவித்தன்னும் தம்பிய்மாரும் இடைய் விலை கொண்டது இத்திருவிசல்லூ

10 ரின் வடபக்கத்து கால் செய்யும் வங்கிய்ப்புறத்து திரு[வரங்க] தே₃வசன்மன்னிடை வி

11 லைய் கொண்டது இய்ஸ்ரீரிகோயிலின் தென்பக்கத்து அரைய்க்கால்லும் இருங்கண்டி ப₄ட்ட நம்பி ப₄

12 ட்டனிடை விலைகொண்டது திருவிசல்லூரின் வடபக்கத்து மாகாணியும் வேல்வெட்டிய் திருவிசல்லூர் அ

13 டியன் ப₄ட்டன்னிடை விலைகொண்டது இத்திருவிசல்லூரின் வடபக்கத்து அரைய்க்கால்லும்

## *இரண்டாம் கல்வெட்டு*

**இடம்:** மேலது.

***செய்தி:*** திருவிசலூர்க் கோயிலுக்கு இடையரிநல்லூர் சார்ந்த ஏமநல்லூர் வாய்க்காலின் கரையிலிருந்த நிலத்தைப் பராந்தகன் பிரம்மமாராயர் மகன் தந்தார். கோயிலாரிடம் முப்பது காசுகள் பெற்று இடையரிநல்லூர் சபையார் இந்நிலத்திற்கான இறை, எச்சோறு வரிகளை நீக்கம் செய்தனர்.

***காலம்:*** கண்டராதித்தர் அல்லது சுந்தரசோழராகலாம்; கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிபன்ம[ற்*]க்கு யாண்டு 5 ஆவது வடகரை தே

2 வதான பிரமதேயம் இடையரிநல்லூர் ஸபை₄யோம் இக்கரை தேவ

3 தா₃ன ப்ராமதேயம் அவனிநாராயண சது[ப்*]பேதிமங்கல[த்*]து திருவிசலூர் பெ

4 ருமான்நடிகள் மூலப்ரரிதிய் ச$_0$ண்டேச்$_0$வரரு ப்ரராான்தகன் ப்ராம்மாராயர் ம

5 கன் எங்கள்ளூர் ஏமநல்லூர் வாய்க்காலின் இகரை குடுத்த நிலம் பழ[ம்*]படியதும்

6 தேவரிடை 30 இகாசு கொண்டு இநிலம் சந்த்ராதித்தவலம் எப்பேர்ப்பட்ட

7 இறையும் எச்சோறும் இறுத்துக் குடுத்து அதே$_3$யம் ஊட்டக் கடவோமாக இ

8 ப்பரிசு அதே$_3$யம் செய்து குடுத்தோம் திருவிசலூர் பெருமாளுக்கு இடைய

9 *ரிநல்லூர் ஸபை$_4$யோம்*

## *மூன்றாம் கல்வெட்டு*

***இடம்:*** பிச்சதேவர் கோயிலின் தெற்குச் சுவர்.

***செய்தி:*** அவனிநாராயண சதுர்வேதிமங்கலம் தேவதான பிரமதேயமாகக் குறிக்கப்படுகிறது. திருவிசலூர்ப் பெருமான் கோயிலில் மூத்த குஞ்சரமல்லர் எடுப்பித்த திருப்பள்ளிக்கட்டில் மண்டபத்து நம்பிராட்டியார்க்குச் சாமநாயகன் அரையன் கூத்தனான வீரதுங்கப் பல்லவரையன் நந்தாவிளக்கொன்று எரிக்க முப்பது காசு கொடையளித்தார்.

***காலம்:*** கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜ[கேசரி]பன்மர்க்கு யாண்டு 2 ஆவது வடகரைத்

2 தேவதான ப்$_3$ரஹ்மதே$_3$யம் அவனிநாராயணச் சருப்பேதி மங்கலத்து

3 த் திருவிசலூர்ப் பெருமாள் இகோயிலில் மூத்த குஞ்சரமல்லர் எடு

4 ப்பித்த திருப்பள்ளிக்கட்டில் மண்டபத்து நம்பிராட்டியார்க்கு இப்படை மற

5 சாமநாயகன் பனையூர் ப$_4$ட்டன் வடகுடி வடகுடான் அரையங்கூத்தனான வீரதுங்

6 கப் பல்லவரையன் சந்திராதித்தவல் எரிவதாக வைத்த திருநொந்தாவிள

7 [க்கு ஒன்]றினுக்கு வைத்த காசு 30 முப்பதினாலும் வந்த பலிசை நி

8 [ச]தம் உழக்கு . . . . . . யத்து இது பன்மாஹேச்$_0$வர

9 ரக்ஷை

## நான்காம் கல்வெட்டு

***இடம்:*** மேலது.

***செய்தி:*** மூத்த குஞ்சரமல்லர் எடுப்பித்த திருப்பள்ளிக்கட்டில் மண்டபத்து நம்பிராட்டியார்க்குத் திருநொந்தாவிளக்கொன்று எரிப்ப தற்காக வள்ளுவன் உடையார் மூத்த கைக்கோள பரிவாரத்துத் தென்கரைப்புறத்து காமவை நாட்டுப் புலையூர்வாழ்க்கைப்[1] புலை யூருடையான் நாகிரியன் காடனான அயதிகோதுப் பல்லவரையன் முப்பது காசு தந்தார்.

***காலம்:*** கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜ — — க்கு யாண்டு 2 ஆவது வடகரை தேவ[த$_3$ான ப்$_3$ரஹ்ம]

2 தேய அவனிநாராய[ண சது]ர்வ்வேதி$_3$மங்கலத்துத் திருவிசலூர்ப் பெருமாள் ஸ்ரீகோயிலி

3 ல் மூத்த குஞ்சரமல்லர் எடுப்பித்த திருப்பள்ளிக்கட்டில் மண்டபத்து நம்பிராட்டியார்

4 க்கு இப்படைப் படை வள்ளுவன் உடையார் மூத்த கைக்கோள பரிவாரத்துத் தென்கரைப்பு

5 றத்து காமவை நாட்டுப் புலையூர்வாட்கைப் புலையூருடையான் நாகிரியன் காடனான அய

6 திகோதுப் பல்லவரையன் சந்திராதித்[த*]வல் எரிவதாக வைத்த திருநொந்தாவி

7 ளக்கு 1 ஒன்றினுக்கு வைத்த காசு 30 முப்பதினாலும் வந்த பலிசை நிசதம் உழக்கு

8 நெய்யாக எரிவதாமத்து இது பன்மாஹேச்$_0$வர ரக்ஷை

## ஐந்தாம் கல்வெட்டு

***இடம்:*** மேலது.

---

1 காவூக் கல்வெட்டில் வரும் பனையூர்வாழ்க்கை இங்கு நினைக்கத்தக்கது.

# 9

***செய்தி:*** பழையாற்று அரண்மனையில் தம் அன்னை செம்பியன் மாதேவியின் இருப்பிடத்துக்கு முன்னுள்ள கூடத்தில் அரசர் உத்தமசோழர் இருந்தபோது அரசரின் செயலர் பரித்திக்குடையான் கோதுகுலவன் சாந்தனான பரகேசரி மூவேந்த வேளான் வைத்த வேண்டுகோளையேற்று அரசர் வேம்பற்றூர் சபையார்க்குப் பிறப்பித்த நேரடி ஆணை.

இம்மன்னரின் நலத்திற்காக இவரது மூன்றாம் ஆட்சியாண்டு முதல் திருவிசலூர்த்தேவர்க்கு சங்கராந்தி தோறும் நூற்றெட்டுக் கலசநீர் கொண்டு முழுக்காட்டு செய்யவும் நாள்தோறும் நானாழி அரிசியால் போனக அமுது படைக்கவும் வாய்ப்பாக மன்னரின் அன்னையார் வேம்பற்றூரில் நிலம் விலைக்குப்பெற்றுக் கோயிலுக்குக் கொடையளித்துள்ளார். இந்நில வருவாயோடு கூடுதலாக நாற்பத்தேழு கழஞ்சரைப் பொன்னும் வேளான் வேண்டுகோள்படி ஒதுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்பொன் வேம்பற்றூரிலிருந்து முதலாய் வந்த நேர்வாயத்தில் குறைத்துக்கொள்ளப்பட்டுச் சரிசெய்யப்பட்டது.

ஓலையெழுதிய சேவகன், ஓலைநாயகன், புரவுவரி போன்ற அரசு அலுவலர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. கல்வெட்டு முற்றுப் பெற்றிருந்தால் மேலும் பல அலுவலர்களை அடையாளம் கண்டிருக்கலாம்.

***காலம்:*** உத்தமசோழரின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 975.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோநேர்இன்மைகொண்டான் மண்ணரி நாட்டு ப்$_3$ரஹ்மதே$_3$யம் தனியூர் வேம்பற்றூர் ஸபை$_4$யார்க்கு தங்களூர் முதலாய் வருகின்ற நேர்

2 வாய் செம்பொன் மூவாயிரத்துத் தொளாயிரத்துப் பதின்கழஞ்சே முக்காலேய் மூன்று மஞ்சாடியிலும் நமக்கு யாண்டு 6 ஆவது நானூற்றெண்

3 பத்தைஞ்சினால் பழையாற்று நம் வீட்டினுள்ளால் நம்மாச்சிய் கோயிலின் முன்பிற் கூடத்து நாம்மிருக்க நங்கருமமாராய்கின்ற பரித்திக்குடையான் கோது

4 குலவன் சாந்தனான பரகேசரி மூவேந்த வேளான் வேம்பற்றூர்த் திருவிசலூர்த் தேவர்க்கு ஸங்கிராந்தி தோறு[ம்*] நூற்றெட்டுக் கலசம் நமனமாடியருளவும் நிசத

5 ம் அத்$_3$த$_4$யாம நானாழி வாசியாற் போனகம் அமுர்து செய்தருளவும் நமக்காக நம்மாச்சிய் வேம்பற்றூரிலேய் நான்கேய் முக்காலேய் நிலம் வி

6 லைக்காகக் கொண்டு நமக்கு யாண்டு மூன்றாவது முதல் நமனமாடியருளுவித்து அமுது செய்வித்து வாரா நி

7 ன்றது இந்நிலம் நான்கேய் முக்காலும் இவ்வேம்பற்றூர் முன் முதலாய் வருகின்ற நேர்வாயத்தில்

8 நாற்பத்தேழு கழஞ்சரை பொன் யாண்டு ஆறாவது முதல் சுருக்கி வேண்டுமென்று நமக்குச் சொல்ல

9 வேம்பற்றூர்த் திருவிசலூர்த் தேவர் ஸங்கிராந்தி தோறும் நூற்றெட்டு கலசம் நமனமாடியருளவும் நிச

10 — — னாழியரிசியின் போநகம் — — செய்தருளவும் — — வேம்பற்றூர் [வி]லைக்கு

11 க் கொண்ட நிலம் நான்[கேய்] முக்காலும் இவ்வேம்பற்றூர் முன் முதலாய் வருகின்ற நேர்வாயத்தில் நா[ற்*]பத்தேழு கழஞ்

12 சரைய் பொன் யாண்டு ஆறாவது முத[ல்*] சுருக்கிய்க் கொள்கவென்று நாஞ்சொல்ல நம்மோலை யெழுதுஞ் சேவகன் அரு

13 ளன் னுத்தமனிதி யெழுத்தினாலு நம்மோல்லைய் நாயகன் வேளான் கண்டராதித்தனான மீனவன் மூவேந்த

14 வேளானும் வேளானண்ணானும் மொப்பிட்டுப் புக்கநத் தீட்டின் படியேய் வரியிலிட்டுக் கொள்[க*]வென்று

15 நாம் சொல்ல நங்கரும மாராயும் பரித்திக்குடையான் கோது குலவன் சாத்தனான பரகேசரி மூவேந்த வே

16 ளானும் சிற்றிங்கணுடையான் கோயிமையிலையான் மதுராந்தக மூவேந்த வேளானும் ஆணத்தியால் புரவு

17 வரியப் பெண்வத்தி கிழவன் [அ]டிகநக்கனும் கிரைகள் ளூருடையான் அரையன் கற்பகமான வீராபரண மூவேந்த வேளானும்

18 அனத்தூருடையான் பல்லவன் மாதேவனான இராசசூளாமணி மூவேந்த வேளானும் பேரரைசூருடையான் ஆரூர் உதைய தி

19 வாகரனும் கொம்புருவி [ஆ]ன சேந்தகறாடியும் வரிபொத்த[1]

**ஆறாம் கல்வெட்டு**

***இடம்:*** *பிச்சதேவர் கோயிலின் வடபுறச் சுவர்.*

---

1 கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

***செய்தி:*** மந்திரங்கள் அறிந்த ஐந்து பிராமணர் உண்பதற்கு வாய்ப்பாக இராசராசர் தேவியார் தந்தி காமக்கோடியார் நூறு ஈழக்காசு தந்தார். அதை முதலாகக் கொண்டு அதன் வட்டி பதினைந்து காசு கொண்டு இருவர் இவ்வறம் நிறைவேற்றினர். இக்கல்வெட்டின் வழி இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராத முதலாம் இராசராசரின் மனைவி தந்தி காமக்கோடியின் பெயர் கிடைத்துள்ளது.

**காலம்:** முதலாம் இராசராசர் (கி.பி.985—1014).

1 ஸ்வஸ்திஸ்ரீ — — இயாட்டை மகர

2 நாயற்று சனிக்கிழமை — — யுமான பூர்வ யோக₃த்தில்

3 வடகரை தேவதான ப்₃ரஹ்ம — — சதுர்வ்வேதி₃மங்க₃லத்து ப்₃ரஹ்மண

4 ர்க்கு உண்பதற்கு திரும — — கோயிலிலே ராஜராஜர் தே₃வியார்

5 தந்தி காமக்கோடிய் — — ருண்பதற்கு வாசிப்படாதன நெல்லு

6 நெல்லுக்கும் பொன்னு — — காசு நூறு ஈழக்காசு பலிசைக்கு கா

7 சின்வாய்த் திங்கள் — — க்காசு பலிசையாய் நூறுக்கு திங்க

8 ளொன்றே — — க்கு வந்த பலிசைக் காசு பதினைஞ்சா

9 க காசொன் — —

10 — — கூட மந்த்ர மறிவார்[கள்] பேர் ஐவர்

11 ப்₃ரஹ்மணர்க்கு ஐப்பிகைத் திங்க ளுத்திராடத்தி நாள் மெய்க்காட்டி மெய்க்காட்டினார்க்கு நிசதம் பேரால்

12 குறுணி நெல்லாக வந்த நெல் முப்பதின் கலமுங் குடுப்பதாகவு மிவர்களு மிருவர் கந்மிக

13 ளுமேய் சந்த்₃ராதி₃[த்*]தவத் இப்பலிசை தண்டி இத₄ர்ம்மம் மிவர்களே ரக்ஷிக்க கடவர்களாகவு மிக்காசு

---

## 5. அய்யன் குளக்கரை மராத்திக் கல்வெட்டு

*எஸ். இராமச்சந்திரன்*

***இடம்:*** தஞ்சாவூர் அரண்மனை வளாகம் மேல வீதியில் அய்யன் குளம் என வழங்கப்படும் குளம் உள்ளது. தஞ்சாவூர் நாயக்க அரசில் அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதரய்யனால் இக்குளம் குடிநீர்க் குளமாக வெட்டுவிக்கப்பட்டது. சிவகங்கைக் குளத்திலிருந்து இக்குளத்திற்கு நீர் வந்து சேரும் வண்ணம் குழாய்கள் அமைக்கப்

பட்டன. இக்குளத்தின் படிக்கட்டுக் கட்டுமானத்தில் நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்ட மராத்திக் கல்வெட்டுள்ள கல்லொன்று வைத்துக் கட்டப்பட்டிருந்தது.[1] மக்களின் காலடிபட்டும் துணி துவைத்தல் போன்ற காரணங்களாலும் இக்கல்வெட்டு தேய்ந்து வந்ததால் கல் அங்கிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுத் தஞ்சாவூர் மராட்டியர் அரண்மனை அகழ்வைப்பகத்தில் சேர்க்கப்பட்டது.

***செய்தி:*** இக்கல்வெட்டு பிரமோதூத ஆண்டு ஐப்பசி (அல்லது தமிழக மரபுப்படி புரட்டாசி) பூர்ணிமை தினத்தன்று பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டிலிருந்து தஞ்சாவூர் அரசர் பிரதாப சிம்மனுடைய அமைச்சர் மானோஜி ராமராவ் மற்றும் கோட்டை அதிகாரி மல்லார்சி காடோராவ் ஆகியோருடைய ஆணையின்படி, சலவைத் தொழிலாளர்களுக்குத் தஞ்சாவூர்க் களஞ்சியத்தை யொட்டியுள்ள அணிவகுப்பு மைதானத்திற்கு அருகிலுள்ள குளத்தில் துணி துவைக்கும் உரிமையளிக்கப்பட்ட தகவல் கிடைக்கிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் குளம், அய்யன் குளம் அன்று. அய்யன் குளத்துக்கு அருகில் தற்போது கல்யாணசுந்தரம் மேனிலைப் பள்ளியின் விளையாட்டுத்திடலாகப் பயன்படுத்தப்படும் அரங்கம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் காவல் துறையினரின் அணிவகுப்பு மைதானமாகப் பயன்பட்டது என்பதும் காவல் துறையினர்க்குரிய மருத்துவ நிலையமும் மழைநீர்க் குளம் ஒன்றும் இவ்வரங்கில் இருந்தன என்பதும் தஞ்சை நகராட்சி வரைபடம் ஒன்றினால் தெரிய வருகின்றன. இக்குளமும் மருத்துவ நிலையமும் தற்போது இல்லை. இக்குளம் தூர்க்கப்பட்டபோது இக்குளக்கரையிலிருந்த கல்வெட்டு இடம் மாறி, அய்யன் குளக்கரைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். அய்யன் குளம் அண்மைக்காலம் வரை குடிநீர்க் குளமாகவே இருந்து வந்தது. சலவைத் தொழிலாளர்களுக்கான இக்கல்வெட்டு கி.பி.1750ஆம் ஆண்டு மழைக்காலத்தில் பொறிக்கப்பட்டிருப்பது, நம் கருத்துக்கு வலிவூட்டுகிறது.[2]

---

1 இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர் திரு. தில்லை கோவிந்தராசன். இதைப் படிக்க உதவியவர் சரசுவதி மகால் மராத்தி மொழிப் பண்டிதர் திரு. பீமராவ்.

2 கல்வெட்டின் பாடம் நாகரியில் இருப்பதால் தர இயலவில்லை.

# 2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

## கீழப்பழுவூர்க் கல்வெட்டு[1]

கீழப்பழுவூர்த் திருவாலந்துறையார்த் திருக்கோயிலில் இருந்து 1926இல் சில கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பரகேசரிவர்மரின் கல்வெட்டுகள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி பத்தொன்பதில் வெளியிடப்பட்டுள்ளன. இத்தொகுதியில் 238ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டின் பாடம் நாற்பத்துநான்கு வரிகளுடன் நிற்கிறது. கல்வெட்டின் எஞ்சிய பகுதி கட்டடத்திற்குள் சிக்கியிருப்பதாகக் குறிப்பு காட்டப்பட்டுள்ளது. கள ஆய்வின்போது இப்பகுதியை மையக் கல்வெட்டாய்வாளர்கள் கண்டறிந்து படியெடுத்தனர். விட்டுப்போன தொடர்ச்சியான இப்பகுதி பத்து வரிகள் கொண்டுள்ளது. தொகுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ள 44 வரிகளில், $O_a$ என்று எண்ணிடப்பட்டிருக்கும் வரி கல்வெட்டில் தனி வரியாக அமைந்திருந்தும் அவ்வரிக்குத் தனி எண் தராமல் $O_a$ என்று எண்ணிட்டுள்ளனர். இதனால் பதிப்பில் இருக்கும் 44 வரிகளை 45 வரிகளாகக் கொள்ள வேண்டும்.

### *பதிப்பிக்கப்பட்டிருக்கும் 1–44 (45) வரிகள்*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி

2 பன்மற்கு யாண்டு 9 ஆ

3 வது சிறுபழுவூர் திருவால

4 ந்துறை மஹாதேவர்க்கு பழுவே

5 வட்டரையர் மறவன் கண்டநார்

6 விலைக்கு கொண்டு குடுத்த செ

7 ம்புதற்குடியான திருவாலந்து

8 றைநல்லூர் நிவந்தம் செய்

9 தபடியாவது பழுவூர் வேட்

10 க்கோவன் பசுவதி நகரத்தா

11[2] னான கருவிடை பெருங்குசவ

---

1 இப்பகுதிக்கான ஆய்வுப்பணி திருமிகு. ரா. பஞ்சாபகேசன் அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

2 கல்வெட்டுத் தொகுதியில் இந்த வரி $O_a$ என்று எண்ணிடப்படுள்ளது.

12 னுக்கும் வூரானாச்சனுக்கும்
13 முண்டன் நகரத்தானுக்கும்
14 நீலன் கல்லறைக்கும்
15 நிசதம் மூன்று குடுவை
16 யும் நிசதம் மூன்று சட்டி
17 யும் மற்று
18 ம் வேண்டும்
19 கலமும் இட
20 க் குடுத்த ப
21 ங்கொன்று
22 ம் ஆராதி
23 னை செயும்
24 பிராமணா
25 னுக்குப் பங்கு
26 1 றும் ந
27 ந்தவான
28 மிறைப்
29 பார் இருவ
30 ர்க்கு பங்கு
31 நாலும்
32 காளம் இர
33 ண்டினுக்கு
34 பங்கிரண்
35 டும் மறவ
36 ன்னீச்சுவர
37 த்து தேவர்[க்*]கு
38 நொந்தா
39 விளக்கு எ
40 ரிக்க பங்கு
41 இரண்டு திரு
42 மெழுக்கு ப
43 ங்கு ஒன்று
44 திருப்பள்
45 ளித்தாம

***புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி 46–55 வரிகள்***

46 ம் இருவர்
47 திருப்பதியம்
48 பாடுவார்க்கு பங்
49 கு 4 னாலு புறம்ப
50 டி திருமுற்றம் திருவல
51 கு இட்டு நீர்தெளிக்க பங்கு1
52 ம் பங்கொன்று கணா
53 க்கப் பங்கொன்று ஸ்ரீ
54 கார்ய்யமாரா[ய்*]வானுக்கு
55 ப் பங்கொன்று

# 3. பதிப்பிக்கப்படாத பாடங்கள்[1]

தமிழகத்துத் திருக்கோயில்களிலும் மலைப்பகுதிகளிலும் ஊர் சார்ந்த இடங்களிலும் நம் வரலாற்றைச் சுமந்து நிற்கும் கல்வெட்டுகள் எண்ணற்ற அளவில் காணப்படுகின்றன. இவற்றின் பெரும்பகுதியை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப்பிரிவு தன்னுடைய நூறாண்டுக் கால கடும் உழைப்பால் படியெடுத்துள்ளது. 1887இல் வெளியிடப்பட்ட முதல் கல்வெட்டறிக்கையைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஓர் அறிக்கையென 1984ஆம் ஆண்டுவரை கல்வெட்டு ஆண்டறிக்கைகளை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இவ்வறிக் கைகள் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் சுருக்கங்களை மட்டுமே தருகின்றன. இச்சுருக்கங்கள் கவனத்துடன் கையாள்பவர்களுக்கு வழி காட்ட உதவுமென்றாலும் முழுமையான ஆய்வுகளுக்குப் போதுமான வையாக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

படியெடுக்கப்பட்ட இக்கல்வெட்டுகளுள் ஒரு பகுதியைக் கல்வெட்டுப்பிரிவு முழுமையான பாடங்களுடன் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளாய்ப் பதிப்பித்துள்ளது. 1909ஆம் ஆண்டு வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பாடங்களே இத்தொகுதி களில் அடைக்கலமாகியுள்ளன. 1909ஆம் ஆண்டிற்குப் பிறகு படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இனி எப்போது பாடங்களுடன் பார்வைக்குக் கிடைக்கும் என்பது இன்றைக்கிருக்கும் சூழலில் விடை சொல்லமுடியாத கேள்வியாகும்.

பெருகிவரும் குடமுழுக்குகளாலும் மக்களின் ஆர்வமின்மை யாலும் திருப்பணியாளர்கள் மற்றும் கோயில் பணியாளர்களின் வரலாற்று நோக்கற்ற போக்குகளாலும் இன்றைக்குத் தமிழ்நாட்டில் பரவலாகக் கல்வெட்டுகளை இழந்துவருகிறோம். இந்நிலையில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பாடங்களும் கிடைக்காமல், படிக்கப்போகலாமென்றால் கோயில்களிலும் அவை இல்லாமல் ஆய்வர்கள் படும் துன்பம் அளப்பரியதாகும். இத்துன்பம் தீர்க்கும் முகத் தான் வரலாறு இதழின் ஆசிரியர் குழு, இதுவரை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் பதிப்பிக்கப்பெறாத கல்வெட்டுகளின்

---

1 திருவேங்கடமுடையான் திருவேங்கடப் பட்டத்துராணி அறக்கட்டளை உதவியுடன் இக்கட்டுரைக்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாடங்களைக் கோயில்வாரியாகத் தொகுத்து இயன்றமட்டும் பதிப்பிக்கக் கருதியுள்ளது.

இதுவரை படியெடுக்கப்படாத புதிய கல்வெட்டுகளைத் தொகுக்கவும் வெளியிடவும் இன்று தமிழ்நாட்டில் பலர் முனைந்துள்ள நிலையில், வரலாறு தன் கவனத்தைப் பதிப்பிக்கப்படாத பாடங்களில் திருப்பியுள்ளதை ஆய்வறிஞர்கள் வரவேற்பார்கள் என்றே நம்புகிறோம்.

இப்பகுதியின் முதல் தொகுப்பாய்ப் பெருமுடியீசுவரர் கோயில் கல்வெட்டுகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. இத்திருக்கோயில் இன்று 'பெருங்குடி' என்றழைக்கப்படும் ஊரின் ஒதுக்கத்தில் அமைந்துள்ளது.

## பெருமுடியீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள்

திருச்சிராப்பள்ளி குமார வயலூர் சாலையில் திருச்சிராப்பள்ளி யிலிருந்து ஏறத்தாழ ஐந்தரை கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது சோமரசன்பேட்டை. ஒய்சள மன்னரான வீரசோமேசுவரரின் பெயரில் சோமேசுவரன்பேட்டையாக இருந்த இவ்வூர் நாளடைவில் பெயர் திரிந்து சோமரசன்பேட்டையாய்க் குறைந்துபோயிற்று. சோமரசன்பேட்டையிலிருந்து வயலூருக்குத் தொடரும் சாலையின் தொடக்கத்திலேயே, அதன் வடபுறத்தே குறுகலான ஊரகச் சாலையொன்று பிரிகிறது. இந்தச் சாலையில் ஏறத்தாழ ஒன்றரை கிலோமீட்டர் சென்றால் பெருங்குடியை அடையலாம். பெருங்குடியின் பெருமை பேச இன்று அங்கு எஞ்சியிருப்பது ஒருதளக் கற்றளியாய் அமைந்திருக்கும் சிவன் கோயில் ஒன்றே. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் இத்திருக்கோயில் பாதுகாக்கப்பட்டு வருவதாக, இங்குள்ள வண்ணம் குலைந்து, எழுத்துக்கள் பொரிந்துபோன அறிவிப்புப் பலகையொன்று சொல்கிறது. இந்த அறிவிப்புப் பலகையின் நிலைமையைப் பார்க்கும்போதே கோயில் எவ்வளவு அக்கறையுடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

'திருப்பெருங்குடி பரமேசுவரம்' என்ற தலைப்பிட்டு எழுதப் பட்டிருக்கும் இந்த அறிவிப்புப் பலகை தரும் பல தகவல்கள் தலைப்பு உட்படப் பிழையாக உள்ளன. இக்கோயிலின் பெயர் திருப்பெருங்குடி பரமேசுவரம் அல்ல. இங்குள்ள தொடக்கக் காலக் கல்வெட்டுகளில்

இக்கோயில் 'பெருமுடி பரமேசுவரம்' என்றும் 'திருப்பெருமுடிப் பரமேசுவர ஸ்ரீகோயில்' என்றும்தான் அழைக்கப்பட்டுள்ளது.

அறிவிப்புப் பலகையில் சொல்லப்பட்டிருப்பது போல் இக்கோயில் ஆதித்தகரிகாலரால் கட்டப்படவில்லை. காரணம் அவருடைய தந்தையான சுந்தரசோழரின் இரண்டு கல்வெட்டுகள் இக்கோயிலின் வடசுவரில் காணப்படுகின்றன. ஒன்று அவருடைய எட்டாம் ஆட்சியாண்டிலும் மற்றொன்று பதினான்காம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகள் இரண்டும் இராசகேசரியென்றே மன்னர் பெயரைத் தருகின்றன. இராசகேசரிகளுள் முதலாம் இராசராசரும் அவருக்குப் பிற்பட்டவர்களும் மெய்க்கீர்த்தியுடையவர்கள். முதலாம் இராசராசரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலேயே அவருடைய காந்தளூர்ச்சாலைப் போர்வெற்றி குறிக்கப்படுகிறது. இவ்வெற்றி குறிக்கப்படாத இவருடைய சில இராசகேசரிக் கல்வெட்டுகள் 'ராஜராஜ கேசரிவர்மர்' என்று தொடங்குகின்றன. இவருடைய கல்வெட்டுகள் எட்டாம் ஆட்சியாண்டிலிருந்தே 'திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தியைப் பெற்றுவிடுகின்றன. அதனால் இவ்விதமான சிறப்புத் தொடக்கங்கள் எதுவுமற்ற பெருமுடியீசுவரத்து இராசகேசரிக் கல்வெட்டுகள் இரண்டையும் முதலாம் இராசராசர்க்குக் காலத்தால் முற்பட்டவையாகக் கொள்ளலாம்.

முதலாம் இராசராசர்க்குக் காலத்தால் முற்பட்ட இராசகேசரி வர்மர்களுள் உயரிய ஆட்சியாண்டுடையவர்கள் ஆதித்தசோழரும் சுந்தரசோழருமாவர். இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதி, ஆதித்தசோழர் காலத்திற்குப் பொருந்தாமையின் இவற்றைச் சுந்தரசோழருடையதாகக் கொள்வதே பொருத்தமானதாகும்.

சுந்தரசோழரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்குக் காணப்படுவதால் அதற்கு முன்னரே இத்திருக்கோயில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம்.

முதலாம் இராசராசரின் முதல் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்கிருப்பதாக அதிர்ச்சியூட்டும் தகவலொன்றைத் தருகிறது அறிவிப்புப் பலகை. அப்படி எந்தக் கல்வெட்டும் இத்திருக்கோயில் வளாகத்தில் எங்கும் காணப்படவில்லை. இராசராசதேவரின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று உள்மண்டப வடக்குக் குமுதத்தில் காணப்படுகிறது. இதைத்தான் முதலாம் இராசராசரின் முதலாண்டுக் கல்வெட்டாக அறிவிப்புப் பலகை சுட்டுகிறது போலும்.

'நான்மகன், உமையொரு பாகன், ஆலமர் அண்ணல், சண்டேசுவரர் போன்ற அழகான சிற்பங்கள் தேவகோட்டங்களில் காணப்படுகிறது' என்பது அறிவிப்புப் பலகையின் அடுத்தவரி. இந்தச் செய்தியில்தான் எத்தனைப் பிழைகள்! நான்முகன் நான்மகனாக்கப் பட்டிருக்கிறார். வடசுற்றில் தனித் திருமுன்னிலுள்ள சண்டேசுவரர் தேவகோட்டத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இவையெல்லாவற்றையும் விட முக்கியமானது, இக்கோயிலில் உள்ள தேவகோட்டங்களே மூன்று தான். ஆனால் பலகைச் செய்தி நான்கு கடவுள் வடிவங்களை வரிசைப்படுத்துகிறது.

இந்த அறிவிப்புப் பலகையில் ஆறு தகவல்களே தரப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு பிழையாக உள்ளன. கோயிலைக் காணவருவோர் கோயிலைப் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் இது போன்ற அறிவிப்புப் பலகைகள் அமைக்கப் படுகின்றன. இவை தரும் தகவல்கள் சரியானவையாக இருக்க வேண்டும் என்ற முயற்சியும் அக்கறையும் அமைப்பார்க்கு இருக்க வேண்டுவது எத்தனை இன்றியமையாதது?

சுந்தரசோழர் காலத்துக் கட்டமைப்பாக பெருமுடியீசுவரத்தின் ஒரு தள விமானமும் முகமண்டபமும் அமைந்துள்ளன. பின்னாளில் முகமண்டபத்திற்கு முன்னே ஒரு பெருமண்டபமும் அதற்கு முன் ஒரு சுற்றும் அமைத்திருக்கிறார்கள். சுற்றின் கிழக்குப்பகுதி மண்டபமாய் அமைந்துள்ளது. இதன் வடபுறத்தே அம்மன் கோயிலொன்று ஒருதள விமானமும் முகமண்டபமும் கொண்டு காணப்படுகிறது.

பெருமுடியீசுவரத்து விமானம் உபானத்தில் தொடங்குகின்றது. பாதபந்தத் தாங்குதளத்தின் மீதெழும் சுவரில் நான்முக அரைத்தூண்கள். மேலே உத்திரமும் வாஜனமும் பூதவரி கொண்ட வலபியும் அமையக் கூரையின் முன்னிழுப்பாய்க் கூடுகள் கொண்ட கபோதம். கூரையின் மீது ஆதி தள முடிவைக் காட்டும் பூமிதேசம். அதற்கு உள்ளடங்கி நான்கு மூலைகளிலும் அமர்ந்த நந்திகள். வேசர கிரீவத்தின் வலபியில் அன்னவரி. சில அன்னங்களின் தோகைகள் மிக அழகுபடச் சுருள் சுருளாகக் காட்டப்பட்டுள்ளன. கிரீவத்திற்கு மேல் வேசர சிகரம். தூபியில்லை. கிரீவப்பகுதி கருங்கல்லால் ஆனது. ஆனால் சிகரம் செங்கல் அடுக்காக உள்ளது. கருவறையாய் உள்ள ஆதி தளத்தின் சுவர்க் கோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும் மேற்கில் அம்மையப்பரும் வடபுறம் நான்முகனும் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். அம்மையப்பர் சிற்பம் சிறப்பாக உள்ளது. கோட்டங்களுக்கு மேலுள்ள மகர தோரணங்களுள் தென்புறம் அமர்ந்த நிலையிலொரு வாயிற்காவலரும் வடபுறம் யானைத்திருமகளும் காட்டப்பட்டுள்ளனர்.

கிரீவ சிகரப் பெருநாசிகைகளில் தெற்கில் வீராசன ஆலமர் அண்ணலும் மேற்கில் திருமாலும் வடக்கில் நான்முகனும் கிழக்கில் முருகனும் காட்டப்பட்டுள்ளனர். திருமாலின் சக்கரம் சிற்பத்தின் காலப் பழமைக்குச் சான்றாகிறது.

முகமண்டப வாயிலின் இருபுறமும் பட்டிகைக்கு மேல் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலர்கள். வலப்புறம் இருப்பவர் எச்சரிக்க இடப்புறம் இருப்பவர் வியக்கிறார். கோரைப்பற்கள் கொண்ட இவ்விருவருமே கருவறை நோக்கியுள்ளனர். இடப்புறம் இருப்பவரின் இடச்செவிக் குண்டலத்தில் குறளர் ஒருவரின் ஆடற்கோலம் காட்டப் பட்டுள்ளது. இதுவரை இப்படியொரு குண்டலம் எவ்விடத்தும் பார்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கருவறையுள் பெருமுடியீசுவரராய் இருந்து, பெருங் குடியீசுவரராய் மாறி, அகத்தீசுவரராய் நிலைத்துப்போன இறைவன் லிங்கத் திருமேனியராய் உள்ளார். தடுப்பின்றிப் பொள்ளலாக விளங்கும் கருவறையின் மேற்பகுதி வழி, சிகரத்தின் உச்சிப்பகுதி வரை பார்க்க முடிகிறது. இவ்வுச்சிப்பகுதி மூன்று செங்கற்களால் அடைக்கப்பட்டுள்ளது. இதன் மீதுதான் தூபி அமைந்திருக்கவேண்டும்.

சுற்று மண்டபத்தின் மேற்கில் முருகன், திருமால், பிள்ளையார் ஆகிய தெய்வத்திருமேனிகள் கிழக்குப் பார்வையாக நிறுத்தப் பட்டுள்ளன. அம்மன் திருமுன் அருகே பெருமாள் ஆலிங்கனராகத் திருமகளுடன் அமர்ந்துள்ளார். வடசுற்றில் முகமண்டபத்தருகே உள்ள சிதைந்த திருமுன்னில் வலக்கையில் உயர்த்திய மழுவுடன் மகிழ்வமர்வில் சோழர் காலச் சண்டேசுவரர்.

அம்மன் திருமுன்னில் பின் கைகளில் மலர்கள் கொண்ட பிற்காலத்து நிறுவலாய் அம்மன் திருமேனியொன்று நின்ற கோலத்தில் காணப்படுகிறது.

விமான மற்றும் முகமண்டபச் சுவரிலுள்ள நான்முக அரைத்தூண்களின் மாலைத்தொங்கல்களிலும் இடைக்கட்டுகளிலும் ஆடல் சிற்பங்கள் காணப்படுகின்றன. அரைத்தூணின் வடபுறத்து மாலைத்தொங்கலில் அழகான குடக்கூத்துச் சிற்பமொன்று உள்ளது.

இக்கோயில் கல்வெட்டுகள் அனைத்தும் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையால் படியெடுக்கப்பட்டு 1939—40ஆம் ஆண்டு கல்வெட்டறிக்கையில் சுருக்கங்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையில் காணப்படும் பதினொரு கல்வெட்டுகளுள் பத்து மட்டுமே இன்று இக்கோயிலில் காணக்கிடைக்கின்றன. இவற்றின்

பாடங்கள் எதுவும் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளியாகாமையின் இங்கு வெளியிடப்படுகின்றன.

### *1. கல்வெட்டு எண் (க. எண்): ARE 397/ 1939–40.*

***இடம்:*** முகமண்டப வடக்குத் தாங்குதளம்.

***செய்தி:*** இக்கல்வெட்டிலுள்ள நான்கு வரிகளின் தொடக்கப் பகுதிகளும் பெருமண்டபக் கட்டடப்பகுதிக்குள் சிக்கியுள்ளன. ஏறத்தாழ நான்கல்லது ஐந்தெழுத்துக்கள் ஒவ்வொரு வரியின் தொடக்கத்திலும் விடுபட்டுள்ளன. நந்திவர்மமங்கலத்தைச் சேர்ந்த திருப்பெருமுடி பரமேசுவரர் கோயிலில் ஒரு பகல்விளக்கு எரிப்பதற்காக உறையூர் கூற்றத்தைச் சேர்ந்த வயலூரில் வாழ்ந்த ஒருவரின் (பெயர் கட்டடப்பகுதிக்குள் சிக்கியுள்ளது) மனைவியார் மஞ்சனசேந்தி என்பார் நாற்பத்தைந்து ஆடுகளைக் கொடையாகத் தந்தார். அக்கொடையைப் பெற்றுக்கொண்ட கோயில் தேவகன்மிகள் பகல்விளக்கொன்று எரிக்க ஒப்புகையளித்தனர்.

***காலம்:*** சுந்தரசோழர், கி.பி. 962.

1 — — — — கோராஜகேஸரிவர்ம்மக்கு யாண்டு 8 ஆவது நந்திவர்ம்மமங்கலத்து திருப்பெருமுடி பரமேச்$_{0}$வரர்

2 — — — — ஒரு பகல்விளக்கு சந்த்$_3$ராதி$_3$த்தவற் எரிவதாக உறையூர் கூற்[றத்*]து வயலூருடையான் ம

3 — — — — மணவாட்டி மஞ்சனசேந்தி குடுத்த ஆடு 45 நால்பத்தந் சாடுங் கொண்டு பக

4 — — — — கு எரிப்போமானோம் தே$_3$வகம்மிகளோம் இது பந்மாஹேச்$_{0}$வரர் ரக்ஷை

### *2. க. எண்: 395/ 1939–40.*

***இடம்:*** முகமண்டப வடக்குச் சுவர்.

***செய்தி:*** பெருமுடி பரமேசுவரர் திருக்கோயிலை எடுப்பித்த உறத்தூர்க் கூற்றத்துப் புதுக்குடியைச் சேர்ந்த செம்பியன் உறத்தூர் நாட்டுக் கோனான மயிலைத்திண்டன் இருநூறு பொன் தந்து இக்கோயில் இறைவன் பெயரால் நிலம் வாங்கித் திருவுண்ணாழிகைப் புறமாகக் கோயிலுக்குக் கொடையளித்தார். இந்நில வருவாயில் வரி செலுத்தியது போக எஞ்சியுள்ளது கொண்டு இறைவனுக்கு அமுது படைக்கவும் கோயிலில் விளக்கிடவும் பணியாளர்க்கு ஊதியம் தரவும் ஒழுங்கு செய்யப்பட்டது. வயிரமேக வாய்க்கால், நந்திபன்மமங்கலம் என்னும் பெயர்கள் பல்லவர்களை நினைவூட்டுகின்றன. நில மற்றும்

நெல் அளவுகளைக் குறிக்கக் கல்வெட்டில் குறியீடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

***காலம்:*** சுந்தரசோழர், கி.பி. 968.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோராஜகேஸரிபந்மற்கு யாண்டு 14
2 ஆவது தென்கரை ப்$_3$ரஹ்மதே$_3$யம் நந்திபந்மமங்கல
3 த்து பெருமுடி பரமேச்$_0$வரற்கு உறத்தூர் கூற்றத்து பு
4 துக்குடி செம்பியன் உறத்தூர் நாட்டுக் கோனாயின
5 மையிலைத்திண்டன் தன் பொன் குடுத்து இபரமே
6 ச்$_0$வரர் பேரால் விலை கொண்ட நிலமாவன இவ்வூ
7 ர் 26ஞ்சேரி சாவாந்தி தத்தஞ் சந்திரசேகரனிடை
8 இச்சேரி காச்சுவன் நந்தி மாதேவன் பேரால் கிட
9 ந்த த$_3$ச$_0$க்கத்துக்கு பட்ட பாடகம் வயிரமேக வாக்காலு
10 க்கு மே[ற்*]க்கு மங்கல வதிக்கு தெற்கு கிழக்கு நின்றும் ஆ
11 றாங்கண்ணாற்று வடக்கடைந்த முதலேழு மாவரையில் கிழ
12 க்கடைய நூற்று இருபத்தைங் கழஞ்சு பொன் குடுத்து கொ
13 [ண்ட] நிலம்[1] அறு மாகாணியும் இவ்வூர் 15ந்தாஞ் சேரி
14 [வங்]கிபுறத்து அநந்தி க்ரமவித்தன் மகன் சோலைப் பி
15 [ரான் க்ர]மவித்தனும் தம்பியிடையும் விலை கொண்
16 ட நிலம் 18 ஆஞ்சேரி முறுசெட்டு ஶ்ரீத$_4$ர க்ரமவித்தன் பேரா
17 ல் கிடந்த த$_3$ச$_0$க்கத்துக்குப் பட்ட பாடகம் வயிரமேக வாக்கா
18 லுக்கு மேக்கு மங்கல வதிக்கு தெற்குக் கிழக்கு நின்றும் ஒன்
19 பதாங் கண்ணாற்று வடக்கடைந்த முதற்றுண்ட பாடகம்
20 அறு மாவில் மேக்கடைய[2]யும் குழி 1¼ நீ
21 க்கி இதனோடுமடைய 46 கழஞ்சு நாற்பத்தறு கழஞ்சு பொன் கு
22 டுத்து கொண்ட நிலம்[1] மூன்று மாவும் இதனோடுமடைய
23 பாரதாயன் நக்கன் மாந்தானிடை வசக்கு விசமேற்றி இரு
24 பதின் கழஞ்சு பொன் குடுத்துக் கொண்ட நிலம்[2] யு

---

1 நில அளவு குறியீட்டிலும் தரப்பட்டுள்ளது.

2 நில அளவு குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

25 ம் குழி 1¼ இதனோடுமடைய சாத்தூர் ஸ்ரீமாத$_4$வ ப
26 ட்டனிடை வசக்கு விசமேற்றி 9 கழஞ்சு பொன்னுக்கு கொண்ட நில
27 ம் [1]ம் குழி 2½ம் ஆக நிலம்[2] அரையே ஒரு மாவு
28 ம் குழி ஐந்துமாக இ நிலத்துக்கு இவனே குடுத்த பொன் க
29 ழஞ்சிற் போர்த்தது 200 கழஞ்சு இருநூற்றுக் கழஞ்சும் இதே$_3$வர் ப
30 ழந் தேவதானம் நிலம்[1] வில் வடக்கடைய திடல்
31 [1]மாத்தால் 20 கழஞ்சு கழஞ்சு வண்ணம் பொன் இவனே
32 யிட்டு கல்லி வசக்கின பொன் 70 கழஞ்சும் இத$_4$ர்
33 ம்மமும் இவனுதேயாக ஏற்றி நிலம் வேலியும் குழி
34 ஐந்தும் இந்நிலத்தில் போந்த போகங் கொண
35 டு ஊரோபாதி இறையிறுத்து நின்ற போகங் கொண்டு
36 இவனே எடுப்பித்த திருக்கற்றளி பெருமாளுக்கு திருவுண்
37 ணாழிகைப்புறம் நித்தலழிவு நிஜ்ஜம் செ[ய்*]த பரி
38 சாவது திருவமுதரிசி போது [3]படி நித்தம்[3]
39 ஐஞ்சிரண்டு வண்ணத்தால் நெல்[3] யும்
40 திருவமுது நெய் உழக்கு[க்*]கு நெல்[3] யும் திருவிளக்கெ
41 ண்ணை உழக்கு[க்*]கு நெல்[3] ம் ஆராதனை செய்யும் ப்ரா
42 ஹ்மணனுக்கு நெல்[3] பரிசாரகஞ் செய்யு மா
43 ணிக்கு [3]யும் கறியமுதுக்கும் தயிரமுதும் அடைக்
44 காயமுதும் திருமடைபள்ளிக்கு விறகிடுவானுக்குமா
45 க நெல்[3] யுமாக புரவு காலால்[3]
46 நெல் நித்தலழிவாக நிவெந்த$_4$ஞ்செய்தோம் தே$_3$வகர்ம்மிகளோ
47 ம் இது நாலாயிரவரும் பந்மாஹேச்$_0$வரரும் ரக்ஷை

***3. க. எண்: 392/ 1939–40.***

***இடம்:*** கருவறை வடக்குச் சுவர்.

---

1 நில அளவு குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

2 நில அளவு குறியீட்டிலும் தரப்பட்டுள்ளது.

3 நெல் அளவுகள் குறியீட்டில் தரப்பட்டுள்ளன.

***செய்தி:*** கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காக மயிலைத்திண்டனின் துணைவியார் காமம் பெருமான் இருபத்தைந்து கழஞ்சு பொன்னுக்கு நிலம் வாங்கிக் கோயிலுக்களித்தார்.

***காலம்:*** ஆதித்தகரிகாலர், கி.பி. பத்தாம் நூற்றாண்டு. ஆதித்த கரிகாலரின் ஆட்சிக்காலம் பற்றி உறுதியான தகவல்கள் இல்லாமையின் காலத்தைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியவில்லை.

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியனை தலை கொண்ட கோப்பரகேஸரிப

2 ம்மக்கு யாண்டு 3 ஆவது திருப்பெருமுடிப் பரமேச்$_0$வர ஸ்ரீ கோ[யிலி*]ல் ஒரு திரு

3 நொந்தாவிளக்கு சந்த்$_3$ராதி$_3$த்தவற் எரிவதாக உறத்தூர் கூற்றத்து புதுக்குடி

4 செம்பியன் உறத்தூர் நாட்டு கோனான மயிலை திண்டன் மண

5 வாட்டி காமம் பெருமான் தென்கரை ப்$_3$ரஹ்மதே$_3$யம் நந்திவர்ம்மமங்

6 கலத்து 14ஆஞ்சேரி குண்டூர் திருமழபாடி ப$_4$ட்டசோமாசியாரிடை இவள்

7 வசக்கு விசமேற்றி 25ம் இவிருபத்தஞ் கழஞ்சு பொன்னூக்கும்

8 கொண்ட நிலமாவது 18 ஆந்சேரி முறிசெட்டு ஸ்ரீத$_4$ர க்ரமவித்தன் பேரால்

9 க் கிடந்த தெ$_3$ச$_0$க்கத்துக்குப் பட்ட பாடகம் வயிரமேக வாக்காலுக்கு மேற்க்கு

10 மங்கல வதிக்கு தெற்க்கு கிழக்கு நின்றும் ஒன்பதாங் கண்ணாற்று வ

11 டக்க[ன*]டந்த முதற்றுண்டப் பாடகம் அறு மாவில் மேற்கடைய ஒரு மாவ

12 ரைக்காணியும் குழி 1 இவிருபத்தைந் கழந்சு பொன்னுக்கும் வி

13 லை கொண்டு குடுத்தேன் காமம் பெருமானேன் இது மாஹ[ா*]ஸ

14 பை$_4$யும் பந்மாஹேச்$_0$வரரும் ரக்ஷை

**4. க. எண்: 399/ 1939–40.**

**இடம்:** நந்திமண்டபத் தூண்.

**செய்தி:** தூணை எடுத்தவராக அருமலையுடையான் சேந்தங் காடனின் பெயர் கிடைக்கிறது.

**காலம்:** கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1 | அருமலை | 3 | ந்தங்காடன் செ |
| 2 | யுடையான் சே | 4 | ய்வித்த கால் |

**5. க. எண்: 396/ 1939–40.**

**இடம்:** முகமண்டப வடக்குத் தாங்குதளம்.

**செய்தி:** கோயிலில் ஊர் அறியச் சந்தி விளக்கொன்று எரிப்பதாகக் கோயில் சிவபிராமணர் இருவர் ஒப்புக்கொண்டு பெருங்குடி இருந்த கைக்கோளர் திரியன்பகந்தேவர் என்பாரிடம் இரண்டு காசுகள் பெற்றுக்கொண்டனர். இக்கல்வெட்டில் ஊரின் பெயர் பெருங்குடி என்றும் கோயிலின் பெயர் அகத்தீசுவரமென்றும் மாறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

**காலம்:** இரண்டாம் அல்லது மூன்றாம் இராசராசராகலாம்.

1 ஸ்ரீ இர[ா*]ஜஇர[ா*]ஜதே$_3$வ[ற்*]க்கு யாண்டு 9 திருஅகத்தி இசுரமுடைய மாதேவர் கோயில்லில் சி

2 வப்பிராமணர் ஓமஞ்சனகணன் திருநீலகண்டன்நும் காச்$_0$யன்யேன் நன் திருவகிய சிராமமு

3 டையான்நு[ம்*] இவ்விருவோம் பெருங்குடியில் இருக்கும் கைக்கோளந் திரியந்பகந்தேவர் பக்கல் கொ

4 ண்ட காசு இரண்டும் அதாவிநியோகத்தால் ஊரா[ர்*] அறிய சந்தி விளக்கு ஒரு சந்தி திருவி[ள*]

5 க்கு படி கடந்து புக்காந் சந்திராதித்தவற் செல்ல கடவிதாக சமதிதோம்

**6. க. எண்: 394 / 1939–40.**

**இடம்:** முகமண்டபத் தெற்குத் தாங்குதளம்.

**செய்தி:** கல் தச்சர்களுக்குரிய ஊதியம் தர முடியாமல் கோயில் திருப்பணி நின்றுபோன நேரத்தில் பொன் வேலை செய்யும் மருதாண்டான் மகன் கூத்தன், மூன்று கழஞ்சு பொன் தந்து திருப்பணி தொடர உதவினார். இவரே, வீரராமநாதரின்

பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் தன் மகன் நல்லமங்கைக்குச் சிறுவயதில் கண்பார்வை மறைந்து பின் சரியானமைக்காகப் பெருங்குடி இறைவனுக்கு ஒரு கழஞ்சில் பொன்னால் பட்டம் செய்து வழங்கினார்.

***காலம்:*** வீரராமநாதர், கி.பி. 1268.

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸர்வ புவனம் சக்க[ரவர்]த்திகள் ஸ்ரீவீரராமநாத தேவற்கு யாண்டு 14[1]வது கன்னி நாயற்று அபர பக்ஷத்து த்ரயோத$_3$சியும் நாயற்றுக்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள்

2 தென்கரை இராஜ[கம்பீர] வளநாட்டு உறையூர் கூற்றத்து ஸ்ரீஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலத்து காணியுடைய தட்டாரில் மருதாண்டான் மகன் கூத்தன் கட்டளைப் பிறிவு

3 காணி ஆட்சியான மேல்பிடாகையான ஊர்களில் பெருங்குடி உடையார் திருஅகத்தீச்$_0$வரமுடையார் கோயிலுக்கு கல் தச்ச கூலி தாழ்வாய் திருப்பணிக் குறையாயிருக்கையில் திருப்பணிக்கு தச்

4 சக் கூலிக்கு இவன் இட்ட பொன் முக்கழஞ்சு இப்பொன் முக்கழஞ்சும் திருப்பணிக்குக் கூ[த்]தன் இட்டான் இதுவும் 19 ஆவது மக$_4$ர நாயற்று நாள் இந்த கூத்தன் மகன் நல்லமங்கை சிறுவயஸ்ஸிலே கண் ம[றை]ந்த அளவுக்கு இவன் மகன்

5 பின்பு கண் விளங்கி இன்னாயனார்க்கு இவன் கழஞ்சு பொன்னிட்டு பட்டம் பண்ணிச் சாத்தினான்.

## *7. க. எண்: 391/1939–40.*

***இடம்:*** கருவறை வடக்குத் தாங்குதளம்.

***செய்தி:*** கோயில் திருநாளுக்குரிய செலவினங்களுக்காக இரண்டு மா நிலத்தை ஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி மகா சபையார் சர்வ நமஸ்ய இறையிலியாகச் செய்து தந்தனர். கோயில் இறைவன் அகத்தீசுவரமுடைய நாயனார் என்று குறிக்கப்படுகிறார்.

***காலம்:*** மூன்றாம் சடையவர்மர் சுந்தர பாண்டியர், கி.பி. 1314.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்த[ர பா]ண்டிய [தேவ]ற்கு யாண்டு 10வது எதிராமாண்டு

---

1 கல்வெட்டறிக்கையில் பத்தாம் ஆட்சியாண்டு என்று தவறாகத் தரப்பட்டுள்ளது.

கற்கட[க*] நாயற்றுப் பூர்வ பக்கத்து பஞ்சமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் தென்கரை இராசகெம்பீர வளநாட்டு உறையூற்க் கூ

2 ற்றத்து ஸ்ரீஜக₃தே₃கவீரச் சதுர்வேதி₃மங்கலத்துப் பெருங்குறி மஹாஸபையோம் மேல்பிடாகை பெருங்குடியுடையார் திருவக₃ஸ்தீச்₀வரமுடைய நாயனார்குத் திருநாளைக்கு இறையிலியாக விட்ட பெருங்குடியிற் கட்டளையில் பரமேச்₀வர வதிக்குத் தெற்கு வாமன வாய்க்காலுக்குக் கிழக்கு நாலாங் கண்ணா[ற்று]

3 முதற்சதிரத்து இன்னாயநார் தேவதாநம் நிலம் 4மா[வு*]ம் 2 சதிரத்து தேவதாநம் வள்ளிப்புறம்[1] ம் ஆக நிலம் 2மா இன்னிலம் இரண்டு [மாவு]ம் பத்தாவது வம்பு முதல் இன்னாயனாற்க்குத் திருனாளுக்குடலாகச் சந்திராதித்தவரையும் சர்வ நமஸ்ய இறையிலியாக விவஸ்யை பண்ணிக் குடுத்தோம் பெருங்குறி மகாஸபை₄யோம் இப்

4 படிக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளச் சொன்னோம் உ இப்படிக்கு காச்₀யபன் மதுராந்தக ப்₃ரஹ்மாராயன் எழுத்து இப்படிக்குத் திருவேங்கடபட்டன் எழுத்து இப்படிக்கு திருமுடிசூட்டிநான் நம்பி எழுத்து குலசேகர ப்₃ரஹ்மாராயன் எழுத்து இப்படிக்கு ஆரிதன் திருநறையூர் நம்பி எழு

5 த்து உ இப்படிக்கு முட்டுறை இராஜஸூரிய ப்₃ரமாராயன் எழுத்து இவை அரணைப்புறத்து தாமோதரபட்டன் எழுத்து [ந]ம்பூர் தேவகுமாரபட்டன் எழுத்து இப்படிக்குக் கோவிந்த பட்டன் எழுத்து இப்படிக்கு குலோத்துங்க சோழ ப்₃ரஹ்மராயன் எழுத்து இப்படிக்கு இவை கவீரமங்கலமுடையான் ந

6 ந்திமங்கலப் பிரியன் எழுத்து உ

***8. க. எண்: 393/ 1939–40.***

**இடம்:** கருவறை மேற்குத் தாங்குதளம்.

***செய்தி:*** கல்வெட்டு அரச ஆணையைத் தெரிவிக்கிறது. பெருங்குடி கோயிலில் திருவாதிரைத் திருநாளின்போது மேற் கொள்ளப்படும் இறைவனுக்குரிய திருவமுது உள்ளிட்ட படையல்

---

1 நில அளவு குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

மற்றும் வழிபாட்டுச் செலவினங்களுக்காகப் பெருங்குடிக் கோயிலுக் குரிய திருநாமத்துக்காணி நிலத்தில் நான்கு மா நிலத்திற்குரிய இறை தவிர்க்கப்பட்டது. இக்கல்வெட்டால் நிலவரியான கடமை பொன்னாகவும் நெல்லாகவும் பெறப்பட்டதையும் நிலவரி நிச்சயிக்கப் பட்ட அளவீட்டில் இருந்ததையும் அறியமுடிகிறது. 'நம் வாசலார் கணக்கிலும்' என்ற சொல்லாட்சி நிலவரி தொடர்பான அரசுப் பதிவேடுகள் பற்றிய தகவலை உறுதிப்படுத்துகிறது.

*காலம்:* மூன்றாம் சடையவர்மர் சுந்தர பாண்டியராகலாம்; கி.பி.1315.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபு$_4$வநச் சக்ரவத்தி கோனேரின்மை கொண்டா[ன் தெ]ன்கரை ராஜக$_3$ம்பீ$_4$ர வளநாட்டு உறையூர் கூற்றத்து ஸ்ரீஜக$_3$தே$_3$க[வீர சதுர்வேதிமங்கல]த்து ஸபை$_4$ யாற்குத் தங்களூர் மேல்பிடாகை பெருங்குடி உடையார் திரு

2 அகத்திச்$_0$வரமுடைய நாயனார் திருநாமத்துக்காணியாய்க் கட[மை கொண்டு] போதுகிற நிலத்திலே இன்னாயநாற்கு [திருவாதி]ரைத்[1] திருநாளுக்கு அமுது[படி சாத்து]படி உள்ளிட்ட வற்கத்துக்கு விட்ட இவ்வூற் கட்டளையில் மங்கல வதிக்கு தெற்கு வாமன

3 வாய்க்காலுக்கு மேற்கு முதற் கண்ணாற்று முதற் சதிரத்து நிலம்[2] மாகாணி[2] நாலாங் க[ண்ணாற்று] முதற் சதிரத்து நிலம்[2] இரண்டாஞ் சதிரத்து நிலம்[2] . . . . . நிலம்[2] 4 மா[2] இந்னிலம் நா[லு மாவு]ம் இன்னாயனாற்கு முதலடங்க இறையிலியாக குடுத்து இன்னிலத்துக்கு நிச்சயிப்பான பொன்னு

4 ம் நெல்லு மற்றும் எப்பேறபட்ட உபாதிகளும் பன்னிரண் டாவது வம்பு முதல் நம் வாசலார் கணக்கிலும் கழித்து ஸர்வ நமஸ்ய இறையிலி[யாக] சந்த்$_3$ராதித்தவற் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும் பாறக யாண்டு 12வது நாள் 41[3]துல்யம் இப்படிக்கு

5 இவை குளத்தூருடைய[யான்] எழுத்து இப்படிக்கு பல்லவராயன் எழுத்து

---

1 கல்வெட்டறிக்கை சித்திரை என்று குறிப்பிடுகிறது.

2 குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

3 கல்வெட்டறிக்கையில் நாள் 49 என்றுள்ளது.

**9. க. எண்: 401/1939–40.**

**இடம்:** அம்மன் கோயில் முகமண்டபத் தெற்கு மற்றும் கிழக்குக் குமுதம்.

**செய்தி:** அம்மன் பெயரும் அவர் எழுந்தருளுவிக்கப்பட்ட காலமும் கிடைக்கின்றன. கல்வெட்டு முழுமையின்றித் தொடர்பின்றி இருப்பதற்குத் திருப்பணி காரணமாகலாம். படியெடுக்கப்பட்ட காலத்திலேயே இக்கல்வெட்டு பழுதுற்றிருந்ததாகக் கல்வெட்டறிக்கை கூறுகிறது.

**காலம்:** கி.பி. 1441.

1 ச$_0$காப்தம் 1363[1] மேல் செல்லா நின்ற இரவுத்தர வருஷம் சித்திரை மீ 5 உ கற்ப்ரிம்மதேசம் மேல்பிடாகை பெருங்குடி உடையார் தி

2 நாச்சியார் சிவகாமசுந்தரி நாச்சியாரை மேற்படியால் ஸபை$_4$யார் பா$_4$ரத கோத்தரத்து போ$_4$தா$_4$யன ஸூத்திரத்து திருவானைக்காவுடையார்

**10. க. எண்: 398/ 1939–40.**

**இடம்:** கிழக்குத் திருச்சுற்று மதில் – வாயிலின் இடப்புறம்.

**செய்தி:** துணுக்குக் கல்வெட்டு. படியெடுக்கப்பட்ட காலத்தில் முழுமையாக இருந்தது போலும். இக்கல்வெட்டு கோயில் தேவகன்மியருக்கும் கோயிலுக்கும் நிகழ்ந்த ஒப்பந்தம்பற்றிப் பேசுவதாகக் கல்வெட்டறிக்கை குறிப்பிடுகிறது. கோயிலில் நடைபெறும் ஆனித் திங்கள் விழாவிற்கான செலவுகளுக்காகப் பெருங்குடி சார்ந்த 84 மா நிலத்திற்கு, ஒரு மாவுக்கு ஒரு கலம் நெல்லெனத் தேவகன்மிகள் தருவதென ஒப்புக்கொள்ளப்பட்டது. கோயில் சார்ந்த இந்நிலம் தேவகன்மிகளால் குத்தகைக்குக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கல்வெட்டறிக்கை குறிப்பிடுகிறது. இப்போதிருக்கும் கல்வெட்டுப் பகுதியில் நிலப்பகுதியின் அளவு 86 மா என்று உள்ளது. பிற செய்திகளைச் சரிபார்க்கும் அளவு கல்வெட்டில் முழுமையில்லை.

**காலம்:** கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடைபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சு

---

1 கல்வெட்டறிக்கையில் 1362 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2 நாயற்று அபர பக்கத்து த$_3$ச$_0$மியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற ச
3 டு உறையூற் கூற்றத்து ஸ்ரீஜகதே$_3$கவீரச் சதுர்வ்வேதி$_3$மங்கலத்து மேல்பி
4 திருவகத்திச்$_0$வரமுடைய நாயநார் கோயில் ஆதிசண்டேச்$_0$வர தேவர்கன்
5 செய்வார்களுக்கு நாங்கள் விவஸ்தை பண்ணிக் குடுத்த பரிசாவது எங்க
6 பயிர் செயிலான இவ்வூர் நிலம் எண்பத்தாறு மாவுக்கு இன்னாள் முதல் ஆ
7 ரான முதலிதில் குடுக்கக் கடவோமாகவும் இப்படி கல்விலும் செம்பிலும்
8 பண்ணிக் குடுத்தோம் உடையார் திருவகத்தீச்$_0$வரமுடையார் கோயில் ஆதிசண்
9 ஸ்ரீமாகேச்$_0$வர கண்காணி — —
10 — — லமடித்தும் வெண்கலமெடுத்தும்
11 கைக்கோள முதலிகளும் — — சேனையக் கொண்டான் எழுத்து

---

### *கடல் மரம்*

சங்க இலக்கியங்களில் அக்காலக் கடற்பயணங்கள் பற்றிய அருமையான பாடல்கள் பல உள்ளன. தலைவனைப் பழிக்கும் தோழியின் கூற்றாகக் கொற்றனார் நற்றிணையில் (30) கடற்பயண மொன்றைக் காட்டுகிறார். மரத்தால் செய்யப்பட்டுக் கடலில் செலுத்தப்பட்டதால் ‘கடல் மரம்’ என்றழைக்கப்பட்ட சங்கக் கப்பலொன்று, பயணத்தின்போது வீசிய பெரும் புயற் காற்றால் சுழற்றப்பட்டுப் பெருந் துன்பமுற்றது. காற்றின் வீச்சும் அலைகளின் எழுச்சியும் கடல் மரத்தைச் சுழற்றியடிக்கக் கப்பல் கவிழ்ந்தது. பயணிகளின் பாடு சொல்லுந்தரமன்று. கடல் நீரில் தத்தளித்த வர்கள் பிளந்த கடல் மரத்தின் பலகையொன்று கண்ணெதிரில் மிதப்பது கண்டு தாவிப் பற்றினர். ஒரு பலகையைப் பலர் பிடித்தமையால் அவரவர் போக்கிற்குப் பலகை இழுப்புண்டது.

இந்தக் கவிழ்ந்த கப்பலும் பலகைப் பற்றலும் தலைவனின் பரத்தமைக்கு எடுத்துக்காட்டாகத்தான் வந்துள்ளன. தமிழறிஞர்கள் வரலாற்றுத் தகவல்களைக் காதல் கனிவோடு தந்த காலம் அது. அதனால்தான் அன்று வரலாறு வனப்பாகவும் இருந்தது.

# 4. ஆய்வுக் கட்டுரைகள்

## 1. கண்ணில் கனிந்த கபிலர் மலை[1]

*அர. அகிலா*

கபிலர் மலை கொங்குநாட்டில், சேலம் மாவட்டம், வேலூர் வட்டத்தில் நாமக்கல்லில் இருந்து ஏறத்தாழ 25 கி.மீ. தொலைவிலும் வேலூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இதன் பெரும்பகுதி உயரம் குறைந்த குன்றுதான். ஆனால் வடபுறத்தில் மட்டும் தூண்களைப் போல இரண்டு நெடிய விண் தழுவும் பாறைகள். இந்தப் பாறைகளுள் ஒன்றின் உச்சியில்தான் பிள்ளையாரை அமர்த்தி, அவருக்கு உச்சிப்பிள்ளையார் என்னும் பெயர் சூட்டியிருக்கிறார்கள். கீழேயும் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; புதியவர். மலையேறுபவர்களுக்கு வாழ்த்து சொல்வதற்காகவே வேசர சிகரத்தோடு கூடிய ஒருதள விமானத்தில், பின் கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டு, முன் கைகளில் கொம்பும் மோதகமும் காட்டி அமர்ந்துள்ளார்.

மலையேறுவதற்கு வாய்ப்பாகக் கீழிருந்தே படிக்கட்டுகள் வெட்டியிருக்கிறார்கள். படிக்கட்டுகள் தொடங்கும் இடத்தில் இருபுறமும் இரண்டு யானைச் சிற்பங்கள், தென்புற யானையின் கால் பகுதியிலும் உடற்பகுதியிலும் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு இதுவரை படியெடுக்கப்படாத புதிய கல்வெட்டாகும். நல்ல தம்பி என்பார் மகள் பச்சை செண்பகம் நல்லமுத்து இந்த யானையை நந்தன ஆண்டு கார்த்திகைத் திங்களில் செய்தளித்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. நிழல் தரும் வாயிலுடன் தொடங்கும் மலைப்படிகள் அகலமாகவும் நீளமாகவும் வெட்டப்பட்டுள்ளன. நுழைவாயிலைச் சிறு கோபுரமொன்று அலங்கரிக்கிறது. படியேறச் செல்லும்போதே தென்புறத்தில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் கண்களில் படுகிறது.

---

1 மருத்துவர்கள் திரு. சு. பழனியாண்டி, திரு. கோ.நா. மோகனவேல் அறக்கட்டளைகளின் உதவியுடன் இக்கட்டுரை வெளியாகிறது.

பத்துப் பதினைந்து படிகள் ஏறியதும் கபிலர் ஆசிரமத்திற்கென்று தென்புறத்தே ஒரு வழி பிரிகிறது. அதையடுத்துச் சிறு திருமுன்னொன்றில் நின்றுகொண்டிருக்கும் இடும்பன். வலக்கை கதாயுதத்தைத் தரையில் ஊன்றிப் பிடித்துள்ளது. தோள்களில் பக்கத்திற்கொன்றாக இரண்டு மலைகளைத் தாங்கியுள்ள கம்பு. இக்கம்பைத்தான் இடும்பனின் இடக்கரம் பிடித்துள்ளது. கரிய திருமேனியில் அரையாடை. இருதள விமானமாய் நாகர சிகரத்துடன் அமைந்துள்ள இடும்பன் திருமுன்னின் பக்கத்தே அறுபது செ.மீ. உயரமும் 42 செ.மீ. அகலமும் கொண்ட வாயிலுடன் ஒரு சிறு குகை அமைந்துள்ளது. மரச்சட்டங்கள் கோக்கப்பட்ட சட்டகத்தால் அமைக்கப் பட்டுள்ள இதன் வாயிலுக்குள் படுத்தபடிதான் செல்லமுடியும். சரிந்து நிற்கும் இரண்டு பாறைகளைச் செங்கல் மற்றும் காரையால் இணைத்துச் செயற்கையான குகைத்தளமொன்றை உருவாக்கிய வெள்ளைய பிள்ளை என்பார், அதற்குச் சாராய முத்துக்கருப்பன் குகையென்று பெயரும் சூட்டியுள்ளார். இது பிரமாதி ஆண்டில் பங்குனித் திங்கள் பத்தொன்பதாம் நாளில் உருவாக்கப்பட்டதைத் தென்பாறையிலுள்ள கல்வெட்டு தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்தக் குகைக்குக் கூரையாக நீளமான பாறைப்பாளங்கள் போடப்பட்டு இடைவெளிகள் பூசப்பட்டுள்ளன. பக்கச்சுவர் சில இடங்களில் செங்கல் சுவராக அமைந்துள்ளது. உட்புறத்தே பத்துப் பேருக்கு மேல் அமர்ந்து வழிபட வசதியுண்டு. பாறையின் மேற்கு முகத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் முருகனின் திருவடிவம் சிற்றுருவச் சிற்பமாய்ச் செதுக்கப்பட்டுள்ளது. வலக்கை வேலைப் பற்றியிருக்க, இடக்கை கடிய வலம்பிதமாய் இடத்தொடையில் அமர்ந்துள்ளது.

மலையின் பல இடங்களில் சிறு சிறு மண்டபங்கள் கட்டிச் சுதையாலான திருமேனிகளை நிறுவியுள்ளனர். சில இடங்களில் பார்க்கும்படியாகவும் சில இடங்களில் அச்சுறுத்தும் வகையிலும் அமைந்துள்ள இத்திருமேனிகள் இன்றைய மண்ணீட்டாளர்களின் கைவண்ணங்கள். தமிழர்களிடையே கலையுணர்வு எந்த அளவுக்கு மங்கிவருகிறது என்பதற்கு இந்தச் சுதையுருவங்கள் சிறந்த சான்றுகளாகும்.

மலைப் படிகள், மேலடைந்ததும் இரண்டாகப் பிரிகின்றன. நேர்ப் படிகள் பெரியதொரு மகாமண்டபத்திற்கும் சுற்றுப் படிகள் வெளிச்சுற்றிற்குமாய் நம்மை அழைத்துச் செல்கின்றன. இந்த மகாமண்டபத்திற்கு முன்னால் படியோட்டத்தின் தென்புறத்தே உள்ள திறந்தவெளி, மலைத்தளத்தில் நின்றபடி சுற்றெழில் காண உதவுகிறது. இங்கு நின்றபடியே தொலைவில் தெரியும் மலைக்கூட்டங்

களையும் தென்னந்தோப்புகளையும் கீழே ஓடும் ஊர்திகளையும் வீதிகளையும் குடியிருப்புகளையும் பறவைப் பார்வையில் பார்த்து மகிழலாம்.

மகாமண்டபத்தின் மேற்புறத்தே மூன்று திருமுன்கள் கிழக்கு நோக்கிய வாயில்களுடன் தொடங்குகின்றன. இவையனைத்துமே மகாமண்டபத்தினும் உயர்த்தப்பட்டதொரு மேடைமீது அமைக்கப் பட்டுள்ளன. தென்கோடியில் சித்திவிநாயகரென்று அழைக்கப்படும் பிள்ளையார் திருமுன். கருவறையும் சிறியதொரு முகமண்டபமுமாய் விளங்கும் இத்திருமுன்னின் இடப்புறத்தே காளஹஸ்தீசுவரர் என்ற பெயரில் சிவபெருமான் குடியிருக்கும் கோயில். மேடை மீது கருவறையும் முகமண்டபமுமாய்த் தொடங்கும் இக்கோயிலின் தாங்குதளம் துணை உபானம், உபானம், பத்ம ஜகதி, கம்புகளின் அணைப்பில் பாதங்களோடு கூடிய கண்டம், நடுப்பட்டையுடன் கூடிய சாய்வளைக்குமுதம், மீண்டுமொரு கண்டவரி, கூடுகளும் வரிகளும் கூடிய கபோதம், மூன்றாம் கண்டவரி, அதபத்மம், வேதிகை, துணைக்கம்பு என்று பல வரிகளால் அடுக்கப்பெற்றுக் கபோதபந்தத் தாங்குதளமாய் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இத்தாங்குதளத்தின் பாதங்களிலிருந்து எழும் விஷ்ணுகாந்த அரைத்தூண்கள் துணைக்கம்பின் மீதெழும் சுவரைச் சுற்றிலுமாய் அலங்கரிக்கின்றன. கொடிக்கருக்கு வரையப்பட்டு நாகபந்தம் கொண்ட பாதம், கால், தாமரைக்கட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், தாமரை, பலகை, வீரகண்டம், நாணுதலும் மதலையும் கொண்ட சிறிய பூப்போதிகை என அமைந்திருக்கும் தூண்கள் பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுக் கலைமுறையை நினைவூட்டுகின்றன. இந்தப் பூப்போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேல் வாஜனமும் அதன்மீது அதபத்ம வரியமைந்த வலபியும் காட்டியுள்ளார்கள். வலபியின் மேலணைப்பாய்ப் பெருவாஜனம். இதன் தலைமேல் அலங்கரிக்கப்பட்ட கபோதம், சிம்மத்தலைக் கூடுகளுடனும் கீழிறக்க விளிம்பில் பூ மொக்கு வடிப்புகளுடனும் கூடுகளில் வேறுபட்ட மனித முகங்களுடனும் அந்நாளைய சிற்பாசிரியர்களின் சுவையுணர்வும் கலைச்சிறப்பும் காட்டி நம்மை மகிழ்விக்கிறது.

கருவறை, முகமண்டபப் புறச்சுவர்களில் கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. முகமண்டபக் கோட்டங்களின் மேலே முறையாக வடிவமைக்கப்படாத மகர தோரணம், பொட்டுப் பகுதியில் மனிதத் தலையுடன் காட்சி தருகிறது. தென்புறக் கோட்டம் வெறுமையாக இருக்க வடபுறக் கோட்டத்தில் சிறிய வடிவினராய் மகிடாசுரமர்த்தினி. இடமுன்கையைக் கடிய வலம்பிதமாகவும் வல முன்கையைக் காக்கும்

குறிப்பிலும் கொண்டுள்ள அம்மையின் பின்கைகளில் சங்கும் சக்கரமும். தாம் வென்று வீழ்த்திய மகிடனின் தலை மீது நேர்நின்ற கோலத்தில் காட்சி தரும் அம்மையின் சிறிய திருமேனிக்குச் சிறப்பான வழிபாடு கிடைத்து வருகிறது. சாலை சிகரத்துடன் அமைக்கப்பட்டுள்ள கருவறைக் கோட்டங்கள் அனைத்தும் வெறுமையாக உள்ளன. கருவறைக்கு மேல் வேதிகையும் அதன் மீது ஒரு தளமும் காட்டப்பட்டுள்ளன. இந்தத் தளத்திற்கு முன்னால் வேதிகையின் மீது முதல் தள மேலுறுப்புகளாய்ச் சாலைகளும் கர்ணகூடங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றை இணைக்கும் பிடிச்சுவர் தளமுகப்பின் நான்கு புறமும் தொடர்ந்து ஓடுகிறது. இரண்டாம் தளத்தின் மீது கிரீவம் என்னும் கழுத்துப் பகுதியும் அதற்கு மேல் வட்டமான சிகரமும் உச்சிக் குடமும் அமைந்துள்ளன. கிரீவ, சிகரப் பகுதிகளின் நாற்றிசையிலும் பரவி நிற்கும் பெருநாசிகைகளில் சுதையுருவங்கள். கோணத் திசைகளில் உருவங்களேதுமற்ற சிறுநாசிகைகள்.

மையக்கோயில் கருவறையின் வடபுறத்தே சுற்றுவெளியில், சுற்ற அதிக இடமில்லாத நிலையில் சிறியதொரு சண்டேசுவரர் திருமுன் காட்சியளிக்கிறது. ஒருதள நாகர விமானமாய் அமைந்துள்ள இத்திருமுன்னில் சண்டேசுவரர் பிற்காலத் திருமேனியராய் மகிழ்விருப்பில் அமர்ந்துள்ளார். வலக்கை பரசு கொள்ள இடக்கையைத் தொடைமீது வைத்துள்ளார்.

இறைவன் கோயிலை அடுத்து அதே கட்டமைப்பில் இறைவியின் திருக்கோயில். கருவறையும் முகமண்டபமும் கொண்டு விளங்கும் இக்கோயிலின் கீழ்த்தள முடிவில் மற்றொரு தளம் போல் மேடையொன்று எழுப்பி அதன்மீது கிரீவமும் சிகரமும் காட்டி யுள்ளனர். கிரீவத்தின் மூலைகளைப் பூதகணங்களும் நந்திகளும் அலங்கரிக்கின்றன. கருவறையில் கபிலாம்பிகை என்ற திருப்பெயருடன் அம்மை அருளாட்சி செய்கிறார்.

அம்மன் கோயிலின் வடமேற்குக் கட்டுமானப்பகுதி, பின்னாலுள்ள மலைப்பாறையில் முடியுமாறு கட்டப்பட்டுள்ளது. இந்த மலைப்பாறையில் மிக நீளமான வரிகளுடன் பதினேழாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டின் தொடக்கப்பகுதிகள் அம்மன் கோயில் முதல் தளக் கட்டடப்பகுதிக்குள் சிக்கியுள்ளன. இக்கல்வெட்டின் நடுப்பகுதியில் பாறை செதிலாகப் பிளந்துள்ளதால் பல வரிகள் தொடர்ச்சி யிழந்துள்ளன. இந்தக் கல்வெட்டைப் படிக்கப் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முழுமையாகப் படிக்கமுடியவில்லை.

அம்மன் கோயிலை அடுத்தமைந்துள்ளது பாலசுப்பிரமணியரின் திருக்கோயில். இக்கோயிலுக்கு மகாமண்டபத்திலிருந்து ஒரு வாயில் உள்ளது. இந்த வாயில் முருகன் கோயிலின் மகாமண்டபத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. மகாமண்டபம், முகமண்டபம், கருவறை என்ற அமைப்பில் முருகன் கோயில் அமைந்துள்ளது. இயற்கையான குகைத்தளமொன்றே கருவறையாய்க் கொள்ளப் பட்டுள்ளது. இதில் நடுநாயகமாக முருகப் பெருமானின் திருவுருவம் எழுந்தருளியுள்ளது. கோவண ஆடையுடன் சின்னப்பிள்ளைக் கோலத்தில், சமபாதராய் வலக்கையில் தடியும் இடக்கையைக் கடிய வலம்பிதக் குறிப்பிலும் கொண்டு, நின்ற கோலத்தில் காட்சி தரும் முருகப்பெருமானின் வலப்புறத்தே சுயம்பு வடிவமொன்றும் வழிபாட்டில் உள்ளது.

முகமண்டப வாயிலில் வாயிற்காப்போர். பின்கைகளில் வஜ்ரமும் சக்தியும் கொண்டுள்ள இவர்களில், வலப்புறத்தார் வல முன்கையால் கதாயுதம் நிறுத்தி இட முன்கையை எச்சரித்து அறிவுறுத்தும் தர்ஜனியில் காட்டி நிற்க, இடப்புறத்தார் வலக்கையால் எச்சரித்து இடக்கையால் கதை நிறுத்தியுள்ளார். இப்பெரு வீரர்கள் நிற்கும் மகா மண்டபத்தின் வடபுறத்தே சிறியதொரு திண்ணை மீது ஆடவல்லானும் உமாவும். சற்றே உள்வாங்கிக் கட்டப்பட்டுள்ள அறையொன்றில் முருகப்பெருமான் தேவியருடன் உற்சவராய் அழைக்கிறார்.

முருகன் கோயிலின் கூரையில் காட்டப்பட்டுள்ள கபோதக் கூடுகள் ஆழமற்று அமைந்துள்ளன. கூரையின் மேலுள்ள வேதிகை விளிம்புகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யோக நரசிம்மர், போர் வீரர், தாமரைப்பதக்கங்கள் போன்றவை கண்களைக் கவர்கின்றன. மேலே விமானத்தின் இரண்டாம் தளமும் கிரீவ சிகரங்களும் உச்சிக்குடத்தோடு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

சித்திவிநாயகர் திருமுன்னும், இறைவன் மற்றும் இறைவி கோயில்களும் அமைந்துள்ள செவ்வக வடிவிலான மகாமண்டபம் தூண்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டுக் கலையமைப்பில் அமைந்துள்ள இத்தூண்கள் இரு வரிசைகளில் அமைந்துள்ளன. பாதம், அதன்மீதொரு செவ்வகம் என அமைந்துள்ள அடிப்பகுதியின்மீது கட்டும் சதுரமும் மாறிமாறியமைந்து வளர்கின்றன. செவ்வகத்தின் தலைப்பு மூலைகளில் நாகபந்தங்கள்; கட்டுகளின் நடுவில் சுற்றுப் பட்டைகள்; கட்டுகளையும் சதுரங்களையும் தாமரைக்கட்டுகள் இணைக்கின்றன. மேலே கிளைக்கும் போதிகைகள் மதலைகளும்

நாணுதல்களும் கொண்டுள்ளன. நாணுதல்களின் முடிவில் பூமுனை காட்டப்பட்டுள்ளது. போதிகைகளின் தாங்கலில் வழக்கம் போல் உத்திரம், அதன் மீது வாஜன அணைப்பில் வலபி, மேலே கூரையென்று இம்மண்டபக் கட்டுமானம் அமைந்துள்ளது.

தூண்களின் செவ்வகங்களிலும் சதுரங்களிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மனித மற்றும் விலங்குருவங்கள், செடி கொடிகள், நிகழ்கலைகள், புராணக் கதைகளின் படப்பிடிப்புகள் என இச்சிற்பங்கள் பலவகைப்பட்டு அமைந்துள்ளன. பிள்ளையார், கருடாழ்வார் போன்ற இறைவடிவங்கள் சிறப்பாக வடிக்கப் பட்டுள்ளன.

இந்தத் தூண்களில் ஒன்றில், கையில் சப்ளாக் கட்டைகளுடன் இடுப்பைச் சுற்றிலும் சரமாய்த் தொங்கும் மணியாடைக் கோமாளி ஒருவர் காட்சி தருகிறார். இவரது ஆடை புதுமையாகவும் சிறப்பாகவும் கலைநோக்குடனும் அமைந்துள்ளது. இவர் கையிலுள்ள சப்ளாக் கட்டைகள் சாதாரணமானவையல்ல. குன்றக்குடி குடைவரையில் பாண்டியர் வடித்திருக்கும் சிவபெருமானின் ஸ்வஸ்திக ஆடல் தோற்றத்தின் கரத்திலும் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் பல்லவர் காட்டியுள்ள விருச்சிகக் கரணமிடும் சிவபெருமானின் கையிலும் இடம் பெற்றுள்ள பழம்பெருமை மிக்க தாளக் கருவியாகும்.

சந்தெல்லர் (கஜுரகோ), கலிங்கர் (ஒரிசா) மற்றும் ஒய்சளர் (பேலூர், ஹளேபீடு, திருவரங்கம்) பகுதிகளில் பெருஞ்சிறப்போடு நேசிக்கப்படும் கண்ணாடி பார்த்துப் பொட்டிட்டுக் கொள்ளும் பாவைச் சிற்பமும் இங்குள்ளது. அவற்றோடு ஒப்பிடக்கூடிய நேர்த்தியில்லை யென்றாலும் அந்தப் படப்பிடிப்பு என்பதில் மகிழ்ச்சி கொள்ளலாம்.

இவர்கள் தவிர கத்தியும் ஊதுகொம்புமாய் மீசை முறுக்கும் ஆடவர், செட்டிநாட்டுப் பனையோலைக் கூடையை இடுப்பிலேந்திய ஊரகப் பெண், அங்குமிங்குமாய் அலைக்கழிக்கும் பார்வையோடு பாதங்களைக்கூட எப்படி வைப்பதென்று அறியாமல் கால் பரப்பி நிற்கும் கோமாளிக் கூத்தர் என்று பல்வேறு வடிவங்கள். அந்நாளைய ஊதுகுழல்களின் வகைகளைக் காட்டும் சிற்பம் மற்றொரு தூணில். நம் நாட்டின் கலை வளர்ச்சியையும் திறன்களையும் அறிந்துகொள்ள இலக்கியங்களும் கோயில்களுமே அடைக்கலம். பெருங்குழல், சிறுகுழல் என்று ஆளுக்கொரு ஊதுகுழலுடன் இருவர் நிற்க இடையில் நிற்பவர் வீணையைத் தோளுடன் கிடத்தி நரம்புகளை வருடி இசை கூட்டப் பார்க்கிறார்.

அந்நாளைய சிற்பிகளுக்கு இலக்கணம் இருந்தது; இலக்கியம் தெரிந்தது; ஒழுங்கு முறைகளோடு ஒழுக்க நெறிகளும் உடனிருந்து வழிநடத்தின. அதனால்தான் அந்தநாள் சிற்பாசிரியர்களின் விரல்கள் செய்த மோகன வடிப்புகள் இந்நாளிலும் நம்மை மயக்கிக் கட்டுகின்றன. இன்றைக்கு நடக்கும் குடமுழுக்குக் கோலாகலங்களை நினைத்துப் பார்க்கும்போது நாம் ஏன் இப்படித் தரம் தாழ்ந்து போனோம் என்று நெஞ்சம் குமுறுகிறது. இந்தக் கோயில்களை யெல்லாம் நம்மால் மீண்டும் உருவாக்க முடியுமா? இருக்கும் இந்தக் கலைச்செல்வங்களைக் காப்பாற்றுவது நம் கடமையல்லவா! வரலாற்றுணர்வும் கலையறிவும் கிஞ்சித்தும் இல்லாத திருப்பணி யாளர்கள் குடமுழுக்கின் பெயரால் கோயில்களுக்கு விளைவிக்கும் நாசங்களும் கேடுகளும் என்றைக்கு இந்தச் சபிக்கப்பட்ட சமுதாயத்தின் கண்களைத் திறக்கப்போகிறதோ?

மகாமண்டபத்திற்குக் கிழக்கிலும் ஒரு வாயில் உள்ளது. இவ்வாயில் கோயில் வளாகத்தின் வெளிப்புறத்தே நம்மை அழைத்துச் செல்கிறது. இதைச் சுற்றுவெளியாகக் கொள்ளலாம். இவ்வெளியின் தென்கிழக்கில் சிறு திருமுன் ஒன்று சற்று இறக்கமான பகுதியில் மலையிலிருந்து கீழிறங்கும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தெய்வ வடிவத்தைச் சாவான் என்றழைக்கிறார்கள். சமபங்கத்தில், இரு கைகளையும் குவித்து வணக்க முத்திரையில் நிற்கும் இந்த ஆண் வடிவத்தின் மார்பைப் பதக்கம் வைத்த ருத்திராக்க மாலை அழகு செய்கிறது. இடப்பக்கக் கொண்டையும் இடையில் கத்தியும், இடுப்பில் ருத்திராக்க அரையணியுமாய், நீள் செவிகளுடன், அரையாடையும் கங்கணங்களும் சலங்கைகளும் வளைகளும் பூண்டு வீரத்திருமகனாய்க் காட்சியளிக்கும் இந்த வடிவம் ஊரகத் தெய்வமாகலாம்.

இந்தச் சுற்றுவெளியில்தான் முருகன் கோயிலின் முதன்மை வாயிலமைந்துள்ளது. முகப்பில் யாளிப் பிடிச்சுவருடன் அமைந்துள்ள படிகள். வாயிலின் தலைப்பில் சாலை சிகரம் சிறப்பூட்டுகிறது. இந்த வாயிலுக்கு எதிரே அவரது ஊர்தியான மயிலை நிறுத்தி மண்டபமொன்று எழுப்பியுள்ளார்கள். இரண்டு மயில்கள் சிற்பங்களாய் நிற்கும் இந்த மண்டபத்தில் பிள்ளையாரின் ஊர்தியான எலி பேரளவினதாய்ச் செய்துவைக்கப்பட்டுள்ளது. இதன் கால்களுக்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படும் கல்வெட்டு தட்டார்ப்பாளையம் பெம்மன நாயக்கரின் மனைவியார் ரங்காயிஅம்மாள் இதைச் செய்தளித்ததாகக் கூறுகிறது. இந்த மயில் மண்டபத்திற்கு அருகில் மேலும் ஒரு சிறிய மண்டபம் தகரக் கூரையுடன் நிற்கிறது.

மயில் மண்டபத்திற்குப் பின்னால் கொடித்தளமும் அதற்குப் பின்னால் தீபத்தளமும் காணப்படுகின்றன. இந்த தீபத்தளம் கீழே ஜகதி, இடையில் கண்டம், மேலே பட்டிகை என்ற அமைப்புடையது. இந்தத் தளத்தின் மேல் நாற்புறமும் சிறு தூண்கள், மூன்று சதுரப் பகுதிகளும் இடையிடையே கட்டுகளும் கொண்டு மேலெழுகின்றன. இவை தாங்கும் உத்திரத்திற்கு மேல் வாஜன அணைப்பில் வலபி. மேலே கூரையமைந்து பக்கங்களில் கபோதமாய் இறங்கியுள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ள நெடிய தூண், சதுரப் பாதத்தின் மேல் நான்கு மூலைகளிலும் நாகபந்த அமைப்பு கொண்டு விஷ்ணுகாந்தக் காலுடன் வளர்ந்தோங்கி எழுகிறது. ஏறத்தாழப் பதினைந்து அடி உயரமுள்ள இந்தத் தூணின் தலைப்பகுதியில் தாமரைக்கட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், தாமரைப்பலகை போன்ற உறுப்புகள் வரிசையுற அமைந்துள்ளன. தாமரைப் பலகையின் மேல் இரும்புச்சட்டம் கொண்ட வளையத்தாங்கி காட்டப் பட்டுள்ளது. இதன் மீது விழாக் காலங்களில் தீபச்சட்டிகளைப் பொருத்துவதாகக் கோயிலார் குறிப்பிட்டார்கள். இந்த தீபத்தளத்தின் பட்டிகை முகப்பில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு இதைச் செய்தளித்தவர் இக்கோயில் சார்ந்த ஆறாங்கொத்தில் பணிபுரிந்த பெத்தாயி அம்மாளின் திருமகள் மலையாத்தாள் எனும் தகவலைத் தருகிறது.

மலையின் வடபுறத்தே கோடைக்கானல் தூண்பாறைகள் போல இரண்டு மிகப் பெரிய பாறைகள் வானைத் தடவுவது போல நெடிதுயர்ந்துள்ளன. இவற்றிற்குச் செல்லும் வழியில் மலைச் சரிவில் அமைந்துள்ள இயற்கையான குகைத்தளமொன்றில் சுனையொன்று அமைந்துள்ளது. இந்தச் சுனையிலிருந்துதான் முன்பெல்லாம் இறைக்கோயிலுக்குத் திருமுழுக்கு நீர் செல்லுமாம். இப்போது குழாய் இணைப்புடன் நீர் வந்துவிட்டதால் சுனைக்கு யாரும் வருவதில்லை.

நெடும் பாறைகள் இரண்டனுள் ஒன்றின் மீது சிறியதொரு பிள்ளையார் திருமுன், உச்சிப்பிள்ளையார் கோயில் என்ற அன்பழைப்புடன் இடம் பெற்றுள்ளது. இதற்குச் செல்லும் வழியில் மலைப்பாறையில் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதை நடுவண் அரசின் கல்வெட்டுத்துறை 1928—29இல் படியெடுத்துக் கல்வெட்டின் சுருக்கத்தைப் பதிப்பித்துள்ளது.[1] இப்பதிப்பில் சொல்லப்பட்டிருக்கும் காலத்திற்கும் கல்வெட்டில் காணப்படும்

---

1 **ARE 438 of 1928-29**

காலத்திற்கும் இருநூறு ஆண்டுகள் வேறுபாடு உள்ளது. கல்வெட்டு 1693இல் வெட்டப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டறிக்கை இருநூறு ஆண்டுகள் பின் தள்ளி 1893 என்று பிழையாகக் குறிப்பிட்டுள்ளது. தலையாரி குஞ்சுக்காளி என்பாரின் மகன் சங்கரன் ஸ்ரீமுக ஆண்டில் முழு நிலவும் பூச மீனும் கூடிய தைத்திங்கள் ஆறாம் நாளில், உச்சிப்பிள்ளையார் கோயில் செல்வதற்கான படிக்கட்டுகளை வெட்டியளித்த கொடையைப் பற்றிக் கூறும் இக்கல்வெட்டு, அம்மன் கோயிலுக்கும் முருகன் கோயிலுக்கும் இடையிலுள்ள பாறையில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டோடு எழுத்தமைதியில் ஒத்துப் போகிறது. இதனருகில் இருந்ததாகக் கல்வெட்டறிக்கை குறிப்பிடும் மற்றொரு கல்வெட்டை இப்போது காணமுடியவில்லை.[2]

உச்சியிலிருக்கும் பிள்ளையார் கோயில் சிறியதொரு திருமுன்னாகும். கருவறையும் சிறியதொரு முகமண்டபமும் கொண்டமைந்துள்ள இத்திருக்கோயிலின் கருவறையில் பிள்ளையார் தம் ஊர்தியோடு எழுந்தருளியுள்ளார். முகமண்டபத்தைத் தாங்கும் இரண்டு தூண்களில் ஒன்றில் ஆடவல்லானும் எதிர்த்தூணில் காளியன்னையின் ஆடற்கோலமும் காட்டப்பட்டுள்ளன. அம்மையும் அப்பனும் ஆடுவதைக் கருவறை உள்ளிருந்து பார்ப்பவராய்ப் பிள்ளை.

கபிலர் மலைத் திருக்கோயிலுடன் தொடர்புடையனவாய் இரண்டு நூல்கள் வெளியாகியுள்ளன. பிள்ளைப் பெருமாள் சிறை மீட்டான் எழுதிய கபில மலைக் கோவை என்னும் நூல் 10.9.1973 இல் வெளியிடப்பெற்றுள்ளது. சிறை மீட்டான் கவிராயர், பாகை என்னும் நகரத்தைச் சேர்ந்தவராகவும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகவும் குறிக்கப்படுகிறார். இவரது பிற நூல்களாக மல்லைச் சோழீச்சுரக் கோவை, அர்த்தநாரீச்சுரச் சந்திரசேகர மாலை என்பன சுட்டப்பட்டுள்ளன. இந்நூலில் வரலாற்றுச் செய்திகள் ஏதுமில்லை. கபிலர் மலைப் பைந்தமிழ்ப் பாமாலை என்னும் நூல் கபிலர் மலை சாமி என்பாரால் 20.1.1989ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்விலக்கியத்திலிருந்தும் வரலாற்றுத் தகவல்கள் எதையும் பெறமுடியவில்லை.

கபிலர் மலைத் திருக்கோயிலில் கிடைத்திருக்கும் கல்வெட்டுகளுள் காலம் சுட்டிப் பழமையாய் நிற்பது தலையாரி

---

2 சாதாரண ஆண்டில் செட்டியார் பெருமகனார் ஒருவர் சில படிகளை வெட்டியதாகக் கூறும் இக்கல்வெட்டு இன்று காணுமாறு இல்லை. ARE 438 of 1928-29.

குஞ்சுக்காளியின் 1693ஆம் ஆண்டுக் கல்வெட்டுதான். கட்டடக் கலை அமைப்பு கொண்டு பார்க்கும்போது தூண் போதிகைகளின் வளர்ச்சி, தாங்கு தள உறுப்புகளின் சேர்க்கை ஆகியன இத்திருக்கோயில்கள் பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டில் எழுப்பப் பட்டிருக்கலாம் என்று எண்ணச்செய்கின்றன.

### *பின்னிணைப்பு*

### *ஏற்கனவே நடுவண் அரசால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு*

**அ. உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வழியிலுள்ள பாறைக் கல்வெட்டு**

1 தலையாரி குஞ்சுக்காளி மகன் சங்கரன்
2 படிக்கட்டுபயம் கலியுக சகாற்த்தம் 47
3 94இல் னாளது ஸ்ரீமுக ஸ்ரீ தைய் 4 உ பவுர்ண
4 மையும் பூச நட்சத்திரமும் சுப்பிறமண்
5 ணியால்[1] டச்சிக்
6 கவும்[2] உ

### *புதிய கல்வெட்டுகள்*

**அ. மயில் மண்டப எலி ஊர்தியிலுள்ள கல்வெட்டு**

1 தட்டாற் ப[ா*]லய
2 ம் பெம்மன நாய
3 க்கன் சமுசாறம் றங்
4 காயி அம்மால் உபய
5 ம்

**ஆ. மலைப்பாதையின் தொடக்கத்திலுள்ள தென்புற யானைச் சிற்பத்தில் காணப்படும் கல்வெட்டு**

1 நந்தாக்கிச[3]
2 வருடம் காற்த்தி
3 கை மாசம்
4 நல்ல தம்பி

---

1 சுப்பிரமணியர் என்று படிக்கவும்.

2 ரட்சிக்கவும் என்று படிக்கவும்.

3 நந்தன ஆண்டு என்று கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 5 | மகள் ப | 8 | நல்ல மு |
| 6 | ச்சை செ | 9 | த்து உ |
| 7 | ண்பகம் | 10 | பையம் |

இ. மகாமண்டபக் கிழக்கு வாயிலின் படியிலுள்ள கல்வெட்டு

1 புரிகை பெருமந்

ஈ. இடும்பன் கோயிலின் இடப்புறமுள்ள குகையை ஒட்டியுள்ள பாறைக் கல்வெட்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | பிறமாதி ௵ | 4 | பிலை மலை சாறாய |
| 2 | பங்குனி ௴ 19 க | 5 | முத்து கருப்பன் கு |
| 3 | வெள்ளைய பிள்[ளை][1] | 6 | கை உபயம் |

உ. மயில் மண்டபத்திற்குப் பக்கத்திலுள்ள படி முகப்பிலுள்ள கல்வெட்டு

1 ம. கருப்ப கவுண்டர் 13.12.1955

2 5 படி உபயம்

ஊ. தீபத்தூண் தள முகப்பிலுள்ள கல்வெட்டு

1 ளா விழம்பி௵[2] சித்திரை மாசம் உ 6 உ தி [க

2 பி]லை மலையில் ஆராங்கொத்து பெத்தாயி மகள்

3 மலையாத்த[ா*]ள் தீபக[ம்*]பி குரடு உபயம் சதா சேருவை

---

1 இந்த வரி முதலில் விடப்பட்டுப் பிறகு சேர்க்கப்பட்டுள்ளதால் சிறிய எழுத்துக்களில் இடையீடாகக் காட்சியளிக்கிறது. இரண்டாம் வரியிலுள்ள 'க' நான்காம் வரியிலுள்ள 'பிலை மலை' என்பதோடு சேர்ந்து கபிலை மலை என்ற தொடர் ஒழுங்கைத் தரும்.

2 ஏவிளம்பி ஆண்டாகக் கொள்ளலாம்.

# 2. காசுகள்

ஆறுமுக சீதாராமன்

## அ. இரண்டாம் நந்திவர்மர் காசு

பல்லவ மன்னர் இரண்டாம் நந்திவர்மர் (கி.பி. 731–796) வெளியிட்ட வெள்ளிக்காசுகள் இரண்டு காஞ்சிபுரம், கரூர் பகுதிகளில் கிடைத்துள்ளன. இவற்றின் முன்பக்கத்தில் வலப்புறம் நோக்கி நிற்கும் காளை காட்டப்பட்டுள்ளது. காளைக்கு மேலுள்ள பகுதியில் 'வெகா' என்னும் தமிழ்ச்சொல் பல்லவர் காலத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் பின்பக்கத்தில் சுற்றிலும் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள வட்டத்திற்குள் செங்குத்தான நிலையில் இரண்டு குடைகள் காணப்படுகின்றன. இக்காசின் எடை 1.750 கிராம்.



முன்பக்கம்



பின்பக்கம்

காஞ்சிபுரம் அருகில் ஓடும் வேகவதி ஆற்றிற்கு வெஃகா என்று பெயர். இப்பகுதி திருமால் திருப்பதிகளுள் ஒன்றாக விளங்கி வைணவத்தை வளர்த்துள்ளது. வெஃகா ஆறு இரண்டாம் நந்திவர்மர் காலத்தில் சிறப்புற்று விளங்கியதாகக் கசாக்குடிச் செப்பேட்டின் வழி அறிகிறோம். இவருடைய சிறப்பான ஆட்சியில் இந்த ஆறு, முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் புனித ஆறாகவும் விளங்கியதால் ஆற்றின் பெயரில் இக்காசை வெளியிட்டிருக்கலாம். கசாக்குடிச் செப்பேடு, வெஃகா தமிழ்க் காசு போன்றவற்றைப் பார்க்கும்போது

இரண்டாம் நந்திவர்மர் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்ததை அறியமுடிகிறது.

### ஆ. திருவாரூர்க் காசுகள்

தஞ்சை நாயக்கர், மராட்டியர் காலத்து ஊர்ப்பெயர் பொறித்த இருவகைச் செப்புக்காசுகள் அண்மையில் திருவாரூரில் கிடைத்துள்ளன. முதல் வகைக் காசில் முன்பக்கத்தில் கணபதியின் அமர்நிலை வடிவமும் பின்பக்கத்தில் சிவலிங்கமும் காணப் படுகின்றன. இலிங்கத்தின் கீழே 'ஆரூர்' என்ற ஊர்ப் பெயர் பதினேழாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது. காசின் எடை 3.300 கிராம். இரண்டாம் வகைக் காசில் முன்பக்கத்தில் 'திரு' என்றும் பின்பக்கத்தில் 'வருர்' என்றும்

**வகை – I**



**முன்புறம்**



**பின்புறம்**

**வகை – II**



**முன்புறம்**



**பின்புறம்**

பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது. இக்காசின் எடை 2.900 கிராம் ஆகும்.

சைவ சமயத்தின் முக்கியத் தலமாய் ஆரூர் திகழ்ந்தது. சேக்கிழார் சிறப்பித்துப் பாடும் திருநகரச் சிறப்பு ஆரூருக்கு அன்றி வேறு நகருக்குக் கிடைக்கவில்லை. பெரிய புராணத்தில் சோழ வளநாட்டில் உள்ள மற்றெந்தத் திருநகரமும் கூறப்படாமல் ஆரூர் கூறப்பட்டமைக்கு அந்நகர் பெற்றிருந்த முக்கியத்துவமே காரணமாகும்.

ஆரூர்த் திருக்கோயில் திருமூலட்டானத்தில் உள்ள கணபதியின் செப்புத்திருமேனி சிறப்பானதாகும். இவரை *'ஐங்கலங்காசு விநாயகர்'* என்று அழைக்கின்றனர். 'ஐங்கரங்காசு விநாயகர்' என்ற பெயர் நாளடைவில் மக்கள் அழைப்பில் ஐங்கலங்காசு விநாயகர் என மருவிற்று. முதல் வகைக் காசில் உள்ள கணபதிக்கும் ஆரூர்க் கோயிலில் உள்ள கணபதித் திருமேனிக்கும் தொடர்பு இருக்கலாம். இந்தக் கோயிலில் உள்ள கணபதியின் நினைவாகத் தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள் இக்காசை வெளியிட்டிருக்கலாம்.

இரண்டாவது வகைக் காசை மராட்டிய மன்னர்கள் வெளியிட்டிருக்கலாம். இந்த இரண்டு காசுகளுமே திருவாரூரில் அச்சடிக்கப்பட்டு அந்த ஊரிலேயே புழக்கத்தில் விடப்பட்டிருக்கலாம்.

---

*கொற்றச் சோழரும் கொங்கர்ப் பணிவும்*

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு பராந்தகக் கொங்க வாள் என்றொரு படையமைப்பைச் சுட்டுகிறது. இப்படையினர் கொங்கு நாடு சேர்ந்த சிறந்த வாள்வீரராகலாம். இக்கொங்கர்கள் தனியுரிமை கொண்டவராய்ச் சங்க காலத்தே வாழ்ந்தனரோ என்று கருதுமாறு சங்கப் பாடல்கள் சில அமைந்துள்ளன. நற்றிணைப் பாடலொன்று (10) இக்கொங்கர் களைப் பணிய வைக்க, நெடிய தேர்களைக்கொண்ட வலிமை பொருந்திய சோழர்களே பழையன் என்பானின் வேற்படைத் துணையைத் தேடிக் கொண்டதாகத் தகவல் தருகிறது. சங்க காலத்திலேயே கொங்கர்களைப் பணிய வைத்த சோழர்களின் இந்த வெற்றிவரலாறு பெரியதொரு இடைவெளிக்குப் பிறகு முதலாம் ஆதித்தரின் கொங்கு வெற்றியினால் மீண்டும் தொடர்ந்தது போலும்.

# 3. திருவமைந்த திருமால் செப்புத் திருமேனி

*ம. காந்தி*

வேலூருக்கு எதிரில் பாலாற்றின் வடகரையில் அமைந்துள்ள கழிஞ்சூர், வேலூர் சித்தூர் நெடுஞ்சாலையின் மேற்கில் இருக்கின்றது. கழிஞ்சூரில் உள்ள அருள்மிகு சுவர்ணமுகீசுவரர் திருக்கோயிலுக்குத் தெற்கில் சுமார் இருநூறு அடி தொலைவில் உள்ள நாராயணசாமி திருக்கோயில் வளாகத்தில் 1993இல் திருமாலின் செப்புத்திருமேனி ஒன்று நிலத்தடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கோயில் கோபாலபுரத்தைச் சேர்ந்ததாகும். வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தின் குடியாத்தம் வட்டத்தில் உள்ளது இச்சிற்றூர்.

நின்ற கோலத்திலிருக்கும் இத்திருமால் திருமேனியின் தலையைக் கிரீட மகுடம் அணிசெய்கிறது. இந்த மகுடத்தின் உச்சியில் தாமரை காட்டப்பட்டுள்ளது. திருமாலின் நான்கு கைகளில் பின்னிரண்டு கைகளில் சக்கரமும் சங்கும் உள்ளன. இக்கருவிகளின் சுடரொளியை நன்கு சித்தரித்துள்ளனர். சக்கரத்தில் எட்டு ஆரங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஆரக்காலுக்கும் மறுபக்கம் தெரியும் வண்ணம் இடைவெளி விடப்பட்டுள்ளது. இடப் பின்கையில் இருக்கும் சங்கு, விரல்களுடன் உடைந்து தற்பொழுது இரும்புக் கம்பியால் கட்டப்பட்டுள்ளது. இரண்டு தோள்களின் மீதும் ஸ்கந்த மாலை; மேற்கைகளில் முத்துக் கங்கணங்கள்.

முன்னிரண்டு கைகளில் வலக்கை காக்கும் நிலையிலும் இடக்கை கடியவலம்பித நிலையிலும் இருக்கின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் உதரபந்தம் திரட்சியாக வடிக்கப்பட்டிருக்கிறது. இடுப்புப்பட்டையில் சிம்ம முகம் தெளிவாக இல்லை. திருமாலின் இடை நடுவே சங்கிலியுடன் உள்ள மாவிலை ஒன்று தொங்குகிறது.

பிற்காலச் சோழர் கலைமுறையில் அமைந்துள்ள இத்திருமேனி தாமரைத் தளத்தின் மீது நிற்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. தாமரைத் தளத்தின் இரு பக்கங்களிலும் மேல் நோக்கி நிற்கும் சட்டங்கள், சிற்பத்திற்குத் திருவாசி இருந்திருக்குமோ என்று நினைக்கத் தூண்டுகின்றன. திருமேனியின் உயரம் 33.5 அங்குலம். தளத்தின் உயரம் ஏழு அங்குலம்.

# 4. தளிச்சேரிக் கல்வெட்டு*

மு. நளினி, இரா. கலைக்கோவன்

தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் திருக்கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகைச் சுவரின் வெளிப்புறத்தே வெட்டப்பட்டிருக்கும் மிக நீண்ட கல்வெட்டுகளுள் ஒன்றே தளிச்சேரிக் கல்வெட்டு. சுற்றுமாளிகை வட வாயிலின் வலப்புறத்தும் இடப்புறத்துமாய் மூன்று பிரிவுகளாகக் காணப்படும் இக்கல்வெட்டின் மொத்த நீளம் 55.78 மீட்டர். எழுபத்து மூன்று வரிகளில் அமைந்துள்ள இக்கல்வெட்டின் மூன்று பிரிவுகளில், முதல் பிரிவு 3.09மீ. உயரமும் 4.50மீ. நீளமும் கொண்டமையுமாறு வாயிலின் வலப்புறமுள்ள சுவரில் வெட்டப்பட்டுள்ளது. ஆதி தளத்தின் உத்திரத்தில் தொடங்கும் இக்கல்வெட்டு, சுவரில் இறங்கி ஜகதி வரை தொடர்கிறது. கல்வெட்டு வெட்டப்பட்டுள்ள சுவர்ப் பகுதியில் அரைத்தூண்கள் எதுவும் இல்லாமையினால் கண்டப் பகுதியில் பாதங்கள் காட்டப்படவில்லை. அதனால் சுவரிலும் கண்டத்திலும் கல்வெட்டு தடையின்றித் தொடர்கிறது. ஜகதிப் பகுதியை சில இடங்களில் மண் மூடியுள்ளது.

கல்வெட்டின் இரண்டாம் பிரிவு, வாயிலின் இடப்புறச் சுவரில் 3.10மீ. உயரமும் 16.32மீ. நீளமும் கொண்டமைந்துள்ளது. உத்திரத்தில் தொடங்கி ஜகதியில் முடியுமாறு வெட்டப்பட்டுள்ள இப்பிரிவு, முதல் பிரிவைப் போல் நான்கு மடங்கு நீளத்தில் அமைந்துள்ளது. இதைப் போல், மேலும் ஒரு மடங்கு நீளமாய் அமைந்துள்ள மூன்றாம் பிரிவே, இம்மூன்றனுள் மிக நீளமானது. 1.74மீ. உயரமும் 34.96மீ. நீளமும் கொண்டுள்ள இப்பிரிவு உத்திரத்தில் தொடங்கிச் சுவரின் கீழ்ப்பகுதியில் முடிந்துவிடுகிறது. கண்டப் பகுதியில் வேறொரு கல்வெட்டு காணப்படுகிறது. ஜகதியில் கல்வெட்டெதுவும் இல்லை. இந்த மூன்றாம் பிரிவு வடக்குச் சுவரின் இறுதிப் பகுதிவரை, அதாவது வடமேற்கு மூலையிலுள்ள குபேரக் கடவுளின் சுற்றாலைத் திருமுன் தொடக்கம்வரை நீண்டுள்ளது.

தளிச்சேரிக் கல்வெட்டின் பெரும்பகுதி இன்றும் நல்ல நிலையில், படிக்குமாறு உள்ளது. ஒரு சில இடங்களில் கற்கள் செதில்களாகப் பிளந்து உதிர்ந்திருப்பதால் சில எழுத்துக்கள் மட்டுமே ஆங்காங்கு விட்டுப்போயுள்ளன. இது, கல்வெட்டை முதன்முதலாகப்

---

* இக்கட்டுரைக்கான ஆய்வுப்பணிகள் பேரா.கோ.வேணிதேவி அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

படியெடுத்த காலத்திலேயே இருந்த நிலைதான். திரு. ஹுல்ஷ் 1892இல் பதிப்பித்த இக்கல்வெட்டை, 1969இல் டாக்டர் இரா. நாகசாமியும் 1985இல் திரு.வே.மகாதேவனும் மறுபதிப்பு செய் துள்ளனர். இவர்தம் மறுபதிப்புகள் இரண்டுமே முதற்பதிப்பை அப்படியே பின்பற்றியுள்ளன. ஆனால் இக்கட்டுரையாசிரியர்கள் கோயிலில் தளிச்சேரிக் கல்வெட்டை முழுமையாகப் படித்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடத்தோடு அதை ஒப்பிட்டுப் பார்த்தபோது பதிப்பிற்கும் இருப்பிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் சிலவற்றைக் கண்டறிய முடிந்தது.[1] விட்டுப்போனதாக முதற்பதிப்பு குறிப்பிடும் சில சொற்கள் இருப்பதுடன், தவறாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் சில சொற்களின் சரியான வடிவங்களும் இம்மறுஆய்வினால் வெளிச் சத்திற்கு வந்துள்ளன. இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் அனைத்தும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

### *எழுத்தமைவு*

மிகத் தெளிவாகவும் திருத்தமாகவும் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டில் மிகச் சில இடங்களிலேயே கிரந்த எழுத்துக்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு செய்தியின் முடிவிலும் அச்செய்தி முடிந்துவிட்டதைக் குறிக்கும்விதமாக இரண்டு செங்குத்துக் கோடுகள் போட்டு அவற்றின் அருகே ஒரு கிடைக்கோடு போட்டிருக்கும் பாங்கு சிறப்புக்குரியதாகும். இவ்வமைப்பு கல்வெட்டின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை பின்பற்றப்பட்டுள்ளது. கல்வெட்டில் மெய்யெழுத்துக்கள் எதுவும் புள்ளி பெறவில்லை. இக்கல்வெட்டின் எழுத்தமைவு, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது சில வியப்பூட்டும் நிலைகளை அறிய முடிந்தது. 'டு', என்னும் உயிர்மெய் எழுத்து இக்கல்வெட்டில் மூன்று விதமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஓர் எழுத்தமைவு கசாக்குடிச் செப்பேடுகளில் உள்ள 'டு' போலவும் மற்றொன்று, இராஜராஜீசுவர விமானத்தின் வடக்கு ஜகதிக் கல்வெட்டில் காணப்படும் 'டு' போலவும் பிறிதொரு 'டு', இவ்விரண்டிற்கும் முற்றிலும் மாறுபட்ட நிலையிலும் அமைந்துள்ளதை அறியமுடிந்தது. இது போலவே 'து', 'ட', 'ம' போன்ற உயிர்மெய் எழுத்துக்களும் குறிப்பிடத்தக்க வேறுபாடு களுடன் அமைந்துள்ளன. ஒரு கல்வெட்டின் பல இடங்களில் பயின்று வரும் ஓர் எழுத்து இப்படிக் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுடன் அமைந்திருப்பது, எழுத்தமைவு கொண்டு கல்வெட்டுகளைக் காலக் கணக்கீடு செய்யும் முறையின் உறுதிப்பாட்டை அய்யத்திற்கிடமாக்கி யுள்ளது. மிக விரிவான முறையில், அறிவியல் நோக்குடன் பல்வேறு காலங்களைச் சேர்ந்த கல்வெட்டெழுத்துக்கள் ஒப்பீட்டு முறையில் ஆராயப்பட்டு, அதன் பிறகே தெளிவான எழுத்தமைவுச் சிந்தனைகள்

உருவாக்கப்பட வேண்டும் என்பதை இக்கல்வெட்டின் எழுத்தமைவு ஆய்வு உணர்த்துகிறது.

முதலாம் இராசராசரால் எழுப்பப்பெற்ற மாபெரும் கற்றளியான இராஜராஜீசுவரத்தில் பணியாற்றுவதற்காக மன்னரின் இருபத் தொன்பதாம் ஆட்சியாண்டுவரை அவரால் தரப்பட்ட நிவந்தக்காரர் களைப் பற்றியும் இக்கோயிலுக்கென்றே சோழமண்டலத்துத் தளிச்சேரி களிலிருந்து வரவழைக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகளைப் பற்றியும் விரிவாகப் பேசும் தளிச்சேரிக் கல்வெட்டு தமிழகக் கலை வரலாற்றிற்குக் கிடைத்த மிக அரிய புதையலாகும். கல்வெட்டின் பெரும்பகுதி இங்குப் பணியமர்த்தப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகளைப் பற்றியே பேசுவதால் இக்கல்வெட்டு தளிச்சேரிக் கல்வெட்டு என்றழைக்கப்பெறலாயிற்று.

*தளி*

தளிச்சேரி என்ற கூட்டுச் சொல்லில் உள்ள தளி, சேரி என்னும் இரண்டு சொற்களும் ஆய்வுக்குரியவை. சங்க இலக்கியங்களில் இவ்விரண்டு சொற்களுமே பயின்று வந்துள்ளன. 'தளி' என்ற சொல் புறநானூறு தவிர்த்த ஏனைய ஏழு தொகை நூல்களிலும் இடம் பெற்றுள்ளது. பத்துப்பாட்டிலக்கியங்களில் மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் மலைபடுகடாமும் தளியைக் குறிக்கின்றன. இவையனைத்திலும் தளி என்ற சொல் மழை, நீர்த்துளி, மழைத்துளி என்னும் பொருள்களிலேயே ஆளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

'கார்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்'[2]

'தான்வந் தன்றே தளிதரு தண்கார்'[3]

'தளிபதம் பெற்ற கான்உழு குறவர்'[4]

'வான்தளி பொழிந்த காண்பின் காலை'[5]

'மாமழை இடியூஉத் தளிசொரிந் தன்றே'[6]

'முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகைபெற் றாங்கு'[7]

'தளிபொழி சாரல் அதர்மலர் தாஅய்'[8]

'தளிமழை பொழியுந் தண்பரங் குன்றில்'[9]

'தற்பாடிய தளியுணவிற்
புள்தேம்பப் புயல்மாறி'[10]

'தளிபொழி கானம் தலைதவப் பலவே'[11]

இரட்டைக் காப்பியங்களில் தளி இடம் பெறவில்லை. ஆனால் சிலம்பின் உரைகாரரும் அடியார்க்குநல்லாரும் தளித்தெரு, தளிப் பாட்டு, தளிப்பெண்டுகள், தளியிலார் என்னும் சொற்களைப் பொருள் விளக்கம் தரும்போது எடுத்தாள்கிறார்கள்.[12]

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய சிறுபஞ்ச மூலத்தில் 'தளி' இடம்பெற்றுள்ளது.

'நீர்அறம் நன்று நிழல்நன்று தன்இல்லுள்
பார்அறம் நன்றுபாத்து உண்பானேல் — பேர்அறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாம் சால உடன்'[13]

சங்க இலக்கியங்களில் மழையையும் நீர்த்துளியையும் குறித்த இச்சொல், சிறுபஞ்சமூலக் காலமான கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில்[14] பொருள் மாறி, கோயிலைக் குறிக்கப் பயன்பட்டுள்ளமை காலவோட்டத்தில் சொல்லும் பொருளும் பெறும் மாற்றங்களை உணர்த்துவதாய் அமைகிறது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அப்பர் பெருமானின் பதிகங்களிலும் 'தளி', கோயில் என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது.

'கச்சிப் பலதளியும் ஏகம் பத்தும்
கயிலாய நாதனையே காண லாமே'[15]

'திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே'[16]

கி.பி. 669இல் இருந்து 690வரை அரசாண்டதாகக் கருதப்படும் பல்லவ மன்னர் முதலாம் பரமேசுவரவர்மர்[17] வழங்கிய கூரம் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதி மூன்றிடங்களில் தளி என்ற சொல்லைக் கோயில் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளது.[18] தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கோயிலைக் குறிக்கும் சொல்லாகத் தளி முதன்முதலாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது கூரம் செப்பேடுகளில்தான் என்று துணியலாம். பாண்டியர் பகுதியில் கி.பி. 770இல் வெட்டப்பட்ட பராந்தகன் நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டு 'கற்றளி' என்ற சொல்லின் வழி தளியைக் குறிக்கிறது.[19] கோயிலைக் குறிக்கும் 'தளி' என்ற இந்தச் சொல்லைத் 'தழி' என்று பிழையாகப் புரிந்துகொண்டு வழிதவறிப்போன ஆய்வர்களும் இல்லாமல் இல்லை.[20]

***சேரி***

தளிச்சேரி என்னும் சொற்றொடரில் உள்ள சேரி என்ற இரண்டாம் சொல் தொல்காப்பியப் பழமையது. அகத்திணை

இயலிலும் செய்யுள் இயலிலும் உள்ள நூற்பாக்களில் இடம் பெற்றுள்ள இச்சொல்லுக்குத் தெரு, குடியிருப்பு என்று இருவேறு பொருட்கள் தரப்பட்டுள்ளன.

'ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே'

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தருமிடத்து நச்சினார்க்கினியர் சேரியைத் தெரு என்ற பொருளில் பார்க்கிறார்.[21] இது பொருந்து வதாகத் தெரியவில்லை.

செய்யுளியல் நூற்பா, 'ஊரும் அயலும் சேரி யோரும்'[22] என்று சொல்லுமிடத்து, 'ஊரும்' என்ற சொல் வழி ஊரிலுள்ள தெருக் களையும் அங்கு வாழ் மக்களையும் உள்ளடங்கக் கூறியிருப்பதால் சேரி, ஊர் சார்ந்து அதன் புறத்தேயிருந்த குடியிருப்புப் பகுதியென்பதும் தெரு அல்ல என்பதும் புலனாகும். இக்கருத்துக்குப் பல சங்கப் பாடல்கள் அரணாகின்றன.

'ஊரும் சேரியும் உடனியைந்து அலரெழ'

என்னும் அகநானூற்று அடி[23] ஊரையும் சேரியையும் இரண்டு தனிப்பகுதிகளாகக் காட்டுவது எண்ணத்தக்கது. 'கல்லகத் ததுஎம் ஊரே அம்பற்சேரி அலராங் கட்டே' என்னும் ஐங்குறுநூற்று அடிகளுக்கு உரையெழுதுமிடத்து உரைவேந்தர் அவ்வை. சு. துரைசாமி, 'சேரி' என்ற சொல்லுக்கு, 'ஊர்க்குப் புறமாய்ச் சேர இருப்பது சேரி' என்று பொருள் கூறுகிறார்.[24] 'கையதை சேரிக்கிழவன் மகளேன் யான்' என்னும் கலித்தொகை அடி[25] இவ்விளக்கத்திற்குத் துணை நிற்கிறது.

'நிலாவின் இலங்கு மணல்மலி மறுகிற்
புலால்அம் சேரிப் புல்வேய்க் குரம்பை'

என்னும் அகநானூற்று அடிகளிலுள்ள மறுகு எனும் சொல் தெருவைக் குறிப்பதாகும்.[26] 'நிலாவைப் போல் விளங்கும் மணல் மிக்க தெருவிலுள்ள புல்லால் வேயப்பெற்ற குடிசைகளையுடைய புலால் நாறும் சேரியாகிய எம் பதி' என்று இவ்வடிகளுக்கு உரையாசிரியர் பொருள்விளக்கம் தருகிறார். இவ்விளக்கமும் பாடலடிகளில் தெருவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள 'மறுகு' எனும் சொல்லும் சேரியின் பொருள் குடியிருப்பென்பதைத் தெளிவாக்குகின்றன.

நற்றிணையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஏழு பாடல்களிலும் சேரி, குடியிருப்பையே பொருளாய்ச் சுட்டுகிறது.

'வாலிழை மகளிர் சேரித் தோன்றும்'[27]

'மல்லல்அம் சேரி கல்லெனத் தோன்றி'[28]

'தமர்தம் அறியாச் சேரியும் உடைத்தே'[29]

என்னும் நற்றிணை அடிகளுள் இறுதிக் காட்டு சிறப்புடையதாகும். இதன் வழி, பெரிய அளவிலான குடியிருப்புகள் ஊர்ப்புறத்தே இருந்தமையும் அவை சேரியென்று அழைக்கப்பட்டமையும் மிகத் தெளிவாகத் தெரியவருகின்றன.

பத்துப்பாட்டிலக்கியங்களுள் ஒன்றான மதுரைக்காஞ்சியில் ஐந்து இடங்களில் சேரி இடம்பெறுகிறது.[30] இவ்வைந்து இடங்களிலுமே சங்கு குளிப்பவர் குடியிருப்பு, பரத்தையர் குடியிருப்பு, மறவர் குடியிருப்பு என்று குடியிருப்புப் பகுதிகளைச் சுட்டவே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலம்பிலும் 'குடியிருப்பு' என்ற பொருளிலேயே சேரி ஆளப்பட்டுள்ளது. தெருவைக் குறிக்கத் தெரு, வீதி, மறுகு எனப் பல சொற்கள் இளங்கோவால் பயன்படுத்தப் பட்டுள்ளன.

'பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்'[31]

'பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்'[32]

'மலைய மாருதம் திரிதரு மறுகில்'[33]

சிலம்பில் நான்கு இடங்களில் சேரி என்னும் சொல் எடுத்தாளப் பட்டுள்ளது.

'மாலைச் சேரி மருங்குசென் றெய்தி'[34]

மாலைச் சேரியை ஒழுங்குபட்ட பரதேசிகளின் இருப்பாக அரும் பதவுரைகாரரும் ஒழுங்குபட்ட சேரியென்று அடியார்க்குநல்லாரும் விளக்குகின்றனர். கானல்வரியில் வலைவாழ்நர் சேரி,[35] பரதவர் சேரி[36] எனக் குறிக்குமிடங்களிலும் அழற்படு காதையில் மறவோர் சேரி[37] எனச் சுட்டுமிடத்தும் குடியிருப்பு என்னும் பொருளையே 'சேரி' தருகிறது. கட்டுரைக் காதையில் 'ஊரீர் முறையோ, சேரியீர் முறையோ'[38] என்று கண்ணகி அறைகூவலிடும் இடத்து, சேரி, ஊர் சார்ந்த புறக் குடியிருப்புப் பகுதியாக நிலைபெற்றுவிடுகிறது.

ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம் ஆகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் சேரி என்ற சொல் குடியிருப்பு என்னும் பொருளிலேயே தொடர்ந்து பயின்று வந்துள்ளது. சம்பந்தரும்,

'ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்'[39]

என்று பரதவர் குடியிருப்பைச் சேரி என்ற சொல்லாலேயே சுட்டுகிறார்.

கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும்கூட சேரி என்ற சொல் குடியிருப்புப் பகுதிகளையே சுட்டிவந்துள்ளது. தெருக்கள், 'தெரு' என்றே கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. இராஜராஜீசுவரம் கல்வெட்டுகளே பல இடங்களில் தெருக்களைப் பெயர் சொல்லி 'இன்ன தெரு' என்றழைப்பதைப் பார்க்கமுடிகிறது. தஞ்சாவூர்ப் புறம்படி சேர்ந்த வில்லிகள் தெரு, மடைப்பள்ளித் தெரு, காந்தர்வத் தெரு, வீரசோழப் பெருந்தெரு, இராஜ வித்யாதரப் பெருந்தெரு எனப் பல தெருக்கள் இக்கல்வெட்டுகளால் சுட்டப்பெறுகின்றன.[40] அதனால் தளிச்சேரி என்று இராஜராஜீசுவரம் கல்வெட்டு குறிப்பது கோயில் சார்ந்ததொரு குடியிருப்பையே தவிர தெருவையல்ல என்பது தெளிவாதல் காண்க. குடியிருப்பின் பிரிவுகளை உணர்த்தச் சிறகு என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கு ஆங்கிலத்தில் 'South wing, North wing' என்று சொல்லுமாறு போல அன்றைக்கு மிக அழகாக வடசிறகு, தென்சிறகு என்று குடியிருப்புகளைத் திசையொட்டிப் பகுத்துள்ளனர். வீதிகளையும் இதுபோல் திசையொட்டிப் பிரித்துச் சுட்டியுள்ளமைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[41]

### *தளிச்சேரி அமைப்பு*

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரி, வடக்கில் ஒரு குடியிருப்பும் தெற்கில் ஒரு குடியிருப்பும் கொண்டிருந்தது. இவை முறையே வடக்குத் தளிச்சேரி, தெற்குத் தளிச்சேரி என்று அழைக்கப்பட்டன. இவ்விரண்டு குடியிருப்புகளுமே வடசிறகு, தென்சிறகு என்றழைக்கப் பட்ட இரு பகுதிகளைக் கொண்டிருந்தன. தெற்குத் தளிச்சேரி தன் இரு பகுதிகளிலும் பகுதிக்குத் தொண்ணூற்றிரண்டு வீடுகள் என நூற்றெண்பத்து நான்கு வீடுகளைக் கொண்டிருந்தது. வடக்குத் தளிச்சேரியின் தென்சிறகில் தொண்ணூற்றைந்து வீடுகளும் வடசிறகில் தொண்ணூற்றாறு வீடுகளும் இருந்தன. இவை தவிர கோயிலின் மற்றொரு திசையிலும் இருபத்தைந்து வீடுகள் கொண்ட குடியிருப்பொன்று இருந்துள்ளது. திசையைக் குறிக்கும் எழுத்துக்கள் கல்வெட்டில் சிதைந்து போயிருப்பதால் இக்குடியிருப்பு எங்கிருந்தது என்பதை அறியக்கூடவில்லை. வடக்கிலும் தெற்கிலும் ஏற்கனவே குடியிருப்புகள் சுட்டப்பட்டிருப்பதாலும் கிழக்கில் திருவாயில்கள் அமைந்திருப்பதாலும் திசையறிய முடியாத இக்குடியிருப்பு மேற்கில் இருந்ததாகத் துணியலாம்.[42]

தளி சார்ந்த இந்த மூன்று குடியிருப்புகளிலுமாய் நானூறு வீடுகள் அமைந்திருந்தன. சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து

வரவழைக்கப்பட்ட நானூறு பெண்களும் ஆளுக்கொரு வீடு பெற்று இங்குக் குடியமர்ந்தனர். குடியமர்ந்த பெண்களின் பெயர்களையும் அவர்கள் எங்கிருந்து வரவழைக்கப்பட்டனர் என்னும் தகவல்களையும் கல்வெட்டு விரிவாய்த் தருகிறது.

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் அமைந்திருந்த முதல் வீடு, கல்வெட்டில் தலைவீடு என்று குறிக்கப் படுகிறது. தெற்குத் தளிச்சேரியின் தென்சிறகுத் தலைவீட்டில் திருவையாற்று உலகமாதேவீசுவரத்தைச் சேர்ந்த நக்கன் சேரமங்கையும் வடசிறகுத் தலைவீட்டில் அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் விக்கிரமதொங்கியும் குடியமர்த்தப்பட்டனர். வடக்குத் தளிச்சேரியின் தென்சிறகுத் தலைவீட்டில் திருவாரூர் பிரம்மீசுவரத்து நக்கன் மூவர் கண்டியும் வடசிறகுத் தலைவீட்டில் நாகபட்டினத்துத்[43] திருக்காரோணத்து நக்கன் இராமியும் குடியமர்ந்தனர். மேற்குக் குடியிருப்பின் தலைவீட்டில் மிறையிலைச் சேர்ந்த நக்கன் அய்யாறு இருந்தார்.[43A]

### *தளிச்சேரிப் பெண்கள் – பொதுப்பெயர்கள்*

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிகளில் குடியமர்த்தப்பட்ட நானூறு பெண்களின் பெயர்களில் பன்னிரண்டு பெயர்களே கல்வெட்டில் படிக்கமுடியாத அளவுக்குச் சிதைந்துள்ளன. ஏனைய முந்நூற்று எண்பத்தெட்டுப் பெண்களின் பெயர்களையும் வகைப்படுத்தியபோது பல தகவல்களைப் பெறமுடிந்தது. இப்பெயர்களுள் மிகச் சிறிய பெயர்கள் இரண்டெழுத்துக்களில் அமைந்துள்ளன. காமி, பூமி, பூதி,[43B] ஆலி, மோடி, மாறி, பால், பொன், உமை, எறி, திரு, கலி, தேவி, பாவை என்னும் இப்பதினான்கு பெயர்களுள் நெடில் குறிலாய் அமைந்த பெயர்களே பெரும்பான்மையாய் உள்ளன. அடுத்துக் குறிலிணைப் பெயர்களைச் சொல்லலாம். குறில்நெடில் பெயர் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. மிக நீளமான பெயர்களாக மூன்று அமைந்துள்ளன. பதினொரு எழுத்துக்கள் கொண்ட பொற்கோயில் தில்லையழகி என்னும் பெயரே மிக நீண்ட பெயராக அமைந்துள்ளது. இதற்கடுத்த நீளமான பெயர்களாக இரவிகுல மாணிக்கம், நீறணி பவழக்குன்று என்னும் பத்தெழுத்துப் பெயர்களைக் கொள்ளலாம்.

இந்நானூறு பெண்களுள் நாற்பது விழுக்காட்டினர் ஊர், கோயில், தெய்வம், அரச மரபுகள் சார்ந்த பெயர்களைக் கொண்டிருக்க, ஏனைய அறுபது விழுக்காட்டினர் பொதுவான பெயர்களை வைத்திருந்தனர். பொதுப்பெயர்களில் எறி, குப்பை, துட்டி, ஊதாரி, மூஞ்சி, பிட்டி, கல்லறை, பந்தல், பட்டம், நிச்சல்,

*கண்டம், சண்டை, மண்டை, எச்சுமண்டை ஆகிய பெயர்கள் சற்று* விநோதமாக உள்ளன. இன்றும் இவை போன்ற விநோதமான *பெயர்களை ஊரகப்பகுதிகளில்* வாழும் மக்கள் வைத்துக்கொள்வது பெயராய்வுகளின்போது தெரியவரும் உண்மையாகும்.

தளிச்சேரிக் கல்வெட்டில் காணப்படும் பெண்களின் பெயர்களுள் இருபது விழுக்காடு நான்கெழுத்துப் பெயர்களாக உள்ளன. முப்பத்துமூன்று பெயர்கள் மூன்றெழுத்துக்களில் முடிகின்றன. இம்மூன்றெழுத்துப் பெயர்களுள் இருபத்திரண்டு பெயர்கள் இகர ஈற்றுப் பெயர்களாக உள்ளன. நான்கெழுத்துப் பெயர்களிலும் ஏறத்தாழ ஐம்பது விழுக்காடு இகர ஈற்றுப் பெயர்களே. இகர ஈற்றை அடுத்து, மகர ஈற்றில் முடியும் பெயர்கள் மிகுதியாக உள்ளன (16). இதையடுத்து ஐகார ஈற்றில் முடியும் பெயர்களும் (9) ளகர (5) மற்றும் ரகர (5) ஈற்றுப் பெயர்களும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

ஒரே பெயருடைய இருவர் ஓரிடத்தில் இருப்பின், அவர்களை அழைப்பதில் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்க, இருவரில் எவரேனும் ஒருவர் பெயருடன், ஏதேனும் அடை சேர்த்து அழைப்பது வழக்கம். இப்பழக்கம் அந்நாளிலும் கைக்கொள்ளப்பட்டிருந்ததைத் தளிச்சேரிக் கல்வெட்டு வழி அறியமுடிகிறது. ஒரு தளிச்சேரியில் ஒரே பெயருடைய இரண்டு பெண்கள் இருந்த நிலையில் அவர்களை அவர்தம் வயது கொண்டோ அல்லது உயரம் கொண்டோ சிறிய, பெரிய என்னும் அடைகள் தந்து அழைத்துள்ளனர். கிள்ளிக்குடியிலிருந்து வந்த சீருடையாள் என்னும் பெயர் கொண்ட இரண்டு பெண்களுள், ஒருவர் சிறிய சீருடையாள் என்றும் மற்றவர் பெரிய சீருடையாள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். கடம்பூர்த் திருஇளங்கோயிலிலிருந்து வந்த நக்கம் என்னும் பெயருடைய இரு பெண்களுள், ஒருவர் சிறிய நக்கம் என்றும் மற்றவர் பெரிய நக்கம் என்றும் அழைக்கப்பட்டனர். இதுபோலவே நாகபட்டினத்துக் கோயில்தளியிலிருந்து வந்த தேசிச்சி எனும் பெயருடைய பெண்கள் சிறிய, பெரிய தேசிச்சிகளாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். பழையாற்றுத் தென்தளியிலிருந்து வந்து குடியமர்ந்த ஆச்சம் என்னும் பெயருடைய பெண்களும் சிறிய, பெரிய ஆச்சங்களாய் வேறுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஒரே பெயருடைய பெண்களை வேறுபடுத்தி அழைக்க உயரமும் வயதும் பயன்பட்டாற் போலவே நிறமும் பயன்பட்டுள்ளது. ஆயிரத்தளி சேர்ந்த திருவடி என்னும் பெயருடைய இரண்டு பெண்களுள் ஒருவர் கருநிறத்தவராய் இருந்தமைபற்றி அவரைக் கரிய திருவடி என்று அழைத்துள்ளனர். அரவம் என்ற பெயரில் இருந்த

பெண்களுள் இருவர் சிறிய, பெரிய என்னும் அடைகளைப் பெற, மூன்றாமவர் கரிய அரவமாய் அறியப்பட்டார். இவர்களுள் சிறிய அரவம் திருவாரூர்ப் பெரிய தளிச்சேரியிலிருந்து வந்தவர். கரிய அரவம் நயதீரபுரத்தைச் சேர்ந்தவர்.

இது போன்று அடைகள் தந்து வேறுபடுத்தப்படாமல் ஒரு தளிச்சேரியில் ஒரே பெயரில் பலர் இருந்ததையும் காணமுடிகிறது. திருவாரூர்ப் பெரிய தளிச்சேரியில் கண்டியூர் என்ற பெயரில் இருவரும் அம்பர்த் திருமாகாளத்தில் செம்பொன் என்ற பெயரில் இருவரும் பாச்சில் திருஆச்சிராமத்தில் உமையென்ற பெயரில் இருவரும் திருவாரூர்த் திருஅரநெறிக் கோயிலில் அரவம் என்ற பெயரில் இருவரும் இருந்தனர். இவர்கள் அனைவருமே இராஜராஜீசு வரத்துத் தளிச்சேரிக்கு வரவழைக்கப்பட்ட பெண்களாவர். இங்கு வந்த பிறகும் இவர்தம் பெயர்களுடன் அடைகள் எதுவும் சேர்க்கப் படவில்லை.

இலவம், ஒருப்பனை, முருங்கை, வெண்ணாவல் என்னும் மரப்பெயர்களுடன், இளங்கா என்னும் சோலைப்பெயரும் கொண்டு ஐந்து பெண்கள் இங்கு வாழ்ந்தனர். வெண்ணாவல், திருஆனைக்கா தலத்தின் தலமரமாகும். தலமரங்களுள் பதிகச் சிறப்புப் பெற்றவை மிகச் சிலவே. அவற்றுள் வெண்ணாவல் சிறப்புக்குரியது. இதைச் சம்பந்தர் பாடியுள்ளார்.[44]

மன்றமுடையாள், மழலைச்சிலம்பு, எடுத்த பாதம், ஆடல் அழகி, சீருடைக்கழல், தில்லைக்கூத்தி, அம்பலக்கூத்தி, கூத்தாடி, பாஞ்சாடி என்று ஆடலுடன் தொடர்புடைய பெயர்களையுடையவர்களாய்ச் சில பெண்கள் இருந்தனர்.[45] இப்பெயர்களுள் மழலைச்சிலம்பும் எடுத்த பாதமும் திருமுறைப் புகழ்பெற்றவை. அப்பரடிகளாலும் திருவாலிய முதனாராலும் போற்றப்படும் சிவபெருமானின் ஆடல் திருப்பாதமே 'எடுத்த பாதம்'. 'ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட் கொண்டதே',[46] என்று அப்பர் பாட, 'வாமத் தொழிலார் எடுத்த பாதம் மழலைச் சிலம்பார்க்க',[47] என்று திருவாலியமுதனார் குறிப்பார். அப்பரின் எடுத்திட்ட பாதம், அமுதனாரிடம் எடுத்த பாதமாய்ச் சுருங்கியது. இந்தச் சொல்லாட்சியையே இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிப் பெண்கள் பெயராகக் கொண்டிருந்தமை, திருமுறைகள் அக்காலத்தே பெற்றிருந்த வரவேற்பையும் திருவாலியமுதனார், காலத்தால் முதலாம் இராசராசர்க்கு முற்பட்டவர் என்ற உண்மை யையும் விளக்கவல்லவையாகும். 'மழலைச் சிலம்பு', அமுதனாரின் பாடல் அடியில் காணப்படுவது போலவே, கருவூர்த்தேவரின் பதிகங் களிலும் இடம்பெற்றுள்ளது. 'மழலைச் சிலம்பொடு சதங்கை',

'பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்', என்னும் திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலப் பதிக அடிகள்[48] இங்கு நினைக்கத்தக்கவை.

இது போல் திருவிசைப்பா சொல்லாட்சியொன்றை பெயராகக் கொண்டிருந்த பெண்ணொருவரும் இங்கிருந்தார். பழையாற்று அரையெருமான் தளியிலிருந்து வரவழைக்கப்பட்ட அப்பெரு மாட்டியின் பெயர் நீறணி பவழக்குன்று. 'நீறணி பவளக் குன்றமே',[49] என்ற திருமாளிகைத்தேவரின் கோயில் திருவிசைப்பா பதிக அடியையே தன் பெயராய்க் கொண்டிருந்த இவ்வம்மை திருமாளிகைத் தேவரின் காலத்தை நிர்ணயிக்க உதவுகிறார்.

காமம் என்ற சொல்லோடு தொடர்புடைய பெயர்களை நால்வர் கொண்டிருந்தனர். *காமி, காமக்கோடி, காமாமோகி, காமுத்திரி* என்னும் இந்நான்கு பெயர்களுள் காமக்கோடி முதலாம் இராசராசரின் மனைவியருள் ஒருவர் பெயராகும்.[50]

சோதிவிளக்கு, திகைச்சுடர் என்று ஒளியுடன் தொடர்புடை யனவாய் இரண்டு பெயர்களும் சங்கம், அறிவாட்டி என்று அறிவுடன் தொடர்புடையனவாய் இரண்டு பெயர்களும் காணப்படுகின்றன. குடிதாங்கி, மதுரவாசகி, வழுவாநிலை, இன்னிளவஞ்சி என்னும் பெயர்கள் பொருள் நிறைந்தனவாய் இருக்க, எண்ணுப் பெயராய் *ஆறாயிரம் மட்டுமே உள்ளது. வானலோகத்தாரை நினைவுபடுத்துமாறு* போல விச்சாதிரி என்னும் பெயரும் கரணம் வல்லவள் என்பதுணர்த்துமாறு போல கரண விச்சாதிரி என்னும் பெயரும் அமைந்துள்ளன. செங்குளம், வடவாயில், எழுவணை, பெருவழி, கயிலாயம் என்னும் பெயர்களை இடப்பெயர்களாகக் கொள்ளலாம்.

பொதுப்பெயர்*களில்* பொ*ான் என்ற* சொ*ல்லை* மு*ன்னொட்டாகக்* கொண்ட பெயர்கள் பத்தும் பின்னொட்டாகக் கொண்ட பெயர்கள் இரண்டும் உள்ளன. 'வல்லி' என்று முடியும் பெயர்கள் மூன்றும் '*சுந்தரி*' என்று முடியும் பெயர்கள் ஐந்தும் '*மாணிக்கம்*' என்று முடியும் பெயர்கள் எட்டும் 'தேவி' என்று முடியும் பெயர்கள் பதினான்கும் உள்ளன. சாதி அல்லது குழு சார்ந்த பெயர்களாக ஆறாயிரம், சாத்தம், சங்கம், நகரத்தாள், எட்டி, செட்டி, குலமான் என்னும் பெயர்களைச் சொல்லலாம்.

சில *பெயர்கள் பலரால்* கொள்ளப்பட்டிருந்தன. இவற்றுள் பெற்றதிரு, உமை என்னும் பெயர்களே மிகுதியான அளவில் வைத்துக்கொள்ளப்பட்டதாய்த் தெரிகிறது. பெயருக்கு எண்மராய்ப் பதினாறு பேர் இப்பெயர்களைக் கொண்டிருந்தனர். இதற்கடுத்த

நிலையில் அரவம் என்ற பெயரில் அறுவர் இருந்தனர். பட்டாலி, ஆச்சம் என்னும் பெயர்களில் பெயருக்கு ஐவர் இருந்தனர். ஊர்ப் பெயர்களுள் திருவையாற்றுக்குப் பெருமை கிடைத்துள்ளது. அய்யாறு என்றும் திருவையாறு என்றும் பெயர் கொண்ட பெண்கள் ஒன்பதின்மர் இருந்தனர். ஆரூர் என்னும் ஊர்ப்பெயரில் நால்வரும் தில்லை என்ற ஊர்ப்பெயருடன் சில முன் அல்லது பின்னொட்டுகளை இணைத்துக் கொண்ட நிலையில் எழுவரும் இருந்தனர்.

### *அரச மரபுப் பெயர்கள்*

பொதுப்பெயர்களை அடுத்த நிலையில் அரச மரபுப் பெயர்களே பேரிடம் வகிக்கின்றன. நானூறில் இது ஏறத்தாழப் பத்தில் ஒரு பங்கா கலாம். இவற்றுள் சோழ மரபு சார்ந்த பெயர்கள், பிற அரச மரபுப் பெயர்களைப் போல் மூன்று மடங்கிற்கும் மேலாக உள்ளன. சோழ என்ற முன்னொட்டினை உடைய பெயர்களாகச் சோழகுல சுந்தரி, சோழசூளாமணி, சோழதேவி, சோழமாதேவி, சோழகோன், சோழம் என்னும் ஆறு பெயர்களும் சோழ, சோழி என்னும் பின்னொட்டுகளை உடைய பெயர்களாக வீரசோழி, சுந்தரசோழி, செய்யசோழம் என்னும் மூன்று பெயர்களும் உள்ளன. விசயாலய மரபு சார்ந்த சோழ அரசர்கள் பலரை நினைவுகூரும் வகையில் ஆதித்தி (ஆதித்தசோழர்), கன்னரதேவி (கன்னரதேவர்),[51] வீரசோழி, குஞ்சரமல்லி (முதலாம் பராந்தகர்), கண்டராச்சி (கண்டராதித்தர்), அறிஞ்சி, அரிகுலகேசரி (அரிஞ்சயர்), சுந்தரசோழி (சுந்தரசோழர்) அருமொழி, இரவிகுல மாணிக்கம், இராஜராஜி[51A] (முதலாம் இராசராசர்) என்னும் பெயர்களைச் சிலர் கொண்டிருந்தனர். தஞ்சாவூரில் சோழராட்சியைத் தொடங்கிய விசயாலயர் பெயரும் ஆதித்த கரிகாலர் கொலையில் தொடர்பு கொண்டிருப்பாரோ என்று வரலாற்றாசிரியர்களால் அய்யுறப்படும் உத்தமசோழர் பெயரும் தவிர, முதலாம் இராசராசருக்கு முற்பட்ட பிற சோழவேந்தர்கள் அனைவர் பெயரும் இப்பெண்களால் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இராசராசரின் புதல்வரும் பெருவீரருமான இராசேந்திரரின் பெயரை இந்நானூறு பெண்களில் ஒருவர்கூட கொள்ளாமலிருந்தது வியப்பளிக்கிறது.

அரசியர் பெயர்களுள் செம்பியன்மாதேவி, குந்தவை, ஒலோகமாதா, பஞ்சவன்மாதேவி, சோழமாதேவி, திரிபுவனமாதேவி, காமக்கோடி என்னும் பெயர்களைச் சில பெண்கள் கொண்டிருந்தனர். மாதேவடிகள், மாதேவி என்னும் பெயர்களையும் சிலர் வைத்திருந்தனர். மாதேவடிகளை முதலாம் இராசராசரின் மகளென்று திருவையாற்றுக் கல்வெட்டின் துணைகொண்டு திரு. பண்டாரத்தார் குறிப்பிடுவது நினைக்கத்தக்கது.[52]

பிற அரச மரபுகளைச் சேர்ந்த பெயர்களாகப் பதினான்கு பெயர்கள் உள்ளன. இவற்றுள் தென்னவன்மாதேவி, மீனவன் மாதேவி, மானாபரணி என்னும் மூன்று பெயர்களும் பாண்டிய மரபு சுட்ட, சேரமங்கை, வில்லவன்மாதேவி என்னும் இரண்டு பெயர்களும் சேர மரபு சுட்டுகின்றன. பூதி, மலையமான் என்னும் இரண்டு பெயர் களுள், பூதி, கொடும்பாளூர் வேளிரையும் மலையமான், நடு நாட்டு மலையமான்களையும் சுட்டுகின்றன. ஏகவீரி என்னும் பெயர் பல்லவ மன்னர் இராசசிம்மரின் ஏகவீரன் என்னும் விருதுப் பெயரை நினைவூட்டுகிறது. இப்பெயரில் காஞ்சிபுரத்தில் ஒரு குடியிருப்பே இருந்ததை உத்தமசோழரின் சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் உணர்த்தும்.[53] விக்கிரமதொங்கி, விக்கிரமாதித்தி என்னும் பெயர்கள் பழுவேட்டரையர்களுடன் தொடர்புடையனவாகலாம். பழுவேட்டரையன் விக்கிரமாதித்தன் என்றோர் அரச குடும்ப உறுப்பினரைச் சிறுபழுவூர்க் கல்வெட்டொன்று[54] குறிப்பது இங்கு எண்ணத்தக்கது.

### கோயிற் பெயர்கள்

இறை மற்றும் கோயில்களை நேரடியாகக் குறிக்கும் பெயர்கள் பல உள்ளன. இவற்றுள் திருமாகாளம், திருமூலட்டானம், அரநெறி, காரோணம் என்பன சைவக் கோயில்களைக் குறிப்பன. தில்லைக் கோயிலைக் குறிக்கும் கோயில், அம்பலம், பொன்னம்பலம், பொற் கோயில் என்னும் பெயர்களில் அறுவர் இருந்தனர். இளங்கோயில், தூங்கானை, கற்றளி என்னும் கோயில் வகைகளின் பெயர்களை மூவர் கொண்டிருந்தனர்.

### இறைப்பெயர்கள்

இறைப்பெயர்களுள் சிவபெருமானின் பெயர்களைக் கொண்ட வர்களாய்ப் பதின்மர் இருந்தனர். பரமி, சதுரி, சிவதேவி, சோமநாதி, ஆடவல்லாள், வீதிவிடங்கி, சந்திரசேகரி, திருநீலகண்டி, அம்பலக்கூத்தி என்னும் இப்பெயர்களுள் ஆடவல்லாள் என்ற பெயரில் மட்டும் இருவர் இருந்துள்ளனர். அன்னையர் எழுவருள் நாராயணி, வராகி, சாமுண்டி என்னும் மூவர் பெயரில் மூன்று பெண்கள் இருந்தனர். உமையின் பெயரை எண்மர் கொண்டிருந்தனர். காடுகாள், நங்காளி என்னும் இறைப்பெயர்களில் இருவரும் பொன்னாலமந்தாள் என்னும் பெயரில் ஒருவரும் இருந்துள்ளனர். காடுகாள், பொன்னாலமந்தாள் என்னும் இரண்டு இறைப்பெயர்களும் தளிச்சேரிக் கல்வெட்டின் சமகாலச் சோழர் கல்வெட்டுகள் சிலவற்றில் காணப்படுகின்றன.[55] சிவபெருமானின் மகன்களுள் ஒருவரான கணபதியின் பெயரில் இரண்டு பெண்கள் இருந்துள்ளனர்.

சீதேவி, திருவடி, அனந்தி, இராமி, ஆராவமுது என்னும் வைணவச் சார்புடைய பெயர்களையும் இத்தளிச்சேரிப் பெண்கள் கொண்டிருந்தனர். இப்பெயர்களுள் திருவடி கருடனையும் அனந்தி பாம்பையும் இராமி இராமரையும் ஆராவமுது குடந்தை சார்ங்கபாணி திருக்கோயில் இறைவனையும் குறிக்கின்றன.

***ஊர்ப்பெயர்கள்***

கோயில்களை நேரடியாகச் சுட்டாமல், ஆனால் கோயில்கள் உள்ள ஊர்களின் பெயர்களைக் கொண்டவர்களாய்ப் பலர் இருந்தனர்.[56] இவர்களுள் சிலர் திருவாலி, அரங்கம், சீகுருகூர் (ஆழ்வார் திருநகரி), திருவேங்கடம்[57] என்னும் வைணவத் தலங்களின் பெயர்களைக் கொண்டிருந்தனர். ஏனையவர் சிவத் தலங் களின் பெயர்களை வைத்திருந்தனர். இவர்கள் பெயர்களாய்க் கொண்டிருந்த பதினாறு சிவத் தலங்களுள் பத்துத் தலங்கள் சோழ நாட்டவை. இரண்டு தலங்கள் நடுநாட்டவை. ஒற்றியூரும் திருவாலங்காடும் தொண்டைநாட்டுப் பகுதியின. இரண்டு பாண்டி மண்டலத்தைச் சேர்ந்தவை. இவை தவிர உத்தமதானி, கற்பகதானி, காரைக்கால், பட்டம், ஒக்கூர், திட்டைச்சேரி, விரையாச்சிலை என்னும் ஊர்ப்பெயர்களைச் சிலர் கொண்டிருந்தனர். தளிச்சேரிப் பெண்கள் பெயர்களாகக் கொண்டிருந்த வைணவத் தலங்கள் அனைத்துமே மங்களாசாசனம் பெற்றவை. சிவத் தலங்களுள் பதினைந்து பாடல் பெற்றவை.

***தளிச்சேரிகள்***

சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து இராஜராஜீசுவரத்துக்கு இப்பெண்கள் வரவழைக்கப்பட்டதாகக் கூறும் கல்வெட்டு, அக்காலத்தே சிறப்புடன் திகழ்ந்த நூற்றிரண்டு தளிச்சேரிகளின் பட்டியலைத் தருகிறது.[58] இவற்றுள் ஐம்பத்தைந்து தளிச்சேரிகள் கோயில்களை யொட்டியும் நாற்பத்தாறு தளிச்சேரிகள் ஊர்களுக்குள்ளும் இருந்தன. நங்கத்தார் தளி[59] என்னும் பெயர் ஊரைக் குறிக்கிறதா அல்லது கோயிலைக் குறிக்கிறதா என்பதை அறியமுடியாதிருப்பதால் அப்பெயர் இவ்விரண்டு தொகுப்புகளிலுமே சேர்க்கப்படவில்லை. கோயில்களை ஒட்டியிருந்த தளிச்சேரிகளைக் குறிக்குமிடத்து அக்கோயில்கள் எந்தெந்த ஊர்களில் இருந்தன என்பதையும் கல்வெட்டு தெளிவாகச் சொல்கிறது. இதனால் ஐம்பத்தைந்து கோயில்களுள் நாற்பத்தொன்பது கோயில்களின் இருப்பிடம் தெளிவாகத் தெரிய வருகிறது. எஞ்சிய கோமாக்கம்பீசுவரம், நிறைமதி ஈசுவரம்,[60] பராந்தக ஈசுவரம்,[61] உலகமாதேவி ஈசுவரம், மாதேவி அல்லது மகாதேவி ஈசுவரம், திருஅமலீசுவரம்[62] என்னும் ஆறு கோயில்களும் எந்தெந்த ஊர்களில் இருந்தன என்பதை அறியக்கூடவில்லை.

### *கோயில் தளிச்சேரிகள்*

தளிச்சேரிகள் இருந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடும் ஐம்பத்தைந்து கோயில்களுள் அரபுரத்து ஸ்ரீதாழி விண்ணகர், அம்பர் அவனி நாராயண விண்ணகர், பாம்புணி ஸ்ரீபூதி விண்ணகர், தஞ்சாவூர் மாமணிக்கோயில் என்பன பெருமாள் கோயில்களாகும். இவற்றுள் மாமணிக்கோயில் மங்களாசாசனம் பெற்றுள்ளது. அம்பரிலிருந்த முதுபகவர் தளி சமணக் கோயில் போலும். எஞ்சிய ஐம்பது கோயில்களும் சிவபெருமானின் திருக்கோயில்களாக விளங்கு கின்றன. இவற்றுள் காரோணம், பழையாற்று வடதளி, ஆரூர் அரநெறி, அம்பர்த் திருமாகாளம், பாச்சில் ஆச்சிராமம், ஆரூர்த் திருமண்டளி, பாம்புணித் திருப்பாதாளீசுவரம் ஆகிய ஏழு கோயில் களும் தேவார ஆசிரியர்களின் பாடல் பெற்றவை.

ஊர்கள் சுட்டப்படும் நாற்பத்தொன்பது கோயில்களும் இருபது ஊர்களில் இருந்தன. இவற்றுள் ஐந்து பழையாற்றிலும் ஆறு திருவாரூரிலும்[63] நான்கு நியமத்திலும் நான்கு தஞ்சாவூரிலும் இருந்தன. பழையாற்றில் இருந்ததாகக் கல்வெட்டு கூறும் ஐந்து கோயில்களுள் தென்தளி, முள்ளூர் நக்கன் தளி, அரையெருமான் தளி, சங்கீசுவரம் என்னும் நான்கும் இன்று காணுமாறு இல்லை. இருக்கும் ஒரே கோயிலான ஆறை வடதளியும் அக்கறை கொண்டவர்கள் யாரும் இல்லாமையால் தன் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டுள்ளது.[64] ஆரூர்க் கோயில்களுள் பெரிய தளி,[65] பிரம்மீசுவரம், உலகீசுவரம், அருமொழி ஈசுவரம் எனும் கோயில்களை இன்று அடையாளம் காணமுடியவில்லை.[66] நியமத்திலிருந்த நிருபகேசரி ஈசுவரம், அரிகுலகேசரி ஈசுவரம், சந்திரமல்லி ஈசுவரம், ஆயிரத்தளி என்னும் நான்கு கோயில்களுமே இன்று சுவடழிந்து போய்விட்டன. இவற்றுள் சந்திரமல்லி ஈசுவரம் முதலாம் இராசராசரின் மகள் பெயரில் அமைந்ததாகலாம்.[67] தஞ்சாவூர்க் கோயில்களான ஜயபீமத்தளி, எரியூர் நாட்டுத் தளி, மாமணிக்கோயில், பிரமகுட்டம் ஆகிய நான்குமே இன்று காணுமாறு இல்லை.[68]

பாச்சில், கடம்பூர், அம்பர், அரபுரம், நாகபட்டினம் ஆகிய ஊர்கள் ஒவ்வொன்றிலும் இருந்த மூன்று கோயில்களைக் கல்வெட்டு சுட்டுகிறது. இவற்றுள் அம்பர், கடம்பூர், நாகபட்டினம் ஆகிய ஊர்கள் தலைக்கு இரண்டு கோயில்களை இழந்துள்ளன. அரபுரத்துக் கோயில் களான நிகளங்கி ஈசுவரம், திகைப்பிராட்டி ஈசுவரம், ஸ்ரீதாழி விண்ணகர் ஆகிய மூன்றுமே சுவடழிந்துபோய்விட்டன. பாச்சில் கோயில்களுள் ஆச்சிராமம் மட்டுமே மாற்றுரை வரதீசுவரர் என்ற பெயர்மாற்றத்துடன் பாச்சிலையொட்டிய திருவாசியில் வழிபாட்டில்

உள்ளது.[69] இவ்வூரைச் சேர்ந்த ஏனைய இரண்டு கோயில்களான அமலீசுவரமும் திருமேற்றளியும் வழிபாடிழந்த நிலையில் மேலுறுப்புகள் சிதறி நினைவுச்சின்னங்களாக மாறியுள்ளன.

பாம்புணி, கோட்டூர், பழுவூர், நன்னிலம் ஆகிய நான்கு ஊர்களில், ஊருக்கு இரண்டு கோயில்கள் இருந்ததைக் கல்வெட்டு உணர்த்துகிறது. இவற்றுள் கோட்டூர்க் கோயில்களான குணவதி ஈசுவரம், பஞ்சவன்மாதேவீசுவரம் ஆகியனவும் நன்னிலக் கோயில் களான திருஅமலீசுவரம், திருமேற்றளி ஆகியனவும் சுவடழிந்துபோய் விட்டன. பாம்புணி ஸ்ரீபூதி விண்ணகரைப்பற்றி அறியக்கூடவில்லை. ஆனால் திருப்பாதாளீசுவரம் வழிபாட்டில் உள்ளது. பழுவூரைச் சேர்ந்த பகைவிடை ஈசுவரம் மேலப்பழுவூரில் சுந்தரேசுவரர் கோயில் என்னும் புதுப்பெயருக்குள் பாதுகாப்பாய் அடைக்கலமாகி உயிரைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.[70]

பழுவூர் அவனிகேசரி ஈசுவரம் என்று கல்வெட்டு குறிப்பது மேலப்பழுவூருக்கு அருகில் கீழையூரிலுள்ள இன்றைய அவனி கந்தர்வ ஈசுவர கிரக வளாகமாக இருக்கலாம். இவ்வளாகத்துள் வடவாயில் ஸ்ரீகோயில், தென்வாயில் ஸ்ரீகோயில் என்னும் இரண்டு அற்புதமான பழுவேட்டரையர் காலக் கற்றளிகள் கவனிப்பாரற்ற நிலையில் பெயரளவில் மட்டும் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாய்க் கரைந்து கொண்டிருக்கின்றன.[71]

திருவையாறு, ஜனநாதபுரம், மட்டை,[72] தென்தளி,[73] ஆயிரத்தளி, விடையபுரம், அந்தளி ஆகிய ஊர்களில் இருந்ததாகக் கல்வெட்டு கூறும் உலகமாதேவீசுவரம், விஜய விக்கிரம ஈசுவரம், தென்தளி, புகழ்மதி ஈசுவரம், மல்லீசுவரம், புகழீசுவரம், அவனிகேசரி ஈசுவரம் ஆகிய கோயில்களுள் உலகமாதேவீசுவரம் தவிர ஏனைய அனைத்துக் கோயில்களும் காலவெள்ளத்தில் நீந்திக் கரைசேர முடியாமல் அழிந்துபோய்விட்டன. உலகமாதேவீசுவரம் வட கயிலாயம் என்ற பெயரில் திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் கோயில் வளாகத்துக்குள் சிறைப்பட்ட பறவையாய், மக்கள் வரத்தின்றிப் புகழ் மங்கிப் பூட்டப்பட்ட கோயிலாய் மாறியுள்ளது.[74]

ஊர்ப்பெயர்களுடன் பட்டியலிடப்பட்டிருக்கும் இந்த நாற்பத் தொன்பது கோயில்களுள் இன்று வழிபாட்டில் இருப்பவை பத்துக் கோயில்களே. இவற்றுள்ளும் சிறப்புக்குரிய நிலையில் இருப்பவையாக நாகபட்டினத்துக் காரோணம், ஆரூர் அரநெறி, அம்பர்த் திருமாகாளம் ஆகிய மூன்று கோயில்களை மட்டுமே சுட்ட முடியும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிகளுக்கு ஆடற் பெண்களை அனுப்பக்

கூடிய நிலையில் வளமாக வாழ்ந்த முப்பத்தொன்பது திருக் கோயில்கள், மக்களின் கவனக்குறைவாலும் அலட்சியப்போக்காலும் படிப்படியே ஒன்றன்பின் ஒன்றாய் வழிபாடிழந்து, வனப்பிழந்து, சிதறிச் சுவடழிந்துபோய்விட்ட கொடுமையை அறியநேரும்போது நெஞ்சு நெருப்பாய்ச் சுடுகிறது.

இந்த நாற்பத்தொன்பது கோயில்களுள் திருவாரூர்ப் பெரிய தளியை ஒட்டி அமைந்திருந்த தளிச்சேரியே மிக அதிக அளவிலான பெண்களை இராஜராஜீசுவரத்திற்கு அனுப்பியுள்ளது. இக்குடியிருப்பி லிருந்து தஞ்சாவூருக்கு மாற்றலான பத்தொன்பது பெண்களுள் ஆரூர் சார்ந்த பெயருடையவர்கள் மூவர். இதற்கடுத்த நிலையில் பழையாறை வடதளி பதின்மூன்று பெண்களையும் நியமத்து அரிகுலகேசரி ஈசுவரம், திருவையாற்று உலகமாதேவி ஈசுவரம் ஆகியவை தலைக்குப் பத்துப் பெண்களையும் இராஜராஜீசுவரத்திற்கு அனுப்பியுள்ளன.

### *ஊரகத் தளிச்சேரிகள்*

தளிச்சேரிகள் இருந்த ஊர்ப்பகுதிகளாக நாற்பத்தாறு இடங்கள் சுட்டப்படுகின்றன. இவ்வூர்கள் பலவற்றுள் திருக்கோயில்கள் இருந்த போதும், இத்தளிச்சேரிகள் அவை சார்ந்து இடம்பெறாது ஊரகத்தே அமைக்கப்பெற்றிருந்தமைக்கான காரணம் அறியக்கூடவில்லை. இந்த நாற்பத்தாறு இடங்களுள் நாகபட்டினத்தில் இருந்த சேனாமுகம் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அந்நாளில் நிலையான சேனாமுகங்களில் ஆடற்பெண்களின் குடியிருப்புகள் அமைந்திருந்தமைக்கு இக் கல்வெட்டு சரியான சான்றாகும்.

ஜனநாதபுரத்தில் பகவதிசேரி[75] என்னும் இடத்தில் ஒரு தளிச்சேரி அமைந்திருந்தது. இங்கிருந்து பரமி, திரு என்னும் இரு பெண்கள் இராஜராஜீசுவரத்திற்கு வந்துள்ளனர்.

ஆரூர்க் கோயில்கள் மற்றும் பெரிய தளிச்சேரியிலிருந்து இல்லாமல் ஆரூரின் ஊர்ப்பகுதியிலிருந்து இரண்டு பெண்கள் இராஜராஜீசுவரத்திற்கு வந்துள்ளனர். இவர்களுள் நக்கன் கருவூர் ஒருவர். மற்றொருவர் பெயர் படித்தறியமுடியாதபடி சிதைந்துள்ளது. பல கோயில்கள் விளங்கிய பழையாற்றின் ஊர்ப்பகுதியிலிருந்தும் ஒரு பெண் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக்குக் குடிபெயர்ந்துள்ளார். பழையாற்றைச் சேர்ந்த அவனி நாராயணபுரமும் நான்கு பெண்களை இத்தளிச்சேரிக்கு அனுப்பியுள்ளது.

இந்த நாற்பத்தாறு ஊர்களில் இருந்த தளிச்சேரிகளில், மிகுதியான அளவில் தளிப்பெண்களை இராஜராஜீசுவரத்துக் குடியிருப்புகளுக்கு அனுப்பிவைத்தது திருவிடைமருதூரில் இருந்த

தளிச்சேரியாகும்.[75A] இதற்கடுத்த ஊராக ஆயிரத்தளியைக் குறிப் பிடலாம். இவ்வூர்த் தளிச்சேரியிலிருந்து பதினாறு பெண்கள் அனுப்பப்பட்டனர். சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து இராஜ ராஜீசுவரத்திற்கு வந்த பெண்களில் மிகுதியான அளவில் வந்தவர்கள், திருவாரூர்ப் பெரிய தளிச்சேரியைச் சேர்ந்தவர்களே. அடுத்த நிலையில் திருவிடைமருதூரும் ஆயிரத்தளியுமே உள்ளன. இதை அறியநேர்கையில் கோயில் சார்ந்திருந்த குடியிருப்புகளைப் போலவே ஊரகக் குடியிருப்புகளிலும் ஆடல் தேர்ந்த பெண்கள் மிகுதியான அளவில் இருந்திருக்கவேண்டும் என்று கருதவேண்டியுள்ளது.

தளிச்சேரிகளைப் பெற்றிருந்த இந்த நாற்பத்தாறு ஊர்களுள் பதினாறு ஊர்கள் பதிகச் சிறப்புடைய கோயில்களைப் பெற்றிருந்தமை இங்கு நினைக்கத்தகுந்தது.[76] பல்லவ நாரணபுரம், அவனி நாராயணபுரம்[77] என்ற இரண்டு ஊர்ப்பெயர்களும் பல்லவர் ஆட்சியின் எச்சங்களாய் நிற்க, கஞ்சாற நகரம் மானக்கஞ்சாற நாயனாரை நினைவுபடுத்துகிறது.

**நக்கன்**

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிகளில் குடியமர்த்தப்பட்ட நானூறு பெண்களும் தங்கள் இயற்பெயருக்கு முன்னால் நக்கன் என்னும் சொல்லைப் பொதுப்பெயராகக் கொண்டிருந்தனர். நக்கன் என்ற சொல் சிவபெருமானைக் குறிப்பதாகும். திருமுறை ஆசிரியர்கள் இச்சொல்லால் சிவபெருமானை அழைத்து மகிழ்வதைத் தேவாரப் பதிகங்களில் காணமுடிகிறது.[78] சங்க இலக்கியங்களிலோ, இரட்டைக் காப்பியங்களிலோ, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலோ பயின்று வராத இச்சொல்லை முதன்முதலாகப் பதிக அடிகளிலேயே பார்க்க முடிகிறது. பரங்குன்றத்துப் பராந்தகன் நெடுஞ்சடையன் கல்வெட்டில் நக்கன் கொற்றி குறிக்கப்படுகிறார்.[79] நக்கன் என்ற சொல் பயின்று வரும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டாக இதைக் கொள்ளலாம்.

கோயிற்பணிகளுக்கென்றே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட மக்கள், நக்கன் என்ற முன்னொட்டைத் தங்கள் இயற்பெயருடன் இணைத்துக்கொண்டார்கள். இது ஆண், பெண் இருபாலருக்கும் பொருந்துவதைப் பல கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. முதலாம் இராசராசரின் மனைவியான பஞ்சவன்மாதேவியும், முதலாம் இராசேந்திரரின் துணைவியான பஞ்சவன்மாதேவியும் பழுவேட் டரையர் பெண்கள். இவர்கள் இருவருமே தங்கள் பெயருடன் நக்கன் என்ற முன்னொட்டைக் கொண்டிருந்தனர்.[80] சேரமானின் தேவியாராகப் பழுவூர்க் கல்வெட்டுகளில் இடம்பெறும் அக்கார

நங்கையாரும் தளித்தேவனார் மகளாக, நக்கன் என்ற முன்னொட்டோடு குறிக்கப்படுவது இங்கு எண்ணத்தக்கது.[81] இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது, 'நக்கன் என்பது தளிச்சேரிப் பெண்களுக்கு அவர்கள் திறமை குறித்து இராசராசரால் கொடுக்கப்பெற்ற சிறப்புப் பெயராகும்' என்று திரு. சுந்தரேசனார் எழுதியிருப்பது பொருந்தாக் கூற்றாகும்.[82]

## *தளிப்பெண்கள் நிலை*

இத்தளிச்சேரிப் பெண்களின் வாழ்க்கை, பணியமைப்பு, சமுதாயத்தில் அவர்கள் பெற்றிருந்த நிலை ஆகியனபற்றி இக்கல்வெட்டு வழி ஏதும் அறியக்கூடவில்லையென்றாலும் பிற கோயில்களில் இருந்து கிடைத்துள்ள சோழர் காலக் கல்வெட்டுகள் இவைபற்றித் தெரிந்துகொள்ள ஓரளவிற்கு உதவுகின்றன.

பல்லவர் காலத்தில் இப்பெண்கள் தளிப்பரிவாரத்தின் ஓரங்கமாகத் திகழ்ந்தனர். இரண்டாம் நந்திவர்மரின் முக்தேசுவரம் கல்வெட்டு இவர்களைக் கூத்திகள் என்றழைக்கிறது.[82A] அண்மையில் மாமல்லபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர் காலத் தமிழ்க் கல்வெட்டு, 'இத்தளிக் கூத்திகள்' என்று குறிப்பது நினைக்கத் தக்கது.[82B] பழுவேட்டரையர் காலக் கோயிலான பகைவிடை ஈசுவரத்தைச் சேர்ந்த உத்தமசோழரின் கல்வெட்டொன்று அக்கோயில் ஆடற்பெண்ணை 'இத்தளிக் கூத்தப்பிள்ளை' என்று பெயரிடுகிறது.[82C] கீழையூர் அவனி கந்தர்ப்ப ஈசுவர கிரக வளாகத்திலுள்ள வடவாயில் ஸ்ரீகோயிலில் காணப்படும் முதலாம் இராசராசரின் தொடக்கக் காலக் கல்வெட்டு பழுவூரிலிருந்த பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரியையும் அங்கிருந்த ஆடற்பெண் களையும் அறிமுகப்படுத்துகிறது.[82D] கூத்திகள், கூத்தப்பிள்ளை களாகித் தளிப்பெண்டுகளாகப் பெயர் மாற்றம் பெற்றனர். இவர்தம் தலையாய பணி இசையும் ஆடலும்தான். இவ்விரண்டும் இறை வழிபாட்டின் ஓரங்கமாக அமைந்தமையால், இவற்றை நிகழ்த்திய தளிப்பெண்கள் இறைப்பணியாளர்களாகக் கருதப்பட்டனர். கோயிலைத் தூய்மை செய்தல், மெழுகுதல், இறை உலாக்களில் சாமரம் வீசுதல் போன்ற பணிகளும் பின்னாட்களில் இவர்களால் மேற்கொள்ளப்பட்டன.[82E]

தளிப்பெண்களின் வாழ்க்கை செல்வாக்குடனும் செழிப்புடனும் இருந்தமைக்குப் பல கல்வெட்டுகள் சான்றாகின்றன. சில திருக் கோயில்களுக்கு இப்பெருமக்கள் அளித்திருக்கும் கொடைகள் நம்மை வியக்கவைக்கின்றன. இவர்தம் சிறப்பும் பெருமையும்

வள்ளன்மையும் கருதிச் சில கோயில்களின் நிர்வாகத்தார், இவர்களுக்கு அளித்திருந்த மரியாதைகளும் சிறப்புச் சலுகைகளும் இவர்தம் செல்வாக்கு, வாழ்க்கைத்தரம், சமுதாயத்தில் இவர்கள் பெற்றிருந்த மதிப்பான நிலை ஆகியவற்றை உணர்த்த வல்லவையாகும். வாய்ப்பமைந்தபோது மன்னர்களே இவர்தம் ஆடல்களைப் பார்த்து, மகிழ்ந்து, பாராட்டிப் பரிசளித்துச் சிறப்பித்ததுடன், இவர்தம் பெயரில் ஊர்களை அமைத்துப் பெருமைப் படுத்தியதும் கல்வெட்டுகளால்[82F] அறியக்கிடக்கும் செய்திகளாகும். சோழப் பேரரசிற்குப்பின் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் இவர்தம் பின்னடைவுக்குக் காரணமாயின.

### *நிவந்தக்காரர்கள்*

தளிச்சேரிக் கல்வெட்டின் இரண்டாம் பகுதி முதலாம் இராசராசரால் இக்கோயிலுக்கு உவந்தளிக்கப்பட்ட நிவந்தக்காரர் களைப் பற்றிய விரிவான தகவல்களைத் தருகிறது. நிவந்தம் என்ற சொல் நிபந்தம் என்ற வடசொல்லின் திரிபாகும். இதுவே சில கல்வெட்டுகளில் நிமந்தம் என்றும் குறிக்கப்படுகிறது. நிபந்தம் என்ற வடசொல்லுக்குக் கடமை, யாப்பு, கட்டுப்பாடு, இன்றியமையாமை எனப் பல பொருள்கள் தருகிறது மதுரைத் தமிழ்ப் பேரகராதி.[83] சென்னைப் பல்கலைக்கழகப் பழைய அகராதி தாவரப்பொருள், தவணையாகச் செலுத்துவது, கோயிற் கட்டளைகளுக்கு விடப்பட்ட சொத்து, கடமை, அணை, யாப்பு என்னும் பொருள்களைத் தருகிறது.[84] நிவந்தம், நிமந்தம் என்னும் சொற்களை விளக்குமிடத்து இவ்வகராதி அவற்றை நிபந்தம் என்ற சொல்லாகவே குறிக்கிறது. ஆனால் பொருள் தருமிடத்து நிவந்தம் என்ற சொல்லுக்கு நிபந்தனை, வேலைத்திட்டம், கோயிற் செலவு, கோயிற் கைங்கரியம், கடவுளை வழிபடும் இடம், சங்கிரக நூல் என்னும் பொருள் களையும்[85] நிமந்தம் என்ற சொல்லுக்குக் கோயில் ஊழியம், கோயிலின் ஏற்பாடு என்னும் பொருள்களையும்[86] தருகிறது. நிவந்தக்காரர் என்ற சொல்லுக்குக் கோயிற் கைங்கரியம் செய்வோர்[87] என்றும் நிமந்தக்காரர் என்ற சொல்லுக்குக் கோயில் வேலைக்காரர்[88] என்றும் பொருள் தருகிறது.

நிபந்தம்[89] என்னும் சொல்லை விளக்குமிடத்து மோனியர் வில்லியம்ஸ்[90] கட்டுதல், கடமை என்னும் பொருள்தரும் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்துகிறார். இப்பொருள் விளக்கங்களையும் கல்வெட்டு சொல்லாட்சிகளையும் கொண்டு நோக்குமிடத்து, நிபந்தம் என்ற சொல் கடமை என்ற பொருளையே தந்துநிற்பது உறுதிப்

படுகிறது. அதனால் நித்த நிவந்தங்கள் நாள்படி கடமைகளையும் நிவந்தக்காரர் எனும் சொல் கடமையாற்றுபவர் அல்லது கடமைக்குரிய வரையும் (கடமைப்பட்டவர்) குறிப்பதாகக் கொள்ளலாம்.

கோயிற் பணியாளர்களை ஒரு தொகுதியாக ஒருங்கிணைத்துச் சுட்டும் முதற் கல்வெட்டு தீக்காலி வல்லத்தில் காணப்படும் நந்திவர்மரின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும்.[91] இக்கல்வெட்டு, 'பலபணி செய்வார்' என்ற பெயரிட்டுப் பல்வகைப் பட்ட கோயிற் பணியாளர்களையும் ஒருங்கிணைத்துள்ளது. இப்பல பணி செய்வாரே பின்னாட்களில் நிவந்தக்காரர், நிமந்தக்காரர், பலபணி நிமந்தக்காரர் எனப் பல்வகையாக அழைக்கப்பெறலாயினர். இப்பணியாளர்களின் பட்டியலையும் அவர்தம் பணியொழுங்குகள், அவற்றிற்கான ஊதியம் போன்ற விரிவான செய்திகளையும் தரும் முதல் கல்வெட்டாகச் செம்பியன்மாதேவியின் திருநல்லம் கல்வெட்டைக் கூறலாம்.[92] இக்கல்வெட்டை அடியொட்டி, ஆனால் அதனினும் விரிவாகத் தளிச்சேரிக் கல்வெட்டின் பிற்பகுதி அமைக்கப் பட்டுள்ளது.

முப்பத்தாறு வகையான தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த இருநூற்றுப்பதினேழு[92A] தொழிலர்கள், இராசராசர், இராஜராஜீசுவரத் திற்களித்த நிவந்தக்காரர்களாகத் தளிச்சேரிக் கல்வெட்டின் பிற் பகுதியில் இடம்பெறுகிறார்கள். கலைஞர்கள், தொழிலர்கள் என்னும் இரு பிரிவினராக அமைந்துள்ள இந்நிவந்தக்காரர்களை அறிமுகப் படுத்தும்போது கல்வெட்டில் சில கோட்பாடுகள் பின்பற்றப் பட்டுள்ளன. முதலில் கருவி அல்லது தொழிலின் பெயரைச் சொல்லிப், பிறகு அதை இசைத்தவர் அல்லது செய்தவரின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் சுட்டப்படுகின்றன. சன்னாலியர், வண்ணத்தார், நீர் தெளித்தவர் எனும் இம்மூன்று குழுவினரும் பெயர்கள் சுட்டப்படாது தொழிற்பெயர், எண்ணிக்கை மட்டும் கொண்டு அறிமுகமாகின்றனர்.

ஒருவர் மட்டும் செய்த தொழிலை அறிமுகப்படுத்தும்போது இருவிதமான சொல்முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்ன தொழிலர் ஒருவருக்கு (எ.கா. கன்னான் ஒருவனுக்கு) என்று தொழிற்சார்புப் பெயர் தொடங்கிப் பிறகு பணியாளர் பெயரும் அவர்தம் சிறப்புப் பெயரும் சொல்லிப் பங்கைக் குறித்திருப்பது ஒரு முறை. ஒருவருக்கு என்று தொடங்காது, தொழிற்பெயர் மட்டும் சுட்டிப் பிறகு பணியாளர் பெயரும் அவரது சிறப்புப் பெயரும் பங்கும் கூறியிருப்பது மற்றொரு முறை (எ.கா. ரத்நத் தய்யான் ஆச்சன் கருந்திட்டைக்குப் பங்கு ஒன்றரையும்).

ஒரே கருவி இசைத்த அல்லது தொழில் செய்த பலரை அடுத்தடுத்துக் குறிப்பிடும்போது மேற்படி, மேற்படி ஒன்றுக்கு, மேற்படி ஒருவனுக்கு என்னும் சுட்டல்கள் பயிலப்பட்டுள்ளன. தலைமையாய்ச் சிலரையும் கீழ்ப்பணியாளராய்ச் சிலரையும் கொண்டு ஒரு பணி செயற்படுத்தப்பட்டபோது, தலைவர்கள், 'உள்படுவான்' என்ற பெயரிலும் பணியாளர், ஆள் என்ற குறிப்புடனும் அறிமுகமா கின்றனர். கணக்குத் தொழிலுக்கு மட்டும் இந்த அறிமுக முறையில் மாற்றம் காட்டப்பட்டுள்ளது. தலைமைக் கணக்குகளில் முதலாமவர் 'கணக்கு' என்று தொழில் சுட்டி அறிமுகப்படுத்தப்பட, மற்ற மூவரும் அது போன்ற பணிக்குறிப்பு ஏதுமின்றி ஊர் மற்றும் பெயர் மட்டும் சொல்லி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். இத்தலைமைக் கணக்கு களின் கீழ் பணியாற்றியவர்கள், கீழ்க்கணக்கு எழுதுபவர்களாகவும் திருக்களின் கீழ்ப்பணியாளர்கள், 'கீழ் ஆள்' என்றும் குறிக்கப் பட்டுள்ளனர்.

இந்த அறிமுக முறைகள் எதிலும் சேராது தனித்து நிற்பவர்கள் காந்தர்வர்கள். 'காந்தர்ப்பரில்' என்று இவர்களை அறிமுகப்படுத்தித் தொடங்கும் கல்வெட்டு முதலாமவருக்குப் பின்னால் வருபவர்களை 'மேற்படி' என்பது போன்ற எந்தச் சுட்டுதலுமின்றி வரிசைப்படுத்தி யுள்ளது. மூன்றாம் ஆளுக்கு முன்னால் மீண்டும் 'காந்தர்ப்பரில்' என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. இதைக் கூறியதுகூறல் என்று கொண்டால், இக்கூட்டத்தார் அனைவரையும் காந்தர்வர்களாகக் கொள்ளலாம்.

சில தொழில்கள் இரண்டல்லது மூவரால் மேற்கொள்ளப்பட்டிருந் தாலும் கல்வெட்டில் ஒருவர் பெயர் மட்டுமே தரப்பட்டிருப்பதுடன், அந்த இரண்டல்லது மூவர்க்குரிய தொழிற்பங்கும், பெயர் சுட்டப்பட்ட அந்த ஒருவர் பொறுப்பிலேயே ஒதுக்கப்பட்டிருந்தமை நோக்க, அந்த ஒருவரே அத்தொழில் வல்ல பிறரை அமர்த்திப் பணி மேற்கொள்ள வேண்டியிருந்ததென்பதை உணரலாம்.

இக்கல்வெட்டில் இது போன்ற உடன்பணியாளர் சிலர் பெயர்கள் சுட்டப்படாமலிருப்பது போல், கீழ்ப்பணியாளர்கள் பெயர்களும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[93]

இந்நிவந்தக்காரர்கள் அனைவரின் பெயர்களையும் வகைப் படுத்தியபோது, இவர்களுள் பலர் சைவம் சார்ந்த இறைப்பெயர் களைக் கொண்டிருந்தமை தெரியவந்தது. கூத்தன், சதாசிவன், அம்பலம், அம்பலநாதன், பிச்சன், விடங்கன், பிரம்மவிடங்கன், சதுரவிடங்கன், ஆடவல்லான், சோமநாதன், மணலி லிங்கன், மகாதேவன், ருத்திரன், சிவலோகசுந்தரன், பரஞ்சோதி என்னும்

இப்பெயர்களுள் கூத்தன் என்ற பெயரே பலரால் விரும்பிக் கொள்ளப்பட்டிருந்தது. இராமன், நாராயணன் என்ற வைணவம் சார்ந்த பெயர்களை இருவரும் கணபதியின் பெயரை நால்வரும் குமரனின் பெயரை மூவரும் (குமரன் இருவர், சுப்ரமணியன் ஒருவர்) கொண்டிருந்தனர். காளி, சாத்தன் என்னும் பெயர்களில் இருவர் இருந்தனர்.

நிவந்தக்காரர்களின் முன்னைய வாழிடங்களாகவும் அவர்தம் பெயர்களாகவும் இருபத்து மூன்று ஊர்ப்பெயர்கள் கிடைக்கின்றன. இவற்றுள் அதிகமான அளவில் பெயராகக் கொள்ளப்பட்டிருக்கும் ஊர் அய்யாறு. அரங்கம், திருவேங்கடம் என்னும் திருமால் தலங்களின் பெயர்களை இருவர் கொண்டிருந்தனர். வாழிடங்களுள் வாணராசி, வங்காரம், சாவூர், கூனர்கள் முன்னியூர் என்பன அரிய பெயர்களாக அமைந்துள்ளன. மீய்செங்கிளி, நல்லூார் என்னும் நாட்டுப் பிரிவுகளும் ஆவூர், திருவாரூர் என்னும் கூற்றங்களும் நான்கு வளநாட்டுப் பெயர்க்ளும் வாழிடங்களைச் சுட்டுவனவாய்க் கிடைக்கின்றன.

ஆதித்தன், பராந்தகன், வீரசோழன், கோதண்டராமன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், அருமொழி, இராசராசன், இராசேந்திரன், மதுராந்தகன் என்னும் சோழ மன்னர் களின் பெயர்களைத் தங்கள் பெயர்களுடன் இணைத்துக்கொண்டவர் களாய்ப் பலர் இருந்தனர். இம்மன்னர் பெயர்களுள் இராசராசன் என்ற பெயர் எண்மராலும் வீரசோழன் என்ற பெயர் எழுவராலும் கொள்ளப்பட்டிருந்தன. சோழ மன்னர்களின் பெயர்களைக் கொண்டிருந்தாற் போலவே அபராசிதன், பல்லவன், வரகுணன், சுவரன் எனப் பிற மரபுகள் சார்ந்த அரசர் பெயர்களையும் சிலர் கொண்டிருந்தனர். அபிமானதொங்கி, பஞ்சவன்மாதேவி என்னும் அரசியர் பெயர்களை இருவர் கொண்டிருந்தனர்.

முதலாம் இராசராசரின் பதினான்கு விருதுப் பெயர்களைத் தங்கள் பெயர்களுடன் இணைத்துக்கொண்டவர்களாய்ப் பலர் இங்கு இருந்தனர். இவ்விருதுப் பெயர்களுள் அதிகமான அளவில் கொள்ளப்பட்ட பெயர் மும்மடிச்சோழன் என்பதாகும். இத்தொழிலர்கள் பலருக்கு அவர்தம் தொழில்திறன் காரணமாக அரையன், பேரையன், மாராயன் என்னும் சிறப்புப் பட்டங்கள் தரப்பட்டிருந்தாற் போலவே, அவர்தம் தொழிலுக்கு முன்னால் 'பெரு' என்ற பெருமைக்குரிய சொல்லும் இணைக்கப்பட்டிருந்தது.

இத்தொழிலர் பெயர்களுள் எழுபத்தைவன், நூற்றெண்மன் என்னும் இரண்டு மட்டுமே எண்ணிக்கை குறிப்பனவாய்

அமைந்துள்ளன. சாதி சுட்டும் பெயராய்ச் செட்டி காணப்படுகிறது. சீராளன், பரஞ்சோதி என்னும் பெயர்கள் சிறுத்தொண்டர் குடும்பத்தையும் மணவி லிங்கன், சண்டேசுவரரையும் நினைவூட்டுகின்றன. பல்வேறு இடங்களில் இருந்து வந்த இவர்களுள் நால்வர் மட்டும் தஞ்சாவூரைச் சேர்ந்த எரியூர் நாட்டுத் தளி, பிரமகுட்டம், மாமணிக் கோயில், ஜயபீமத்தளி ஆகிய கோயில்களிலிருந்து வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நால்வருமே வீரசோழ அணுக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிவந்தப் பணியாளர் வழிவழியாய் அப்பணி செய்து வந்தமையை இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. குறிப்பாக இசைக் கலைஞர்கள் தம் குடும்பம் சார்ந்த பிற உறுப்பினர்களையும் இசை வல்லாராய்ப் பழக்கியிருந்தமை இக்கல்வெட்டால் அறியக்கிடக்கும் உண்மையாகும். இவர்தம் வாழ்க்கை செல்வச் செழிப்புடன் திகழ்ந்தமைக்கு இவர்களுள் ஒருவரான இராசகேசரி கோதண்டராமன் இக்கோயிலுக்கு அளித்திருக்கும் கொடையே சான்றாகும்.[93A]

*நுண்கலைஞர்*

இந்நிவந்தக்காரர்களுள் நூற்று முப்பத்தெட்டுப் பேர் ஆடல் மற்றும் இசையுடன் தொடர்புடைய நுண்கலைஞர்கள். இக்கலைஞர்களுள் பதின்மூன்று பேர் தெரிந்த வலங்கை வேளைக்காரர் படைப்பிரிவுகளிலிருந்து வந்தவர்கள். இவர்கள் வரவால் முதலாம் இராசராசர் காலத்திலிருந்த தெரிந்த வலங்கை வேளைக்காரர் படைப்பிரிவுகளுள் பத்தின் பெயர்கள் கிடைத்துள்ளன.[94] இப்பத்துப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த பதின்மூன்று வீரரில், மூவர் பக்க வாத்தியக்காரர்களாகவும் பதின்மர் காந்தர்வர்களாகவும் இக்கோயிலில் பணியமர்ந்தனர். இவர்களுள் ஒருவர் பெயர் இராமன் கம்பன்.

வேளைக்காரப் படைகளிலிருந்து இவர்கள் பணிமாறி வந்தது போலப் பராந்தகக் கொங்கவாள் என்ற அமைப்பிலிருந்த கீர்த்திநாதன் என்பவரும் பணிமாற்றம் பெற்று இராஜராஜீசுவரத்துக் காந்தர்வர்களுள் ஒருவராய்ச் சேர்ந்தார். பராந்தகக் கொங்கவாள் என்ற அமைப்பு பராந்தகர் பெயரிலிருந்த கொங்கு நாட்டு வாள் வீரர்கள் பிரிவைக் குறிப்பதாகலாம். சோழ மன்னர்களுள் இரண்டு பராந்தகர்கள் இருந்தனர். இப்பெயர் இருவருள் யாரைக் குறிக்கிறதென்பதை அறியக் கூடவில்லை.

குதிரை மற்றும் யானைப்படைப் பிரிவுகளில் பணியாற்றியவர்களும் இராஜராஜீசுவரத்து இசைப்பணிக்கு வரவழைக்கப்பட்டனர். நிகரிலிசோழத் தெரிந்த உடனிலைக் குதிரைச்சேவகர் அமைப்பிலிருந்த தஞ்சைக் கணவதி இக்கோயிலில் வங்கியம்

வாசிப்பவராய் மாறினார். மும்மடிச்சோழத் தெரிந்த ஆனைப்பாகரில் ஒருவரான சூற்றிநாதன் முத்திரைச்சங்கு ஊதும் பணிக்கு அமர்த்தப்பட்டார். இவர்களைப் போலவே இராசராசரின் சிறுதன அலுவலர்களுள் ஒருவரான வடுகக் காந்தர்வர் செருவத்தவிரையன் வங்கியக் கலைஞராய்ப் பொறுப்பேற்றார். இவ்வடுகக் காந்தர்வரை 'வடுகக் காலவர்' என்று கல்வெட்டுத் தொகுதியும் அதைப் பின்பற்றிய மற்ற இரண்டு பதிப்புகளும் பிழைபடச் சுட்டுகின்றன.[95] மும்மடிச் சோழத் தெரிந்த பரிக்காரர் என்றொரு பிரிவும் இக்கல்வெட்டால் சுட்டப்படுகிறது. இப்பிரிவிலிருந்த கண்டிகாரி[96] என்பவர் காந்தர்வர்களுள் ஒருவராக இக்கோயிலுக்கு மாற்றப்பட்டார்.

இராஜராஜீசுவரத்தில் இசைப்பணிக்கென அமர்த்தப்பட்டவர்களுள் ஐவர் வீரசோழ அணுக்கர்கள். ஒருவர் 'வீரசோழ' என்ற சீரடையின்றி அணுக்கராக மட்டுமே குறிக்கப்படுகிறார். முண்டகாரி அணுக்கன் என்ற பெயருடைய இவர் காண, பாட அமர்த்தப்பட்டவர்களுள் ஒருவராக இருந்தார். வீரசோழ அணுக்கர்களுள் சுந்தரன் காலகாலன், பிசங்கன் சீராளன், தேவன் செங்குணவன் ஆகிய மூவரும் தஞ்சாவூர் ஐயபீமத்தளியிலிருந்தும் பராந்தகன் வீமன் தஞ்சை மாமணிக் கோயிலிலிருந்தும் வந்தவர்கள். இந்நால்வரும் இக்கோயிலில் காந்தர்வர்களாகப் பணியமர்ந்தனர். மற்றொரு வீரசோழ அணுக்கரான காமன் அய்யாறனின் முதற் பணியிடம் கல்வெட்டில் இடம்பெற வில்லை. இவர் பக்கவாத்தியக் குழுவில் பணியமர்ந்தார்.

'வீரசோழ அணுக்கர்' என்ற இப்பிரிவினர் கோயில்களில் இறைவனுக்கு அணுக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்த குழுவினராகலாம். முதலாம் இராசராசர் காலத்தில் தமிழகத்துக் கோயில்களில் இதுபோன்ற குழுவினர் ஆங்காங்கே இருந்தனர் போலும்.[97] இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டொன்றில் இத்திருக் கோயிலின் சிறப்பு வாயில்களுள் ஒன்றாக 'அணுக்க வாசல்' குறிக்கப் படுவது[98] இங்கு எண்ணத்தக்கது. இவ்வாயில், அணுக்கர்கள் இறைத் திருமுன்னை அணுகும் சிறப்பு வாயில் போலும்.

இக்கோயிலில் பணியமர்ந்த இருபது காந்தர்வர்களுள்[99] பதின்மர் தெரிந்த வலங்கை வேளைக்காரப் படைகளிலிருந்து வந்தவர்கள். நால்வர் வீரசோழ அணுக்கர்கள். ஒருவர் கொங்கவாள் பிரிவிலிருந்து வந்தவர். எஞ்சிய ஐவரில் இருவர் உவச்சர். இருவர் காந்தர்வர். ஒருவர் மும்மடிச்சோழத் தெரிந்த பரிக்காரர் பிரிவிலிருந்து வந்த கண்டிகாரி. உவச்சர்களுள், கண்டராச்சன் தஞ்சாவூர் பிரமகுட்டத்திலிருந்தும் களரி[100] ஆச்சன், நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கூனர்கள் முன்னியூரிலிருந்தும் வந்தவர்கள்.

காந்தர்வர்களாகக் குறிக்கப்படும் குப்பை திருமணஞ்சேரியும் எழுபத்தைவனும் எங்கிருந்து வந்தவர்கள் என்பதைக் கல்வெட்டு குறிப்பிடவில்லை. பக்கவாத்தியராகப் பணியமர்ந்த ஐவருள் மூவர் வேளைக்காரப் படைப்பிரிவுகளிலிருந்து வந்தவராவர். ஒருவர் வீரசோழ அணுக்கர். ஐந்தாமவர் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கருகாவூரைச் சேர்ந்த பாதசிவன் ஆச்சன் பிச்சன்.

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிகளுக்கு வந்துசேர்ந்த நானூறு பெண்களுக்கும் நட்டுவம் செய்ய எழுவர்[101] அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்களுள் நால்வர் கலை விற்பன்னர்கள் என்பதால் நிருத்தப் பேரையன், நிருத்தமாராயன் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தனர். இந்நால்வருள் சுந்தரசோழன், அபிமானதொங்கன், மணஞ்சேரி என்னும் மூவரும் தம் பெயருக்கு முன்னால் அரையன் என்னும் மற்றொரு சிறப்புப் பெயரையும் கொண்டிருந்தனர். விக்கிபட்டாலகன் இத்தகு சிறப்புப் பெயர்கள் ஏதும் பெறாதபோதும் முன்னவர்களைப் போலவே உயர் ஊதியம் பெற்றார். ஒரு நட்டவப் பங்கைத் தமக்குள் பகிர்ந்துகொண்ட மல்லன் இரட்டையன், சித்திரன் கேசுவன் ஆகியோர் இவர்களுக்கு அடுத்த நிலையிலிருந்த ஆடல் ஆசிரியர்களாகலாம். கோயில் வழிபாடுகளுக்கும் விழாக்களுக்கும் ஏற்ப ஆடல் நிகழ்ச்சிகளை வடிவமைத்துப் பயிற்சி தரும் பணியை இக்கலைஞர்கள் எழுவரும் மேற்கொண்டிருந்தனர் என ஊகிக்கலாம்.

குராவன் வீரசோழனான பஞ்சவன்மாதேவி நாடகமாராயன்,[102] மறைக்காட்டுக் கணவதியான திருவெள்ளறைச் சாக்கை, ஒற்றியூரைச் சேர்ந்த சிங்கன் மற்றும் இளங்கோவன் ஆகிய நால்வரும் பாட்டிற்காகப் பணியமர்த்தப்பட்டனர். இப்பாட்டின் வகையும் தன்மையும் அறிய முடியாதபடி கல்வெட்டெழுத்துக்கள் சிதைந்துள்ளன. இருக்கும் எழுத்துக்கள் கொண்டு இதைக் கொட்டுப்பாட்டாகக் கருதலாம். கொட்டாட்டுப்பாட்டு என்பதைத் திரு வீ.பா.க. சுந்தரனார் கொட்டு, ஆட்டம், பாடல் எனப் பிரிக்கிறார். இவற்றுள் ஆடல் தவிர்க்கப்பட்டால் கொட்டும் பாட்டும் சேர்ந்து கொட்டுப்பாட்டு என்றாகும். திரு.வீ.பா.க.சுந்தரனார் இதை ஏற்றுக் கொள்கிறார்.[103]

இராஜாஸ்ரீயன், நின்ற நாராயணன் என்னும் இருவர்[103A] இசைக்கருவியொன்றை வாசிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர். இவ்விருவருமே அரையன் என்ற முன்னொட்டைக் கொண்டிருந்தனர். இராஜாஸ்ரீயன் நித்தவிநோத வாத்யமாராயர்[104] என்ற பட்டமும் பெற்றிருந்தார். இவர்கள் வாசித்த இசைக்கருவியின் பெயரைக் கல்வெட்டுத் தொகுதி [மெ] . . [வியம்] என்று பதிப்பித்துள்ளது. ஆனால் கல்வெட்டில் 'மெராவியம்' என்றுள்ளது.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்தில், கண்டியூர் வீரட்டத்து அம்மன்கோயில் கிழக்குச் சுவரில் உள்ள முதலாம் இராசேந்திரரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று வெளியிடப் பட்டுள்ளது.[105] இக்கல்வெட்டுப் பதிப்பின் பாடத்தில் 'மொர்வியம்' என்றோர் இசைக்கருவி குறிக்கப்படுகிறது. அதனால் இக்கல்வெட்டைப் படித்தறியக் கண்டியூர் வீரட்டம் சென்றபோது கல்வெட்டின் மெய்க்கீர்த்தி தவிர ஏனைய முக்கியமான பகுதிகள் அனைத்தும் பூமிக்குள் புதைந்திருக்கும் கொடுமையைப் பார்க்கமுடிந்தது. அம்மன் கோயில் கருவறைத் தாங்குதளத்தின் பட்டிகைக்குக் கீழ்ப்பட்ட பகுதிகள் அனைத்தும் சுற்றிலும் உயர்ந்திருக்கும் தரைக்கட்டுமானத்தில் புதைந்து போய்விட்டதால் 'மொர்வியம்' கண்களுக்குச் சிக்கவில்லை. கண்டியூர்க் கல்வெட்டு 'மொர்வியம்' என்று கருவியையும் 'மொர்வியக் காணி' என்று அதற்காகத் தரப்பட்ட நிலத்தையும் குறிப்பதாகத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி உணர்த்துகிறது. இந்த 'மொர்வியம்', மொர்வியந்தானா அல்லது மொராவியத்தை, மொர்வியம் என்று பதிப்பித்திருக்கிறார்களா என்பது விளங்கவில்லை. கல்வெட்டு பூமிக்குள் போய்விட்டதால் உண்மையைக் கண்டறிய வழியில்லை. மொராவியம் என்னும் இவ்விசைக்கருவி சங்க இலக்கியங்களிலோ, இரட்டைக் காப்பியங்களிலோ, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலோ இடம்பெறவில்லை. எத்தனையோ இசைக்கருவிகளைப்பற்றிப் பேசும் திருமுறைகளிலும்கூட மொராவியம் பற்றிய தகவல் இல்லை. இசையிலக்கண நூலான பஞ்சமரபு, பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்றவற்றிலும் மொராவியம் இடம்பெறவில்லை. கல்வெட்டுக் கலைச் சொல் அகராதிகளில் மொரலியம், மோர்வியம் என்னும் சொற் களுக்குப் பொருள்விளக்கம் காணப்படுகிறது. இச்சொற்கள் பெறப்பட்ட கல்வெட்டுகள் பற்றிய குறிப்பேதும் இவ்வகராதிகளில் காணப்படாமையின் இச்சொற்கள் மொராவியத்தைக் குறிக்கின்றனவா அல்லது வேறு கருவிகளைச் சுட்டுகின்றனவா என்பதை அறியக் கூடவில்லை.[106]

இதேபோல் இலக்கியங்களில் இடம்பெறாத மற்றொரு இசைக் கருவி பாடவியம். இராஜராஜீசுவரத்தில் இவ்விசைக்கருவியை வாசிக்க நான்கு[107] கலைஞர்கள் இருந்தனர். இவர்களுள் ஒருவர் அரையன் வாத்யமாராயன் என்ற சிறப்புப் பெயராலேயே அழைக்கப்பட்டார். ஏனைய மூவருள் பிரமகுட்டன் கணவதியும் போகயன் பொரியிலனும் வாத்யமாராயர் விருது பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுள்

பிரமகுட்டன், இருமுடிச்சோழ வாத்யமாராயனென்றும் பொரியிலன், மும்மடிச்சோழ வாத்யமாராயனென்றும் அழைக்கப்பட்டனர். விருதுகள் ஏதுமற்ற இசைக்கலைஞராகக் கூத்தன் பிரமவிடங்கன் காட்சி தருகிறார்.

மௌராவியம் போலவே பாடவியமும் இலக்கியங்களில் இடம் பெறாது போனாலும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது. திருவிடை மருதூர் மகாலிங்கர் கோயிலில் உள்ள முதலாம் இராசாதிராசரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று[108] இக்கோயிலில் பாடவியம் வாசிக்கப்பட்ட தகவலைத் தருகிறது. இவ்விசைக்கருவியை வாசித்த அரையன் திருவிடைமருதுடையானான மும்முடிச்சோழ நிருத்தப்பேரையனுக்கும் அவன் வர்க்கத்தாருக்குமாக அரசரே நேரடி ஆணை வழி நித்த நிவந்தமாக இரு தூணி நெல்லும், வாழ இரண்டு மனைகளும் தந்திருப்பதைக் கல்வெட்டு வழி அறியமுடிகிறது. இதன்படி பாடவிய இசைக்கலைஞர் இரண்டு வேலி நிலத்தின் விளைவாக ஆண்டொன்றுக்கு இருநூற்று நாற்பது கலம் நெல் பெற்றார்.

இராஜராஜீசுவரத்துப் பாடவியக் கலைஞர்களும் தலைக்கு இரு வேலி நிலத்து விளைவையே ஆண்டு வருவாயாகப் பெற்றனர் என்றாலும் அது இருநூறு கலம் நெல்லாகவே இருந்தது குறிப்பிடத் தக்கது. மௌராவியம், பாடவியம் என்னும் இவ்விரு இசைக்கருவிகளை இசைத்த கலைஞர்கள் ஒரே நிலையில் வைத்து எண்ணப்பட்டனர் என்பதற்கு இவர்களுக்குத் தரப்பட்ட ஊதிய அளவே சான்றாகும்.

காண, பாட[109] இராஜராஜீசுவரத்தில் ஐவர்க்குப் பங்கு ஒதுக்கப் பட்டிருந்தபோதும் இருவர் பெயர்களே கல்வெட்டில் தரப்பட்டுள்ளன. இவ்விருவருள் முண்டகாரி அணுக்கன் தம்முடன் மேலும் இருவரைச் சேர்த்துக்கொண்டு பாடவும் ஆச்சன் கீர்த்திபூஷணன் ஒருவரை சேர்த்துக்கொண்டு பாடவும் வாய்ப்புப் பெற்றிருந்தனர். கீர்த்தி பூஷணனுக்கு அறிஞ்சிகைக் காமரப்பேரையன் என்ற சிறப்புப் பெயர் இருந்தது. காமரப் பண் பாடுவதில் இவர் தேர்ந்தவராயிருந்தார் என்பது இவரது சிறப்புப் பெயரால் தெரியவரும் உண்மையாகும். சிவபெருமானே காமரப் பண்ணில் திளைத்தவர்தான் என்பது இங்கு நினைக்கத்தகுந்தது. அப்பர் தம் பதிகங்களில் இந்த அரிய செய்தியை மிக அழகாகப் பாடியுள்ளார்.[110]

ஆரியம் பாடும் பொறுப்பு அம்பலநாதனிடம் தரப்பட்டிருந்தது. அரையன் என்றும் செம்பியன் வாத்யமாராயன் என்றும் சிறப்புப் பெயர்கள் பெற்றிருந்த இவர் தம்மோடு இருவரை இணைத்துக் கொண்டு ஆரியம் பாடுமாறு செய்யப்பட்டிருந்தது. ஆரியம் என்பதன்

வழி கல்வெட்டு, பொதுவான வடமொழிப் பாடல்களைக் குறிக்கிறதா அல்லது ஆரியக் கூத்திற்கான பாடல்களைக் குறிக்கிறதா என்பதை அறியக்கூடவில்லை.

ஆரியம் பாட மூவர் இருந்தாற் போலத் தமிழில் பாடப் பட்டாலகன், அமுதன் காணி, வாணராசி கூத்தன், சூற்றி என்னும் நால்வர் இருந்தனர். இவர்களுள் சூற்றிக்கு அரையன் என்னும் சிறப்புப் பெயர் இருந்தது. பட்டாலகன் காமரப்பேரையனாகத் திகழ்ந்தார். இவர்களுக்கும் ஆரியம் பாடிய மூவர்க்கும் ஒரே அளவிலான ஊதியம் தரப்பட்டுள்ளமையை நோக்க இராசராசர் காலத்தில் ஆரியம், தமிழ் இரண்டும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கப் பட்டமையை உணரலாம்.

இப்பாடல்களுக்கும் இதற்கான ஆடல்களுக்கும் இதமான இசை தர வங்கியம், உடுக்கை, வீணை, முத்திரைச்சங்கு, கொட்டி மத்தளம் போன்ற இசைக்கருவிகள் இயக்கப்பட்டன. வீரசோழ விடங்கனான இராஜராஜ ஸ்ரீஹஸ்தன், கூத்தன் ஆதித்தனான இராஜராஜ சஹஸ்ரபாஹு என்னும் இருவரும் உடுக்கை வாசிக்கவும் காந்தர்வதாசன், காந்தர்வ துறைக் கவாலி என்பார் இருவரும் கொட்டி மத்தளம் வாசிக்கவும் பொறுப்பேற்றிருந்தனர். வங்கியம்[111] வாசிக்கக் குதிரைச்சேவகர் தஞ்சைக் கணவதி, வடுகக் காந்தர்ப்பர் செருவத்தவிரையன் ஆகியோருடன் இராசேந்திர தஸ்ரையனும் இருந்தார்.

இக்கோயிலில் வீணை வாசிக்க சுப்பிரமணியன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தன் என்பார் பொறுப்பமர்த்தப்பட்டார். இவர் தம்முடன் துணைக்கு ஒருவரைக் கொள்ளுமாறு அனுமதிக்கப் பட்டிருந்தார்.[112] பணியிலிருந்தபோதே இவர் மரணமடைந்ததால், இவர் மகளை மணந்த அரையன் சதாசிவன் மாமனார்க்குப் பதிலாக அப்பொறுப்பில் பணியமர்த்தப்பட்டார். முத்திரைச்சங்கு ஊத மூவர்[113] தரப்பட்டிருந்தனர். ஒருவர் ஆனைப்பாகன் சூற்றி. மற்றவர் தயிலன் விக்கியண்ணன். மூன்றாமவர் தஞ்சாவூர் எரியூர் நாட்டுத் தளியைச் சேர்ந்த உவைச்சர் பொறகாளி தொண்டையன். இவர்களுக்குத் தரப்பட்ட ஊதியமும் கொட்டி மத்தளம் வாசித்தவர்க்குத் தரப்பட்ட ஊதியமும் ஒரே நிலையில் இருந்தன.

தளிச்சேரிப் பெண்களையும் காந்தர்விகளையும்[113A] மேற் பார்வையிடவும் அவர்தம் பணிகளை ஒழுங்குபடுத்தவும் கோவிந்தன் சோமநாதன், சாவூர் பரஞ்சோதி என்னும் இருவர் இருந்தனர். இவர்கள் பணி 'நாயகம் செய்தல்' என்று கல்வெட்டில் குறிக்கப் படுகிறது. நாயகம் செய்தல் பல்லவர் காலத்திலிருந்தே வழக்கில் இருந்தமையைத் தொண்டூர்க் கல்வெட்டால்[114] அறிய முடிகிறது.

குடியில் நாயகம் செய்தவர்களை அறிமுகப்படுத்தும் இக்கல்வெட்டு தந்திவர்மரின் ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். நாயகம் செய்தல் முதலாம் இராசராசர் காலத்திற்குப் பிறகும் தொடரப்பட்டதை இரண்டாம் குலோத்துங்கரின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. திருப்பதியம் பாடுவாரின் நாயகமாய் இருந்த திருச்சிற்றம்பலமுடையான் நாகதேவனான தியாகசமுத்திரப் பிச்சனை அறிமுகப்படுத்தும் இக்கல்வெட்டு 'இவன் இட்டாரே திருப்பதியம் பாடவும்' என்ற மன்னரின் ஆணையையும் வெளிப்படுத்துகிறது.[115]

இராஜராஜீசுவரத்தில் முரசு கொட்ட 'உவைச்சுக்கு உள்படுவோர்' என்ற பெயரில் ஐந்து குழுக்களாகச் சகடை கொட்டிகள் பணியமர்த்தப் பட்டிருந்தனர். பதின்மர் அடங்கிய இக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒருவர் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார். அய்யன் பொய்யிலி, தாமோதிரன் செட்டி, பாழி அரங்கம், சாத்தன் அம்பலம், சத்தி இரண கேரளன் என்னும் இவ்வைந்து தலைமைப் பொறுப்பாளர்களுள், அய்யன் பொய்யிலி, நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூராகிய பஞ்சவன்மாதேவி சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த வராகக் குறிக்கப்படுகிறார். தலைமைப் பொறுப்பாளர்கள் உட்படச் சகடை கொட்டிகள் அனைவர்க்கும் ஒரே அளவிலான ஊதியம் (பங்கு) வழங்கப்பட்டது.

சகடை கொட்டிகளைத் தவிர உவைச்சுக்கு உள்படும் தடி மாறுபவர்களாக ஒரு குழு இருந்துள்ளது. பதின்மர் அடங்கிய இக்குழுவிற்கு அரையன் உதைய மார்த்தாண்டன் பொறுப் பேற்றிருந்தார். சகடை கொட்டிகளுக்குத் தரப்பட்ட அதே ஊதியத்தை இவர்களும் பெற்றனர். இச்சகடை கொட்டிகள் மற்றும் தடி மாறுவோர்க்கு அளிக்கப்பட்டிருந்த நிலப்பங்கு பாதவக்காணி என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

பொன்னமராவதிக்கு அருகிலுள்ள திருக்கோளக்குடிக் குடைவரையின் படிக்கட்டுப் பிடிச்சுவரில் அண்மையில் இக்கட்டுரை யாசிரியர்களால் கண்டறியப்பட்ட முதலாம் குலோத்துங்கர் காலக் கல்வெட்டொன்று[116] உவச்சர்களுக்குத் தரப்பட்ட நிலத்தைப் பராசவக் காணியென்று குறிப்பிடுகிறது. கல்வெட்டின் இரண்டு இடங்களில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. பராசவம், பாதவம் இரண்டில் எது சரியான சொல்லாட்சி என்பது குறித்தும் இச்சொற்களின் பொருள் குறித்தும் ஆய்வுகள் தொடர்கின்றன.

இராஜராஜீசுவரத்தில் இசை மற்றும் ஆடல் தொடர்புடைய பணிகளில் அமர்ந்த இந்த நூற்றுமுப்பத்தெட்டுக் கலைஞர்களுள் பணியிலிருந்தபோதே இறந்தவர்களாக மூவர் குறிக்கப்பெறுகின்றனர்.

இவர்களுள் இருவர் பக்கவாத்தியக்காரர்களாக இருந்தனர். இந்த இருவருள் பராந்தகக் கொங்கவாள் பிரிவைச் சேர்ந்த கீர்த்திநாதன் இறந்தபோது அவர் தம்பி கீர்த்தி கிளைதாங்கிக்கு அப்பணி தரப்பட்டது. கீர்த்திநாதனுக்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலப்பகுதியின் உரிமையைக் கிளைதாங்கி அனுபவித்துக்கொள்ள நிவந்தக்காரர் களுக்கென விதிக்கப்பட்டிருந்த பணி ஒப்பந்த விதிகள் இடம் தந்ததைத் தளிச்சேரிக் கல்வெட்டு இனிதே உணர்த்துகிறது. இது போலவே அரிதுர்க்கலங்கனத் தெரிந்த வலங்கை வேளைக்காரராய் இருந்து பக்கவாத்தியப் பொறுப்பேற்றுக் கோயிலுக்கு வந்த நூற்றெண்மன் சூற்றி இறந்தபோது, அப்பணியில் அவர் தம்பி நூற்றெண்மன் பிள்ளை அமர்த்தப்பட்டதுடன் நிலப்பங்கும் அவர் பெயருக்கு மாற்றித் தரப்பட்டது.

வீணை வாசிக்கும் பொறுப்பிலிருந்த சுப்பிரமணியன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தன் உயிரிழந்தபோது அவர் மகளை மணங்கொண்ட அரையன் சதாசிவனுக்கு அப்பணி தரப் பட்டது. இச்சதாசிவன் வீணை ஆதித்தனுக்கு நெருங்கிய உறவாகவும் இருந்துள்ளார். இந்த உறவுமுறையைக் குறிக்கும் கல்வெட்டுப்பகுதி அழிந்துள்ளமையால் விளக்கமாக இது பற்றி அறியக்கூடவில்லை.[117]

### *தொழிலர்கள்*

ஆடல் மற்றும் இசைக்கலைஞர்கள் தவிர எழுபத்தொன்பது பலபணி நிவந்தக்காரர்களையும் இத்திருக்கோயிலுக்கு இராசராசர் உவந்தளித்திருக்கிறார். பல கோயில்களில் இதுபோன்ற பலபணி நிவந்தக்காரர்கள் இருந்தமையைக் கல்வெட்டுகள் குறித்தபோதும், இவர்கள் பார்த்த பல பணிகள் என்னென்ன என்பதற்கான விளக்கங்கள் மிகச் சில கல்வெட்டுகளிலேயே கிடைக்கின்றன.

உத்தமசோழரின் கோனேரிராசபுரத்துக் கல்வெட்டு அவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு உத்தமசோழரின் கல்வெட்டில் காணப்படாத பல பணிகளைச் சுட்டுவதால் தனித்தன்மையுடையதாகிறது. இக்கல்வெட்டு பதினெட்டு விதமான பணிகளைக் குறிக்கிறது. இவற்றுள் பள்ளித்தொங்கல் பிடிப்பது ஒன்றாகும். இப்பணி செய்தார்க்கு ஐந்து வேலி நிலம் ஒதுக்கப்பட்டது. பதின்மரைக் கொண்டு இப்பணி செய்யும் பொறுப்பு திருவிசலூரான் மும்மடிச்சோழத் தொங்கற்பேரையனிடமும் குப்படி வன்னியான சத்திரிய சிகாமணித் தொங்கற்பேரையனிடமும் ஒப்பு விக்கப்பட்டது.[118] பொறுப்பாளர்களுக்கு ஒரு வேலி என்றும்

அவர்க்குக் கீழ் பணியாற்றியவர்களுக்குத் தலைக்கு எட்டு மா என்றும் நிலம் பங்கீடு செய்யப்பட்டிருந்தது.

வழிபாட்டுப் படையலுக்கான உணவுவகைகளைத் தயாரிக்கும் மடைப்பள்ளிக்கு மட்பாண்டங்கள் வழங்கும் பணிக்கெனப் பதினொரு குயவர்கள்[119] பணியமர்த்தப்பட்டிருந்தனர். இவர்களுள் தலைமைப் பொறுப்பேற்றிருந்த குயவர் ஒரு பங்கு ஊதியம் பெற, பிற குயவர்கள் தலைக்கு அரைப்பங்கு பெற்றனர். மடைப்பள்ளிக் குயவர்கள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் தஞ்சாவூர் வீரசிகாமணிப் பெருந்தெருவில் குடியிருந்தனர். கோயிலில் பயன்படுத்தும் துணிகளை வெளுக்க வண்ணார் இருவர் பணியிலிருந்தனர். இவர்களை வண்ணத்தார்[120] என்றும் ஈரங்கொள்ளிகள் (ஈரங்கொல்லிகள்) என்றும் கல்வெட்டு குறிக்கிறது. குயவர்கள் குடியிருந்த அதே வீரசிகாமணிப் பெருந் தெருவில் இவர்களும் குடியிருந்தனர்.

நீர் தெளித்துத் தூய்மைப்படுத்தும் பணியில் நால்வரும் சன்னாலியளாக[121] இருவரும் இருந்தனர். விளக்கேற்றும் பணி புவனிசேகரன் கற்பகமான பஞ்சவன்பேரையனிடம் தரப்பட்டிருந்தது. இவர் ஏழு ஆட்களின் உதவியோடு இப்பணியை மேற் கொண்டிருந்தார்.[122] புவனிசேகரனுக்கு ஒரு பங்கும் பணியாளர் களுக்குத் தலைக்கு அரைப்பங்குமென ஊதியம் வரையறுக்கப் பட்டிருந்தது. கோயில் அம்பட்டராகக் கோன் சடங்கவியான இராஜராஜப் பிரயோகதரையன் பணியாற்ற, நாவிசஞ் செய்ய இருவர்[123] இருந்தனர். இவர்களுள் நெயதீரன் நெத்தானனான இராஜராஜப் பெருநாவிசன் ஒருவர். மற்றொருவர் பெயர் கல்வெட்டில் இடம்பெற வில்லை.

அம்பட்டர் ஒரு பங்கு ஊதியமாகப் பெற்ற இக்கோயிலில் நாவிசஞ் செய்தவர்கள் அரைப்பங்கு பெற்றுள்ளனர். அம்பட்டர், நாவிசர் என்னும் இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தந்தாலும் ஊதிய விகிதம் கொண்டு பார்க்கும்போது பணி மாறுபாடு இருந்திருக்கவேண்டுமென்பதை ஊகிக்கலாம். திருமுக்கூடல் கல்வெட்டில் குறிக்கப்படும் நாவிசர் சிறிய அளவிலான அறுவைகளைச் செய்திருக்க வேண்டுமென்று திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் எழுதியிருப்பது இங்குக் கருதத்தக்கது.[124]

பெருங்கணி ஒருவரும் கணிதாதிராஜர் ஒருவரும் கோயில் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான நாள், கோள் பார்த்துச் சொல்லும் பொறுப்பிலிருந்தனர். இவர்களுள் துணையன் ஆதித்தனான செம்பியன் கொற்றப்பெருங்கணி, தம் கீழ் இருவர்

கொண்டு பணி செய்தார். பராந்தகன் பாண்டியகுலாசனியான இராஜராஜக் கணிதாதிராஜனும் தம் கீழ் இருவரைக் கொண்டிருந்தார். கீழாட்களுக்குத் தலைக்கு அரைப்பங்கும் தலைவர்களுக்குத் தலைக்கு ஒரு பங்கும் ஊதியமாக இருந்தது. இவர்கள் 'திரு'[125] என்றழைக்கப் பட்டனர். கணிதாதிராஜன் என்னும் சொல்லில் ஒளிந்திருக்கும் 'கணிதம்' சிலப்பதிகாரத்தின் இந்திர விழவூரெடுத்த காதையில் காணப்படும் சொல்லாகும்.

'வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்'[126]

மணிமேகலையும் காலக் கணிதம், காலக் கணிதர் என்னும் சொற்களைப் பெய்துள்ளது.[127] கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் கணிதத்தைக் குறிப்பிடுகிறது.[128]

காவிதிமை, கோயின்மை என்று இரண்டு வகைப் பணிகள் தளிச்சேரிக் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் கோயின்மை[129] செய்ய அரையன் பவருத்திரனான பஞ்சவன் மங்கலப்பேரையன் அமர்த்தப்பட்டிருந்தார். இவர் மேலும் ஒருவர் துணைகொண்டு பணி செய்தார்.[129A] காவிதிமை[130] செய்ய மணலி லிங்கனான செம்பியன் பெருங்காவிதியும் ஆச்சன் திருவேங்கடமான இராஜராஜப் பெருங்காவிதியும் இருந்தனர். கோயில் துணிகளைத் தைக்கும் பணியைத் தேவன் கவாலியும் சிப்பன் மழபாடியும் பார்த்துக் கொண்டனர்.[131] இவர்களுள் தேவன் கவாலி வீரசோழப் பெருந்தய்யான் என்றும் சிப்பன் மழபாடி கேரளாந்தகப் பெருந்தய்யான்[132] என்றும் சிறப்புப் பெற்றிருந்தனர். இரத்தினங் களைத் தைப்பதற்காக ஆச்சன் கருந்திட்டை இருந்தார். சத்திரிய சிகாமணிப் பெருங்கன்னான்[133] என்ற விருதுடன் இடைக்கரை காரி பணியாற்றினார்.

இக்கோயிலில் தச்சாச்சார்யம் செய்யும் பொறுப்பை வீரசோழன் குஞ்சர மல்லனான இராஜராஜப் பெருந்தச்சன் பெற்றிருந்தார். இவர் கீழ் இருவர் பணியாற்றினர். கீழ்ப்பணியாளர் தலைக்கு முக்கால் பங்கு ஊதியம் பெறத் தச்சாச்சார்யர் ஒன்றரைப் பங்கு பெற்றார். குணவன் மதுராந்தகனான நித்தவிநோதப் பெருந்தச்சனும் இலத்திச் சடையனான கண்டராதித்தப் பெருந்தச்சனும் தலைக்கு முக்கால் பங்கு ஊதியத்தில் இக்கோயிலில் தச்சுப் பணி[134] செய்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஊதிய விகிதம், தொழிற்பெயர், பிற கல்வெட்டுச் சான்றுகள்[135] கொண்டு இவர்களை மரவேலை செய்தவர்களாகவும் முன்னவர்களைச் சிற்பவேலை செய்தவர்களாகவும் பிரித்தறியலாம்.

உத்தமன் தூற்றியான அரிகுலகேசரி சாக்கை, அய்யாறன் அறிஞ்சி, அபராயிதன் வடவாயிலான பல்லவன் சாக்கை, வடுவூர் அறிஞ்சி ஆகிய நால்வரும் பாணர்களாக இருந்தனர். தலைக்கு ஒன்றரைப் பங்கு ஊதியம் பெற்ற இவர்கள், கோயிலில் பாட்டு சொல்லித் தரும் பணியை மேற்கொண்டிருந்தனர். இவர்களைக் கோயிலில் சாக்கைக் கூத்து ஆடியவர்களாகத் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் தம் நூலொன்றில் குறிப்பிட்டுள்ளது சரியன்று.[136] அப்படியொரு தகவல் கல்வெட்டில் யாண்டும் காணப்படவில்லை. பாணர் என்ற சொல் பாடுநரைக் குறிப்பதாகும். திருவிடைமருதூர்க் கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்கரின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[136A] பாணன் இருமுடிச்சோழன் பிரானான அசஞ்சலப் பேரையனை அடையாளம் காட்டுவதுடன் அவர் பணியையும் 'திருவிடைமருதுடையார்க்குப் பாடவும் இக்கோயிலில் தளியிலார், தேவரடியாரைப் பாட்டுவிக்கவும் பாணரை இடக் கடவாநாகவும்' என்று தெளிவாகச் சுட்டுகிறது. பாணக் காணியாக நிலமும் பாணர் குடியிருப்பாக மனையும் பெற்றுத் திருவிடைமருதூரில் வாழ்ந்த இவருக்காக அரசரே நேரடி ஆணை பிறப்பித்துள்ளமை பாணர்க்கு அந்நாளில் தரப்பட்ட மதிப்பை உணர்த்துவதாகும்.

திருவாய்க்கேள்விகளாகக் குமரன் ஐயமானன், குமரன் அருமொழி, ராஜகேசரி கோதண்டராமன்,[136B] ஆச்சன் மதிகிழவன், மொகிலியன் சோமன் பராந்தெருமான் ஆகிய ஐவர்[137] பணியமர்த்தப் பட்டிருந்தனர். இவர்களுள் முதல் நால்வரும் கடிகைமாராயன் எனும் பட்டம் பெற்றிருந்தனர்.[138] இப்பட்டத்திற்கு முன்னால் மும்மடிச்சோழ, இராஜராஜ, ஜயங்கொண்ட சோழ, அழகிய சோழ என்னும் அரசர் சார்ந்த சிறப்புப் பெயர்களையும் இவர்கள் கொண்டிருந்தனர். இதுபோல் சிறப்புப் பெயர்கள் ஏதும் கொண்டிராத மொகிலியன் சோமன், பாண்டியகுலாசனி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டு வங்காரமான திருநாராயண சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்தவராகக் குறிக்கப்படுகிறார்.

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு செம்பங்குடியான் தன்னிச்சை சதுரவிடங்கன், பாண்டியகுலாசனி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டுக் கடைய்க்குடி மாதேவன் சிவலோகசுந்தரன், சத்திரியசிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துக் கீழ்க்குடி நக்கன் பெருமான், நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு மாங்குடி அய்யாறன் பொற்சுவரன் ஆகிய நால்வரும் கணக்கர்களாகப் பணியாற்றினர். இவர்கள் ஒவ்வொருவர் கீழும் கணக்கெழுதுவார் இருவர் இருந்தனர்.[139] கணக்கர்களுக்குத் தலைக்கு இரண்டு பங்கும்

கணக்கெழுதுவார்க்குத் தலைக்கு முக்கால் பங்குமாக ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இப்பணியாளர்கள் அனைவரையும் ஓர் ஆள் இட்டுக் கண்காணித்துக்கொள்ள வாய்ப்பாகக் கண்காணித் தட்டான்மை என்னும் பொறுப்பை இராஜராஜதேவர் சிறுதனத்துக் கண்காணித் தட்டான் கூத்தன் கணவதியான சத்திரியசிகாமணிப் பெருந்தட்டான் ஏற்றிருந்தார்.[139A]

### *விதிகளும் ஊதியமும்*

முதலாம் இராசராசர் காலத்தில் சோழநாட்டில் வாழ்ந்த நானூறு தளிச்சேரிப் பெண்களும் நூற்று முப்பத்தெட்டு ஆடல் மற்றும் இசை தொடர்பான கலைஞர்களும் எழுபத்தொன்பது பலபணி அலுவலர்களும் இக்கல்வெட்டின் *மூலம் வரலாற்று* வெளிச்சத்திற்கு வருகின்றனர். இந்த அறுநூற்றுப்பதினேழு பேரையும் அறிமுகப் படுத்தும் எழுபத்துமூன்று வரித் தமிழ்க்கல்வெட்டு இவர்களைப் பணியமர்த்தியபோது கடைப்பிடிக்கப்பட்ட ஒப்பந்த விதிகளையும் இவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வாழ்வூதிய அளவுகளையும் மிகத் துல்லியமாகப் பதிவு செய்துள்ளது.

கலைஞர்கள் மற்றும் தொழிலர்கட்கு அவரவர்தம் பணிக்கேற்ப பங்குகள் ஒதுக்கப்பட்டன. ஒரு பங்கு என்பது நூறு கலம் நெல் விளைவைத் தரவல்ல ஒரு வேலி நிலத்தைக் குறித்தது. இந்த நெல் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கப்படுமென்றும் இந்த மரக்கால் கோயிற் பண்டாரம் சார்ந்த இராசகேசரி என்னும் பெயருடைய மரக்காலை ஒத்தது என்றும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அளவு நிர்ணயம் செய்யப்பட்டுத் தகுதிசான்றது என்ற முத்திரை குத்தப்பெற்ற மரக்காலாக இராசகேசரியைக் கருதலாம்.

நட்டவம் மற்றும் நாயகம் செய்தவர்களுக்கும் தலைமைக் கணக்கர்களுக்கும் பாடவியம், மொராவியம் ஆகிய இசைக்கருவிகளை இயக்கிய கலைஞர்களுக்கும் தலைக்கு இரண்டு பங்கென இருநூறு கலம் நெல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வீணை வாசித்த இருவர்க்கும் தலைக்கு ஒன்றேமுக்கால் பங்காக நூற்று எழுபத்தைந்து கலம் நெல் தரப்பட்டது. வங்கியம், உடுக்கை வாசித்தவர்க்கும் ஆரியம், தமிழ் பாடியவர்க்கும் காண, பாட இருந்தவர்க்கும் பாட்டு சொன்னவர்க்கும் தச்சாச்சார்யர், ரத்னத் தையற்காரர், பாணர் மற்றும் கோயின்மை செய்தார்க்கும் ஒன்றரைப் பங்கென நூற்றைம்பது கலம் நெல் தரப்பட்டது. தளிச்சேரிப் பெண்கள் அனைவர்க்கும் தலைக்கு ஒரு பங்கு ஒதுக்கப்பட்டது. வண்ணத்தார், அம்பட்டர், தையற்காரர்,

கன்னார், தலைமைக்குயவர், தலைமை விளக்கேற்றி, நாள் குறிப்பார் தலைவர், திருவாய்க்கேள்விகள், முத்திரைச்சங்கு ஊதுவார், கொட்டி மத்தளக்காரர், கண்காணித் தட்டான்மை ஆகிய பதினொரு வகை அலுவலர்க்கும் தலைக்கு ஒரு பங்காக ஆளுக்கு நூறு கலம் நெல் தரப்பட்டது. பக்கவாத்தியக்காரர்களும் காந்தர்வர்களும் கீழ்க்கணக்குகளும் சன்னாவியள் மற்றும் தச்சு ஆட்களும் ஆளுக்கு முக்கால் பங்கென எழுபத்தைந்து கலம் நெல் பெற்றனர்.

உவைச்சர்கள், தடி மாறுவார், நீர் தெளித்தவர், மடப்பள்ளிக் குயவர், பள்ளித்தொங்கலுக்கு உட்பட்டார், காவிதிமை மற்றும் நாவிசம் செய்தவர், விளக்கேற்றிய துணைவர்கள், கணிகளின் கீழ்ப்பணியாளர் ஆகியோர் அரைப்பங்காய் ஐம்பது கலம் நெல் வாங்கினர். பள்ளித் தொங்கல் பிடித்தவர்கள் அரைப்பங்கிற்கும் கீழான ஊதியம் பெற்றனர்.

தொழிலுக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு வாழ்வூதியமாகத் தரப்பட்ட இந்த நெல் ஒதுக்கீடு ஐந்நூற்றெண்பத்தைந்தே முக்கால் வேலி நிலத்திலிருந்து பெறப்பட்டதாகும். இந்த நெல்லை இவர்கள் கோயில் பண்டாரத்திலிருந்து பெற்றதாகக் கருதலாம். கோயில் பண்டாரத்திற்கு விளைநிலங்களிலிருந்து இந்நெல் கொணரப்பட்டுப் பாதுகாக்கப் பட்டிருக்கவேண்டும்.[140]

பணியமர்த்தப்பட்டவர்கள் அனைவர்க்கும் சில பொதுவான பணி ஒப்பந்த நெறிகள் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளன. பணியாளர்கள் யாரேனும் இறந்தாலோ, அல்லது வெளிநாடு சென்று விட்டாலோ அவர்களுடைய நெருங்கிய உறவினர் யாரேனும் அப்பணிக்குரிய தகுதி பெற்றிருப்பின் அவர்கள், அப்பணியில் அமர்ந்து பணிக்குரிய ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இறந்தவர் செய்த பணியைத் தொடரும் திறமை நெருங்கிய உறவினர்களுள் எவருக்கும் இல்லையாயின் அவர்கள் அப்பணி தொடரவல்ல திறனாளரைத் தேர்ந்து பணிக்கிட்டு ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

நெருங்கிய உறவினர்களே இல்லையாயின், அப்பணி செய்யும் பிறர், பணிக்குரிய திறனாளரைத் தேர்ந்தெடுத்து பணிக்கிடல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர், பணி செய்து, உரிய நெல்லூதியம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த விதிமுறைகள், ஒழுங்குறப் பின்பற்றப்பட்டதற்கு இக்கல்வெட்டிலேயே மூன்று சான்றுகள் உள்ளன. வீணைக் கலைஞர் சுப்பிரமணியன் கூத்தன் இறந்தபோது அவர் மகளை மணந்த

அரையன் சதாசிவனுக்கு அப்பணி தரப்பட்டது. பக்கவாத்தியக்காரர் களான கீர்த்திநாதனும் நூற்றெண்மனும் இறந்தபோது அப்பணிகளில் அவர்தம் தம்பியர் கீர்த்தி கிளைதாங்கியும், நூற்றெண்மன் பிள்ளையும் பணியமர்ந்தனர்.

கலைஞர்கள் வெளிநாடு போனமைக்கோ, அடுத்த முறையாய் அமைந்த நெருங்கிய உறவுகளுள் திறனாளர் இல்லாது அதன் விளைவாய் ஆள் தேர்ந்து பணி செய்வித்தமைக்கோ இக்கல்வெட்டில் சான்றுகள் இல்லை.

### *முடிவுரை*

பணியாளர், பணியூதியம், பணி ஒப்பந்த நெறி, பணியின் தன்மை பேசும் இக்கல்வெட்டு அந்நாளைய கோயில்கள், இசைக் கருவிகள், நாட்டமைப்புகள், அங்கிருந்த தளிச்சேரிகள் என அள்ளித்தரும் வரலாற்றுச் செய்திகள் அளப்பரியன. முதலாம் இராசராசரின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டு, அந்த இருபத்தொன்பதாம் ஆண்டுவரை இராஜராஜீசுவரத்து இறைவனுக்கு நிவந்தக்காரர்களாக இராசராசர் கொடுத்த பலபணி அலுவலர்களையும் தளிச்சேரிப் பெண்டுகளாகச் சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து கொண்டுவந்து குடியமர்த்திய தளிச்சேரிப் பெண்களையும் படம்பிடிக்கிறது. 'இருபத்தொன்பதாம் ஆண்டு வரை தரப்பட்ட,[141] என்ற வரியால் இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வந்தவர்களல்ல என்பதையும் படிப்படியாக, முறையாகத் திட்டமிட்டுத் தேர்ந்து கொணரப்பட்டுப் பணியமர்த்தப் பட்டவர்கள் என்பதையும் தெள்ளிதின் உணரலாம்.

மன்னர்களுள் ஒரு மாமணியாய்த் திகழ்ந்த முதலாம் இராசராசரின் இராஜராஜீசுவரம் எப்படி ஓர் இணைகாட்ட முடியாத நளினக்கலை உழைப்பின் கனிந்த முத்தாய்ப்போ, அதுபோலவே அவருடைய இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டுகளும் தமிழகத்தின் பிற கல்வெட்டுகள் எவற்றோடும் ஒப்பிடமுடியாத வரலாற்று வெளிச்சங்கள். அந்த வெளிச்சக்கோடுகளில் ஒரு கீற்றே தளிச்சேரிக் கல்வெட்டு.

### *ஏற்புக்கோடல்*

தளிச்சேரிக் கல்வெட்டிற்கான களஆய்வுகள் நிகழ்த்தத் தேவையான உதவிகளைச் செய்தருளிய இராஜராஜீசுவரத்து இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் பராமரிப்பு அலுவலர் திரு. த.பரமநாதன், திரு. கு. வைத்தியநாதன் மற்றும் உதவியாளர்கள் அனைவர்க்கும் இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

### அடிக்குறிப்புகள்

1. களஆய்வு மேற்கொண்ட நாட்கள் 23.7.1995, 10.8.1995, 5.12.1995.
2. அகநானூறு, மணிமிடைபவளம், ந.மு. வேங்கடசாமி நாட்டார், இரா.வேங்கடாசலம் பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை – 600 018, 1944, பா.139, அடி 5.
3. குறுந்தொகை, உ.வே. சாமிநாதையர் உரை, தியாகராச விலாச வெளியீடு, 1937, பா. 65, அடி 3.
4. நற்றிணை நானூறு, பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் உரை, கழக வெளியீடு, 1976, பா. 209, அடி 2.
5. மேலது, பா.264, அடி 2.
6. ஐங்குறுநூறு, மூன்றாவது தொகுதி, அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1958, பா. 423, அடி 1.
7. கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, 1938, பா.53, அடி 22–23.
8. பரிபாடல், உ.வே. சாமிநாதையர் உரை, தியாகராச விலாச வெளியீடு, 1956, பா.12, அடி 3.
9. மதுரைக்காஞ்சி, பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), கழக வெளியீடு, 1968, அடி 263.
10. பட்டினப்பாலை, பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), அடி 3.
11. மலைபடுகடாம், பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), அடி 385.
12. சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1985, பக்.430, 88, 418, 56, 362, 495.
13. சிறுபஞ்சமூலம், பதினெண் கீழ்க்கணக்கு (இரண்டாம் தொகுதி), எஸ்.ராஜம் வெளியீடு, சென்னை – 600 001, 1959, பக்.266, பா.61.
14. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, சோலை நூலகம், மதுரை, 1980, பக். 188, 207.
15. ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1963, பக்.510.
16. மேலது, பக்.556.
17. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் பாண்டியர் காலம் முதற்பகுதி, தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு, சென்னை, 1990, பக்.155.
18. பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு, சென்னை, 1966, பக்.52.
19. SII.14, ins.2.

20. ஆர். வெங்கட்ராமன், *இந்தியக் கோவில் கட்டிடக்கலை வரலாறு*, என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1983, பக்.36.

21. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, 1973, பக்.76.

22. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், கழக வெளியீடு, 1956, பக்.530.

23. அகநானூறு, பா.220, அடி 1.

24. ஐங்குறுநூறு, பா.279, அடி 4–5.

25. கலித்தொகை, பா.117, அடி 6.

26. அகநானூறு, பா.200, அடி1–2. தெரு என்ற சொல்லும் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. நற்றிணை, பா.30, அடி 4.

27. நற்றிணை, பா.385, அடி 5.

28. *மேலது, பா.249,* அடி 9.

29. மேலது, பா.331, அடி 12.

30. மதுரைக்காஞ்சி, அடி 136, 329, 594, 615, 619.

31. சிலப்பதிகாரம், காதை 14, அடி 212.

32. மேலது, காதை 5, அடி 14–15.

33. மேலது, காதை 5, அடி 203.

34. மேலது, காதை 6, அடி 133.

35. மேலது, காதை 7, பா.10, அடி 1.

36. மேலது, காதை 7, பா.38, அடி 2.

37. மேலது, காதை 22, அடி 114.

38. மேலது, காதை 23, அடி 161.

39. இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1954, பக்.211.

40. SII.2, ins. 94.

41. SII. 24, ins. 142.

42. 'தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகையின் வெளிப்புறச் சுவரில் வடமேற்கு மூலையில் அனுக்கன் திருவாயிலை ஒட்டியே 400 ஆடல் மகளிருக்குரிய தளிச்சேரி வீடுகள் பற்றிய கல்வெட்டுகள் பொறிக்கப்பெற்றிருப்பதால் இத்தளிச்சேரிகள் கோயிலின் வெளியே வடமேற்குப் பகுதியில்தான் திகழ்ந்திருக்கவேண்டும் என எளிதில் ஊகிக்கமுடிகிறது'. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1995, பக்.37.

    இந்தக் கூற்றிலுள்ள முதற்பிழை, 'தளிச்சேரி வீடுகள் பற்றிய கல்வெட்டுகள்' என்று பன்மையில் கூறியிருப்பதாகும். 400 ஆடல்

மகளிருக்குரிய தளிச்சேரி வீடுகள் பற்றிப் பேசுவது ஒரு கல்வெட்டுதான். இந்த ஒரு கல்வெட்டே மூன்று பகுதிகளாக 73 வரிகளில் அமைந்துள்ளது.

'தளிச்சேரிகள் கோயிலின் வெளியே வடமேற்குப் பகுதியில்தான் திகழ்ந்திருக்கவேண்டும்' என்று திரு. பாலசுப்ரமணியன் எளிதில் ஊகிக்க வழிகாட்டியவர்களாகத் திரு. இரா. நாகசாமி, திரு. வி. வெங்கையா ஆகியோர் பெயர்கள் நூலில் சுட்டப்பட்டுள்ளன. 'இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகள் பெரும்பாலும் அச்செய்தி களுக்குரிய இடங்களிலேயே காணப்பெறுவதாக இவ்விருவரும் கண்டுள்ளனர்' எனக்கூறும் திரு. பாலசுப்ரமணியன் பிள்ளையார் நிவந்தக் கல்வெட்டுகள் பிள்ளையார் கோயிலிலும் சண்டிகேசருக் குரியது சண்டீசர் கோயிலிலும் இராஜராஜேச்சுரத்துப் பரமசாமிக் குரியவை கருப்பகிரகத்தின் சுவர்களிலுமே காணப்படுவதாகச் சான்றுகள் தருகிறார். ஆனால் உண்மைகள் வேறுவிதமாக உள்ளன.

பிள்ளையார்களுக்கான நிவந்தங்களைக் குறிக்கும் ஏழு கல்வெட்டு களுள் (SII.2 ins. 36, 37, 85, 86, 87, 88, 89)நான்கு மேற்குத் திருச்சுற்று மாளிகைத் தூண்களிலும் இரண்டு அங்குள்ள கோட்டங்களிலும் மற்றொன்று உத்திரத்திலும் உள்ளன. இக்கல்வெட்டுகள் பரிவார ஆலயத்துப் பிள்ளையார், ஆலயத்துப் பிள்ளையார் என்று இரண்டு பிள்ளையார்களைக் குறிக்கின்றன. பரிவார ஆலயத்துப் பிள்ளையார் திருச்சுற்றில் இருந்ததாகவும் ஆலயத்துப் பிள்ளையார் மையக் கோயிலில் இருந்ததாகவும் சிலர் கருதுகின்றனர் (SII.2, பக்.407). திருச்சுற்றின் தென்கிழக்கில் இப்போதைய பிள்ளையார் கோயில் இருக்கும் இடத்திலேயே இராசராசன் காலத்துப் பிள்ளையார் திருமுன் இருந்ததென்று கூறும் திரு. இரா. நாகசாமி, அதையே பரிவார ஆலயத்துப் பிள்ளையாராகக் கொள்கிறார் (இராஜராஜன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1978, பக்.7). பரிவார ஆலயத்துப் பிள்ளையாரே இங்குதான் இருந்தாரென்றால், ஆலயத்துப் பிள்ளையார் கோயிலுக்குள்தான் இருந்திருக்கவேண்டும். இந்நிலையில் இவ்விரு பிள்ளையார்களுக்கான நிவந்தக் கல்வெட்டுகள் ஏழும் பிள்ளையார் திருமுன்களாக அறிஞர்கள் கருதும் இடங்களில் இல்லாது மேற்குத் திருச்சுற்றின் தூண்களிலும் அங்குள்ள கோட்டங்களிலும் காணப்படுவது நோக்கப் 'பிள்ளையார் நிவந்தக் கல்வெட்டுகள் பிள்ளையார் கோயிலிலேயே எழுதப் பெற்றுள்ளன' என்னும் திரு. பாலசுப்ரமணியனின் கூற்று தவறாதல் காண்க.

'இராஜராஜேச்சுரத்துப் பரமசாமிக்குரியவை கருப்பகிரகத்தின் சுவர் களிலுமே காணப்படுகின்றன,' என்னும் திரு. பாலசுப்ரமணியனின் கூற்றில் இரண்டு பிழைகள் உள்ளன.

இராஜராஜீசுவரத்தின் கருவறைக் கல்வெட்டுகளுள் ஒன்று தவிரப் பிற அனைத்துமே ஆதிதளத்தின் துணை மற்றும் தாங்குதளப்

பகுதிகளிலேயே காணப்படுகின்றன. பிற்காலக் கல்வெட்டொன்று கருவறையின் தென்கிழக்கு அரைத்தூணொன்றில் வெட்டப் பட்டுள்ளது. கட்டடத்தின் இப்பகுதிகளைச் சுவரென்பது மரபல்ல.

திரு. பாலசுப்ரமணியன் கூற்றுப்படி இவற்றைச் சுவராகக் கொண்டாலும் பரமசாமியின் நிவந்தக் கல்வெட்டுகள் கருவறைச் சுவர்களில்(?) மட்டும் இடம்பெறவில்லை. கருவறையின் முன்னாலுள்ள மண்டபங்களின் சுவர்களிலும் (?) காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாது இராஜராஜீசுவர வளாகத்தின் பல இடங்களிலும் இப்பரமசாமியின் நிவந்தக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காண்க.

i) இராஜராஜீசுவரம் உடையாருக்கான திருவிளக்குக் கல்வெட்டு சுற்று மாளிகை வடசுவரின் புறத்தே உள்ளது.

ii) இராஜராஜீசுவரம் உடையார்க்குத் தரப்பட்ட திருப்பதியம் பாடும் பிடாரர்கள் மற்றும் நிவந்தக்காரர்கள்பற்றிப் பேசும் கல்வெட்டு களும் சுற்றுமாளிகை வடசுவரின் புறத்தே உள்ளன.

iii) இராஜராஜீசுவரரின் திருமஞ்சன நீரிலிடும் பூ, வேர் பற்றிய நிவந்தக் கல்வெட்டு இரண்டாம் கோபுர வாயிலில் உள்ளது.

iv) இராஜராஜீசுவரம் உடையார்க்குத் தரப்பட்ட வீரப்பட்டம், திருப்பட்டி கைகள் பற்றிய மிக நீண்ட கல்வெட்டு சண்டேசுவரர் கோயிலின் கிழக்கு, வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் காணப்படுகிறது.

'இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகள் பெரும்பாலும் அச்செய்தி களுக்குரிய இடங்களிலேயே காணப்பெறுகின்றன' என்று இவர் எடுத்துக்காட்டும் கூற்றும் பிழையானதே.

**சில சான்றுகள்**

i) இராஜராஜீசுவரம் உடையார்க்குத் தரப்பட்ட வீரப்பட்டம், திருப்பட்டிகைகள் பற்றிய மிக நீண்ட கல்வெட்டு சண்டேசுவரர் கோயிலில் காணப்படுகிறது.

ii) திசைக்காவலர் திருமுன்களுக்குத் தரப்பட்ட தூபிக்குடங்கள் பற்றிய கல்வெட்டு இரண்டாம் கோபுர வாயிலில் உள்ளது.

iii) இராஜராஜீசுவரம் உடையார் கோயிலில், இராசராசராலும் அவர் தேவியராலும் அலுவலர்களாலும் எழுந்தருளுவிக்கப்பெற்ற பல்வேறு செப்புத்திருமேனிகள் மற்றும் அவற்றிற்கான நிவந்தங்கள் பற்றிய பல கல்வெட்டுகள் சுற்றுமாளிகைத் தூண்கள் மற்றும் கோட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

இவையனைத்தும் நோக்கத் 'தளிச்சேரிகளின் இருப்பிடம்' பற்றிய திரு.பாலசுப்ரமணியனின் 'எளிதான ஊகம்' ஏற்புடையதல்ல என்பது தெளிவாதல் காண்க.

43. நாகபட்டினம், காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஊர்ப்பெயர்கள் கல்வெட்டில் நாகபட்டனம், காவிரிப்பூம்பட்டனம் என்றே குறிக்கப் பட்டுள்ளன.

43A. இவ்வூரின் பெயரும் பெண்ணின் பெயரும் கல்வெட்டுத்தொகுதியில் இடம்பெறவில்லை. SII.2, ins.66, third section, வரி 7.

43B. இப்பெண்ணின் பெயர் கல்வெட்டுத் தொகுதியில் இடம்பெறவில்லை. SII.2, ins. 66, second section, வரி 19.

44. முதல் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1954, பக்.104.

45. 'இப்பெண்டிர் பெயர்களுள் இவர் வல்ல கூத்துக் காரணமாகப் பெற்றன சில' என்கிறார் திரு. வே. மகாதேவன். சிவபாதசேகரனின் தஞ்சைக் கல்வெட்டுகள், காஞ்சி காமகோடி பொன்விழாக் கமிட்டி வெளியீடு, 1985, கல்வெட்டெண் பதினேழிற்கான முன்னுரை. (இந்நூலின் பிற்பகுதியில் பக்க எண்கள் இடம்பெறவில்லை)

ஆடலோடு தொடர்புடைய பெயர்களாக இக்கல்வெட்டில் இடம் பெற்றிருக்கும் பெயர்களே இவ்வளவுதான். இவற்றுள் எந்தப் பெயரும் கூத்தின் வகைமை மற்றும் வல்லமை காரணமாகக் கொள்ளப்பட்ட அல்லது இடப்பெற்ற பெயராக அமைந்தில்லாமை காண்க.

46. நான்காம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1957, பக்.564.

47. ஒன்பதாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1969, பக்.161.

48. மேலது, பக்.71, 72.

49. மேலது, பக்.6.

50. அர. அகிலா, இரா. லலிதாம்பாள், திருவிசலூர்க் கல்வெட்டுகள், வரலாறு 3, அரையாண்டு ஆய்விதழ், ஆகஸ்டு 1994, பக்.27.

'காஞ்சி காமாட்சி பெயரால் ஒருத்தி நக்கன் காமகோடி எனப்பட்டுள்ளாள்' எனும் திரு. வே. மகாதேவனின் விளக்கம் சரியானதல்ல. மு.கு.நூல்.

51. கன்னரதேவனென்ற பெயரில் முதலாம் ஆதித்தருக்கு ஒரு மகன் இருந்ததாகத் திரு. பண்டாரத்தார் குறிப்பிடுகிறார். தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1974, பக்.32. ஆனால் இப்பெயர் இராட்டிர கூட அரசர் கன்னரதேவரைக் குறிப்பதாகத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி குறிப்பிடுகிறது. SII.2, p.259. இது சரியன்று. இந்தக் கன்னரதேவர்தான் சோழவேந்தர் இராசாதித்தரின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர். இவர் பெயரைச் சோழநாட்டுப் பெண் கொண்டிருந்ததாகக் கொள்வது பொருந்துவதாக இல்லை.

51A. 'இராஜராஜன் மீது ஆறாத காதல் கொண்டிருந்த ஒருத்தி இராஜராஜி என்றே பெயர் கொண்டிருந்தாள்' என்கிறார் திரு. இரா. நாகசாமி. மு.கு.நூல், பக்.16. தளிச்சேரிக் கல்வெட்டில் காணப்படும் நானூறு

பெண்களுள் இராஜராஜி என்ற பெயருடையவர்கள் இருவர் உள்ளனர். ஒருவர் தெற்குத் தளிச்சேரியின் தென்சிறகுப் பகுதியில் அறுபத்து மூன்றாம் எண் வீட்டில் குடியிருந்த அம்பர் மாகாளத்து இராஜராஜி. மற்றொருவர் வடக்குத் தளிச்சேரித் தென்சிறகுப் பகுதியில் எண்பத்திரண்டாம் வீட்டில் குடியிருந்த திருவிடைமருதூர் இராஜராஜி. இந்த இரண்டு இராஜராஜிகளில் காதல் வயப்பட்ட இராஜராஜியாகத் திரு. இரா. நாகசாமி யாரைக் கருதுகிறார் என்று தெரியவில்லை. பெயரைக் கொண்டிருந்தாலே, அப்பெயருக்குரியவர்களிடம், பெயர் வைத்திருந்தவர்கள் காதல்வயப்பட்டிருந்ததாகக் கருதலாமென்றால், ஆதித்தி, வீரசோழி, அறிஞ்சி, கன்னரதேவி, சுந்தரசோழி, அருமொழி என்பாரும் அந்தந்தப் பெயருக்குரிய மன்னர்கள் மீது ஆறாத காதல் கொண்டவராகிவிடுவர். நட்டவம் செய்தவர்களுள் ஒருவரான அபிமான தொங்கன் முதலாம் இராசராசரின் தேவியருள் ஒருவரான அபிமான தொங்கியின் பெயரைக் கொண்டிருந்தார். இதுகொண்டு இவர் அரசி அபிமானதொங்கியின் மீது ஆறாத காதல் கொண்டிருந்தார் என்று சொல்வது சரியாகுமா?

52. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், மு.கு.நூல், பக்.133. அடிக்குறிப்பும் காண்க.

53. மு. நளினி, சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள், வரலாறு 1, அரையாண்டு ஆய்விதழ், ஆகஸ்டு 1993, பக்.69.

54. SII. 19, ins. 212.

55. காடுகாள் SII.2, ins.5; SII.3, ins.151A.

பொன்னாலமந்தாள் – ச. கிருஷ்ணமூர்த்தி, சித்தலூர்க் கல்வெட்டுகள், ஆவணம் 2, ஏப்ரல் 1992, பக்.19.

56. அரபுரத்து நிகளங்கி ஈசுவரத்தைச் சேர்ந்த பெண் நல்லூர் என்றும் நன்னிலம் திருமேற்றளிப் பெண் ஆமாத்தூர் என்றும் நியமத்து அரிகுலகேசரி ஈசுவரத்துப் பெண் வடவாயிலென்றும் பெயர் கொண்டிருந்தனர். திரு. சுந்தரேச வாண்டையார் இவர்தம் பெயர்களை யெல்லாம் ஊர்களாகவே கொண்டு, இவ்வூர்களிலுள்ள தளிச்சேரிகளி லிருந்தும் பெண்கள் இராஜராஜீசுவரம் வந்ததாக எழுதியுள்ளார். தலங்களின் வரலாற்றுக் குறிப்பு, ஒன்பதாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1969, பக்.20.

57. திருவேங்கடத்தின் மற்றொரு பெயரான திருமலை என்னும் பெயரிலும் ஓர் ஆடற்பெண் இருந்தார்.

58. திரு.வே. மகாதேவன் 112 தளிச்சேரிகள் என்கிறார். இவர் பட்டியலில் ஒன்பது இடங்கள் தவறுதலாக இரண்டு முறையும், ஓர் இடம் மூன்று முறையும் இடம் பெற்றுள்ளன. மு.கு. நூல், ஊர், கோயில், தளிச்சேரி – பெயர்ப் பட்டியல் காண்க.

59. இதைத் தங்கத்தார் தளி என்று குறித்துள்ளார் திரு. வே. மகாதேவன். மு.கு. நூல், முன் குறித்த பட்டியல் (மு.கு.ப.).

60. திரு. வே. மகாதேவன் நிறைமதி ஈசுவரத்தை ஓரிடத்தில் கோயிலாகவும் மற்றோரிடத்தில் ஊராகவும் பதிவு செய்துள்ளார். மு.கு.நூல், மு.கு.ப.

61. இக்கோயிலைத் திரு.வே. மகாதேவன் ஊராகக் கொண்டுள்ளார். மு.கு.நூல், மு.கு.ப.

62. வடக்கில் தளிச்சேரி வடசிறகின் நாற்பத்து நான்காம் வீடு, நன்னிலத்து திருஅமலீசுவரத்துப் பெண்ணுக்கும் நாற்பத்தைந்தாம் வீடு, நன்னிலத்துத் திருமேற்றளிப் பெண்ணுக்கும் தரப்பட்டுள்ளன. அமலீசுவரத்தை, நன்னிலத்து அமலீசுவரம் என்றழைக்கும் கல்வெட்டு, திருமேற்றளியை 'இவ்வூர்த் திருமேற்றளி' என்று குறிப்பிடுகிறது. நாற்பத்தாறாம் வீட்டிற்குரிய பெண்ணைச் சுட்டும்போது ஊர்ப்பெயரோ, 'இவ்வூர்' என்ற குறிப்போ இல்லாது திருஅமலீசுவரத்துப் பெண் என்று மட்டுமே அறிமுகப்படுத்துகிறது. நன்னிலம், பாச்சில் என்னும் இரண்டு ஊர்களிலும் திருஅமலீசுவரம் என்ற பெயரில் கோயில்கள் உள்ளதாகக் கல்வெட்டு கண்காட்டுவதால் இந்த அமலீசுவரம் எந்த ஊருக்குரியது என்பதை உறுதியாகச் சொல்லமுடியவில்லை.

63. திருவாரூர்க் கோயில்கள் மற்றும் அதன் ஊர்ப்பகுதியிலிருந்து இராஜராஜீசுவரத்திற்கு வந்த தளிச்சேரிப் பெண்களின் எண்ணிக்கை ஐம்பதாகும். ஆனால் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் ஐம்பத்தொன்று என்றும் திரு. எஸ். பொன்னுசாமி நாற்பத்து நான்கு என்றும் குறிப்பிட்டுள்ளனர். குடவாயில் பாலசுப்ரமணியன், திருவாரூர்த் திருக்கோயில், பக்.116–119. S. Ponnusamy, Sri Thyagaraja Temple, Thiruvarur, State Department of Archaeology, 1972, p.31.

64. இரா. கலைக்கோவன், அப்பர் பாடிய ஆறை வடதளி – கட்டுரை, கலை வளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு, 1984, பக்.9–26.

65. 'பெருந்திருக்கோயிலினுள் உள்ள பூங்கோயில் பெரிய தளி என்றும் மற்றும் அருமொழிச்சரம், பிரம்மீச்வரம், உலகீச்வரம் என்ற திருக்கோயில்களும் இருந்தமையைத் தஞ்சைக் கல்வெட்டுகள் கூறுகின்றன'. குடவாயில் பாலசுப்ரமணியன், திருவாரூர்த் திருக்கோயில், பக்.170.

திரு. பாலசுப்ரமணியன் இந்தக் கூற்றிற்கு எந்த அடிக்குறிப்பும் தரவில்லை. 'தஞ்சைக் கல்வெட்டுகள்' என்று பொதுப்படக் கூறியிருப்பது குழப்பமூட்டும் நிலையாகும். என்றாலும் இவர் கூறும் கோயில்களின் பெயர்கள்கொண்டு, இவர் குறிப்பிடுவது தளிச்சேரிக் கல்வெட்டே எனக் கொள்ளலாம். உண்மை அதுவாயின் இவர் கூற்றின் முதற்பகுதி முற்றிலும் பிழையாகும். தளிச்சேரிக் கல்வெட்டு எவ்விடத்திலும் பூங்கோயிலைப் பெரிய தளி என்று குறிக்கவில்லை. திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி என்ற சொல்லாட்சி மட்டுமே

காணப்படுகிறது. தளிச்சேரிக் கல்வெட்டில் இல்லாத ஒரு செய்தியை இருப்பது போலத் தம் நூலில் திரு. *குடவாயில் பாலசுப்ரமணியன்* கூறியிருப்பது சரியன்று.

66. S. Ponnusamy, op.cit., p.32. குடவாயில் பாலசுப்ரமணியன், திருவாரூர்த் திருக்கோயில், பக்.170.

67. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், மு.கு.நூல், பக்.133; அடிக்குறிப்பும் காண்க.

68. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர், பக்.97, 113, 116.

69. இரா. கலைக்கோவன், இவரலாது இல்லையோ பிரானார் – கட்டுரை, எழில் கொஞ்சும் எறும்பியூர், கழக வெளியீடு, 1987, பக்.89–123.

கோயிலின் பெயரான ஆச்சிராமம் 'திரு' என்னும் அடை கொண்டு திருவாச்சிராமமாக அறியப்பட்டது. இதுவே நாளடைவில் சுருங்கித் திருவாச்சியாகித் தற்போது 'ச்'சையும் இழந்து திருவாசியென்று ஊரின் பெயராக மாறியுள்ளது. தளிச்சேரிக் கல்வெட்டின் காலத்தில் இவ்வூர் பாச்சிலின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. அதனால்தான் 'பாச்சில் திருவாச்சிராமம்' என்று கல்வெட்டு இக்கோயிலைக் குறிக்கிறது.

70. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், கழக வெளியீடு, 1989, பக்.96–122.

71. மேலது, பக்.123–165.

72. திரு. வே. மகாதேவனின் ஊர்ப்பெயர் பட்டியலில் 'மட்டை' இடம்பெறவில்லை. ஆனால் அதற்கான இடம் எண்ணிட்டுப் பெயரின்றி வெறுமையாக விடப்பட்டுள்ளது. மு.கு.நூல், மு.கு.ப., எண் 23. திரு. சுந்தரேச வாண்டையார் மட்டைத் தென்தளியைத் திருவாரூர்க் கோயில்களுள் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டுள்ளார். மு.கு.நூல், பக்.22.

73. தென்தளியும் திரு.வே. மகாதேவனின் ஊர்ப்பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை. ஆனால் அதற்குரிய இடம் எண்ணிடப்பட்டு வெறுமையாக விடப்பட்டுள்ளது. மு.கு. நூல், மு.கு.ப., எண்62.

74. இரா. கலைக்கோவன், வாடிக்கொண்டிருக்கும் வட கைலாசம் – கட்டுரை, காட்டுக்குள் ஒரு கலைக்கோயில், கழக வெளியீடு, 1987, பக்.54–66.

75. பசுவதிசேரியைத் திரு. வே. மகாதேவன் கோயிலாகக் கொண்டுள்ளார். மு.கு. நூல், மு.கு.ப., எண்7.

75A. திருவிடைமருதூர் தளிச்சேரியிலிருந்து பதினேழு பெண்கள் வந்துள்ளனர்.

76. திருவிடைமருது, திருமறைக்காடு, திருக்கொள்ளம்புதூர், திருவையாறு, தலையாலங்காடு, திருவாரூர், திருவேதிகுடி, திருச்சோற்றுத்துறை, திருத்தெங்கூர், கடம்பூர், திருநெய்த்தானம், பழையாறு, திருப்பழனம்,

மண்ணி நகரம், பழுவூர், பந்தணநல்லூர் ஆகிய பதினாறு ஊர்களும் பதிகச் சிறப்புடைய கோயில்களைப் பெற்றிருந்தன.

77. இவ்வூர்ப்பெயரைத் திரு. வே. மகாதேவன் கோயில் பெயராகக் கொண்டுள்ளார். மு.கு.நூல்., மு.கு.ப., எண்12.

78. முதல் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1953, பக்.383. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1961, பக்.184.

79. SII.14, ins.3.

80. ARE 385 - 1924; 464-1918.

81. SII. 13, ins. 153, 154.

82. வை. சுந்தரேச வாண்டையார், மு.கு.நூல், பக்.21.

82A. SII.4, ins.827.

82B. இக்கல்வெட்டு இக்கட்டுரையாசிரியர்களால் 14.11.95 அன்று கண்டு பிடிக்கப்பட்டது. Indian Express, dt. 19.11.95.

82C. இரா. கலைக்கோவன், பழுவூர்ப்புதையல்கள், பக்.107.

82D. மேலது, பக்.21—22.

82E. ARE 212 - 1912.

82F. ARE 211 - 1912.

83. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இரண்டாம் பாகம், பக்.39.

84. தமிழ் லெக்சிகன், தொகுதி 4, பகுதி 1, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, பக்.2252.

85. மேலது, பக்.2283.

86. மேலது, பக்.2253.

87. மேலது, பக்.2283.

88. மேலது, பக்.2253.

89. 'Men who receive the allowance, stipendiaries' என்று இச்சொல்லுக்குப் பொருள்விளக்கம் தந்துள்ளது கல்வெட்டுத் தொகுதி. SII.2, p.278; See Foot note No.2.

90. A Sanskrit English Dictionary, Sir Monier Monier Williams, 1993, p.350.

91. SII.3, ins.43.

92. SII.3, ins.151A.

92A. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் இந்த எண்ணிக்கையை 258 என்று கூட்டிச் சொல்லியிருக்கிறார். தஞ்சாவூர், பக்.270.

93. 'அனைத்துப் பணியாளர்களின் ஊரும் பெயரும் (இக்கல்வெட்டில்) பதிவு செய்யப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்' என்னும் திரு.

குடவாயில் பாலசுப்ரமணியனின் கூற்று முற்றிலும் தவறாகும். தஞ்சாவூர், பக்.270.

93A. SII.2, ins.25.

94. இக்கல்வெட்டால் தெரியவரும் தெரிந்த வலங்கை வேளைக்காரப் படைகள் (தெ.வ.வே.படை).

i) அழகிய சோழத் தெ.வ.வே.படை.

ii) சத்திரியசிகாமணி தெ.வ.வே.படை.

iii) சத்ருபுஜங்கத் தெ.வ.வே.படை.

iv) இராஜகண்டியபத் தெ.வ.வே.படை.

v) இராஜராஜத் தெ.வ.வே.படை.

vi) அரிதுர்க்கலங்கனத் தெ.வ.வே.படை.

vii) மூத்த விக்ரமாபரணத் தெ.வ.வே.படை (கல்வெட்டுத்தொகுதியில் இப்படை மூர்த்த விக்ரமாபரணத் தெ.வ.வே. படை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. SII.2, ins 66, third section, வரி 12. திரு. இரா. நாகசாமியும் அதுபோலவே குறித்துள்ளார். மு.கு. நூல், பக்.18.)

viii) இரணமுக பீமத் தெ.வ.வே படை.

ix) விக்ரமாபரணத் தெ.வ.வே படை.

x) இளைய இராஜராஜத் தெ.வ.வே. படை.

95. a) SII.2, ins.66, third section வரி 10.

b) இரா. நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1969, பக்.90.

c) வே. மகாதேவன், மு.கு.நூல், க.எண்17, third section, வரி 10.

96. கண்டி காளி என்று கல்வெட்டுத் தொகுதியும் அதைப் பின்பற்றி பிற பதிப்புகளும் பெயரைப் பிழையாகக் குறித்துள்ளன.

97. திருச்சிராப்பள்ளி முசிறி சாலையிலுள்ள திருவாசி மாற்றுரை வரதீசுவரர் கோயிலிலிருந்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டொன்று இக்கோயிலில் பணியாற்றிய தளிப்பெண்களையும் அனுக்கர்களையும் காந்தர்வர்களையும் அடையாளம் காட்டுகிறது. மு. நளினி, வே. கல்பகம், இரா. கலைக்கோவன், திருவாசி மாற்றுரை வரதீசுவரர் கோயில் கல்வெட்டுகள், ஆவணம் 1, அக்டோபர் 1991, பக்.29—32.

98. SII.2, ins.11.

99. திரு. சுந்தரேச வாண்டையார் காந்தர்வர் ஐவர் என்று குறித்துள்ளார். மு.கு. நூல், பக்.23.

திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் காந்தர்வர்கள் எழுபத்தைந்து பேர் என்று குறித்துள்ளார். தஞ்சாவூர், பக்.270. 'காந்தர்வரில் எழுபத்தைய் வனால்' என்றுள்ள கல்வெட்டுத் தொடரைக் 'காந்தர்வர்' எழுபத்தைவர் என்று புரிந்துகொண்டதே இதற்குக் காரணமாகும். எழுபத்தைய்வன் ஓர் ஆளின் பெயராகக் கல்வெட்டில் பயின்று வந்துள்ளது.

பக்கவாத்தியர் ஐவரைச் சுட்டிமுடித்ததும் அடுத்த தொகுதியைக் குறிப்பதுபோல் 'காந்தர்வ்வரில்' என்ற குழுச்சொல்லுடன் கல்வெட்டு தொடர்கிறது. முதற்பெயராக எழுபத்தைய்வன் பெயர் இடம் பெற்றுள்ளது. இரண்டாம் பெயராக இராஜகண்டியபத் தெரிந்த வலங்கை வேளைக்காரருள் வரகுணன் சீராளன் பெயர் தரப்பட்டுள்ளது. மூன்றாம் பெயருக்கு முன்னால் மீண்டும் 'காந்தர்வ்வரில்' என்ற குழுச்சொல் காணப்படுகிறது. நான்காவதாக தஞ்சாவூர் பிரமகுட்டத்து உவைச்சன் அய்யாறன் கண்டராச்சன் பெயர் உள்ளது. தொடர்ந்து வரும் பெயர்கள் பதினொன்றும் இராஜராஜீசு வரத்தில் அப்பெயர்களுக்குரியவர்கள் அமர்ந்த பணி சுட்டாது, பங்கு மட்டுமே சுட்டி அமைந்துள்ளன. ஒரே கருவி அல்லது தொழில் சார்ந்த பலரைக் குறிக்கும்போது கல்வெட்டு 'மேற்படி' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. ஆனால் இப்பதினொருவர் பெயர் முன்னும் 'மேற்படி' என்ற அச்சொல் இல்லை. 'காந்தர்வ்வரில்' என்ற தொழிற்பெயர் இல்லாது குறிக்கப்படும் வரகுணன் சீராளன், உவைச்சன் அய்யாறன் கண்டராச்சன் பெயர்களின் முன்னும் 'மேற்படி' என்ற அச்சொல் இல்லை. இந்நிலையில் இவர்களை எத்தொழில் செய்தவராய்க் கொள்வதென்ற கேள்வி பிறக்கிறது. கல்வெட்டில் காந்தர்வருக்கு முன்னால் சுட்டப்பட்டுள்ள பக்கவாத்தியர் குழு ஐவருடன் முடிகிறது. பின்னால் சுட்டப்பட்டுள்ள திருவாய்க் கேள்விகள் குழுவும் தெளிவாகத் தொடங்குகிறது. இடையிலுள்ள இப்பதினைந்து பேரையும் பக்கவாத்தியருடன் சேர்க்கவியலாது. இவர்கள் திருவாய்க்கேள்விகளாகவும் ஆகார். இரண்டாவது முறையாக 'காந்தர்வ்வரில்' என்று வெட்டப்பட்டிருக்கும் குழுச் சொல்லைக் கூறியதுகூறலாகக் கொண்டால் இப்பதின்மூன்று பேரையும் காந்தர்வராகவே கொள்ளமுடியும். கல்வெட்டின் பிற்பகுதியில் நாயகம் செய்தவர்களைச் சுட்டும்போது அவர்கள் தளிப்பெண்களுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகம் செய்ததாகக் கூறப்படுவதால், இப்படிக் கொள்வது பொருந்துவதாகவே அமையும். இக்கட்டுரையாசிரியர்கள் எழுபத்தைய்வன் தொடங்கி உத்தமன் கூத்தன் உள்ளிட்ட பதினை வரையும் காந்தர்வராகவே கொண்டுள்ளனர்.

100. தென் மாவட்டங்களில் சிறப்பாக விளங்கும் களரிப்பயிற்றுக்கும் இவர் பெயருக்கும் தொடர்பிருக்கலாம். இது குறித்து ஆர்வமுடையவர்கள் ஆராய்வது பயன்தரும்.

101. i) திருமதி. ஞானா குலேந்திரன் 'பன்னிருவர் நடனம் கற்றுக் கொடுக்கக் கோயிலில் நிவந்தம் வழங்கி வைக்கப்பட்டிருந்தனர்' என்று ஓரிடத்திலும் 'நட்டுவ ஆசான்கள் பன்னிருவர்' என்று மற்றோர் இடத்திலும் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழர் ஆடலில் இசை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1990, பக்.43,5.

ii) திரு. குடவாயில் பாலசுப்ரமணியனும், 'நட்டுவம் செய்ய 12 நாட்டிய ஆசார்யர்களும்' என்று தம் நூலில் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். தஞ்சாவூர், பக்.270.

iii) திரு. வை. சுந்தரேச வாண்டையாரும் (பக்.23) திரு. வே.மகாதேவனும் அறுவர் என்கின்றனர். மு.கு. நூல்கள்.

102. 'நாடகமாராயன்' என்று கல்வெட்டில் இடம்பெற்றிருக்கும் இச்சொல்லை 'நாடகமய்யன்' என்று கல்வெட்டுத் தொகுதி தவறாகப் பதிப்பித்துள்ளது. SII.2, ins.66, third section, வரி 9, p.274.

இந்நாடகமாராயன் பாட்டிற்காகப் பணியமர்த்தப்பட்டிருந்தும் திருமதி. ஞானா குலேந்திரன், 'ஆடலை நெறிப்படுத்தி நட்டுவாங்கம் செய்வோர் நாடகமையன்' என்று *அழைக்கப்பெற்றதாகப்* பிழைபடக் குறித்துள்ளார். மேலும், 'ஒரு சிலர் தலைக்கோலாசான், நட்டுவ ஆசான்' என்றும் அழைக்கப்பெற்றதாகவும் கூறுகிறார். மு.கு. நூல், பக்.5. இதற்குரிய அடிக்குறிப்பாக '*SII., No.66, Line 441*' என்பதைத் தந்திருக்கிறார். SII எந்தத் தொகுதியென்று எண்ணிடவில்லை. இருந்தபோதும் தளிச்சேரிக் கல்வெட்டே இவர் குறிப்பிடும் 66 ஆம் எண்ணுள்ள கல்வெட்டென்பதால் இரண்டாம் தொகுதியைப் பார்த்தோம். அதில், இக்கல்வெட்டின் ஆங்கில மொழியாக்கப்பகுதியில் தான் 441ஆம் வரி உள்ளது. தமிழில் கல்வெட்டின் மொத்த வரிகளோ எழுபத்துமூன்றுதான். திருமதி. ஞானா குலேந்திரன் கல்வெட்டுப் பாடத்தைப் பார்க்காமல் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பார்த்துள்ளார். அவர் குறித்திருக்கும் 441 ஆம் வரி, 'To Satti Ponnan (one of) the same (who belongs) to the Satrubhujamga Terinda - Valangai - Velaikkarar, *three* quarters of a *share*' என்றமைந்துள்ளது. இந்த வரியின் பொருள் 'சத்ருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் சத்தி பொன்னனுக்குப் பங்கு முக்கால்' என்பதாகும். இதில் 'தலைக்கோலாசான்', 'நட்டுவ ஆசான்' என்னும் பெயர்களே இடம் பெறவில்லை. இருந்தும் திருமதி. ஞானா குலேந்திரன் இந்த வரியை அடிக்குறிப்பாகத் தந்திருக்கிறார். தளிச்சேரிக் கல்வெட்டின் எந்தப் பகுதியிலும் தலைக்கோல் ஆசான், நட்டுவ ஆசான் என்னும் சொற்கள் இடம்பெறவில்லை.

103. இசைத்தமிழ்ப் பேரறிஞரும் பாரதிதாசன் பல்கலைக்கழக இசைக்கலைக் களஞ்சிய ஆசிரியருமான திரு. வீ.பா.க. சுந்தரனாருடன் மேற்கொண்ட நேர்முகம்.

103A. திரு. வே. மகாதேவன் ஐவர் என்று தவறாகக் குறித்துள்ளார்.

104. நித்தவிநோத வாத்யமாராயர் என்ற இப்பட்டம் 'ஆடலை நெறிப்படுத்தி நட்டுவாங்கம் செய்வோர்க்கு' வழங்கப்பட்டிருந்ததாகத் திருமதி. ஞானா குலேந்திரன் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். பட்டத்திலுள்ள 'வாத்ய' என்ற சொல்லையாவது அவர் கவனித்திருக்கலாம். மு.கு.நூல், பக்.5.

105. SII.5, ins.579.

106. சி. கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1987, பக்.432. T.N. Subramanian, South Indian Temple Inscriptions, Vol.III, part III, Govt. Oriental Manuscript Library, 1957, p.1481.

107. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் ஐவர் என்று குறிப்பிட்டுள்ளார். தஞ்சாவூர், பக்.270.

108. SII. 23, ins. 264.

109. 'காண, பாட' என்று கல்வெட்டில் தெளிவாக இருக்கும் இச்சொற்களைக் 'கானபாடி' என்று கல்வெட்டுத் தொகுதி பதிப்பித்திருப்பதால், இத்தளிச்சேரிக் கல்வெட்டு பற்றி எழுதியுள்ள அனைவருமே 'கான பாடி' என்றே குறித்துள்ளனர். 'காண, பாட' என்னும் சொற்கள் எத்தகு தொழிலைக் குறிக்கின்றன என்பதை அறியக்கூடவில்லை. இது குறித்த ஆய்வு தொடர்கிறது. காண, பாட ஐவர் இருந்தனர். ஆனால் திரு. வை. சுந்தரேச வாண்டையார் மூவர் என்று குறித்துள்ளார். மு.கு. நூல், பக்.23.

110. ஆறாம் திருமுறை, பக்.211.

111. திருமதி. ஞானா குலேந்திரன் வங்கியம் வாசிக்க அமர்த்தப்பட்ட மூவரைப் பற்றிக் குறிக்குமிடத்து இதற்குரிய பார்வைக் குறிப்பாகப் பிறைக்குறிகளுக்குள் வரி 415—417 என்று தந்துள்ளார். தளிச்சேரிக் கல்வெட்டின் ஆங்கில மொழிபெயர்ப்புப் பகுதியில் காணப்படும் இவ்வரிகளுள் 415, 416ஆம் வரிகள் பாடகர்களைச் சுட்டுகின்றன. 417ஆம் வரி மட்டுமே வங்கியம் வாசிக்க அமர்த்தப்பட்ட ஒருவரைச் சுட்டுகிறது. பார்வைக் குறிப்பிற்கான வரிகள் 417—419 என்றிருந்திருக்க வேண்டும். மு.கு. நூல், பக்.43.

112. திருமதி. ஞானா குலேந்திரன் வீணை வாசிக்க மூவர் இருந்ததாகத் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். மு.கு. நூல், பக்.5.

113. திரு. வை. சுந்தரேச வாண்டையார் இருவர் என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். மு.கு. நூல், பக்.23.

113A. காந்தர்விகளைப் 'பெண் பாடகர்கள்' என்கிறது கல்வெட்டுத் தொகுதி. கல்வெட்டில் ஆண் பாடகர்களே குறிக்கப்பெற்றுள்ளனர். ஒரு பெண் பாடகர்கூட இக்கல்வெட்டில் இடம்பெறவில்லை. SII.2, ins. 66, p.301, வரி470.

114. SII.12, ins. 42.

115. SII.17, ins.453.

116. மு. நளினி, திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள், வரலாறு 3, அரையாண்டு ஆய்விதழ், ஆகஸ்டு 1994, பக்.33.

117. வீணை ஆதித்தன் மகளை மணந்து கொண்ட சதாசிவன் வீணை ஆதித்தனின் 'சிற்றப்பன்' மகனாகலாம் என்ற கல்வெட்டுத் தொகுதியின் கருத்து ஏற்புடையதன்று. SII.2, ins.66, p.275. See Foot note No.1.

118. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் பத்துப் பேர் என்கிறார். தஞ்சாவூர், பக்.270. திரு. வை. சுந்தரேச வாண்டையார் பதினொருவர் என்கிறார். மு.கு.நூல், பக்.23. திரு.வே. மகாதேவன் ஒருவரை மட்டுமே குறிக்கிறார். மு.கு. நூல், பட்டியல் காண்க. ஆனால் இருந்தவர்கள் பன்னிருவர். தலைமைப் பொறுப்பில், உள்படுவர்களாய் இருவரும் பணியாளர்களாய்ப் பதின்மரும் பணியில் இருந்தனர். உள்படுவான் பங்கைத் தலைமைப் பணியிலிருந்த தொங்கற்பேரையர்கள் இருவரும் தமக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொண்டதாகக் கொள்ளலாம். அதாவது உள்படுவான் பங்கான ஒரு வேலி நிலத்தை இவர்கள் இருவரும் ஆளுக்குப் பத்து மாவாகக் கொண்டனர். (1 வேலி – 20 மா). நட்டவம் ஒன்றுக்கான பங்கை, மல்லன் இரட்டையனும் சித்திரன் கேசுவனும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டாற்போல உள்படுவான் பங்கை இப்பேரையர்கள் இருவரும் பங்கிட்டுக்கொண்டனர்.

119. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் பதின்மர் என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். தஞ்சாவூர், பக்.270.

120. திரு. வே. மகாதேவன் இவர்களை 'வண்ணம் பூசுவோர்' என்று தவறாகப் புரிந்துகொண்டுள்ளார். மு.கு. நூல், க.எண்17ன் பிற்பகுதி.

121. சன்னாலியள் என்ற இச்சொல் பேரகராதியிலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதியிலும் இடம்பெறவில்லை. இச்சொல்லுக்கான பொருளை அறியக்கூடவில்லை. ஆனால் திரு. வே. மகாதேவன் இவர்களைக் 'காவிக்கல் வேலை செய்வோர்' என்று குறித்துள்ளார். மு.கு. நூல், க.எண்17ன் பிற்பகுதி.

122. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் எழுவர் என்று தவறாகக் குறித்துள்ளார். தஞ்சாவூர், பக்.270.

123. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் அறுவர் இருந்ததாகக் கூறுவது பிழையாகும். தஞ்சாவூர், பக்.270.

124. E.I. XX1, p.224.

125. இவர்களைக் 'கோயிலில் நாளோலை தூக்கும் திருக்கள்' என்று கோனேரிராசபுரத்துக் கல்வெட்டு பணி சுட்டிக் குறிக்கிறது. SII.3, part III, ins. 151A.

126. சிலப்பதிகாரம், காதை 5, அடி 44.

127. மணிமேகலை, உ.வே. சாமிநாதையர் பதிப்பு, தியாகராஜ விலாச வெளியீடு, 1931, பக்.330, அடி 40.

128. சிறுபஞ்சமூலம், பா.92.

129. இச்சொல்லைக் கல்வெட்டுத் தொகுதி 'கொலினமை' எனக் குறிக்கிறது. SII.2, ins.66, third section, வரி 16. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் 'கோலிளமை' என்று எழுதுகிறார். தஞ்சாவூர், பக்.270. கல்வெட்டில் உள்ள கோயின்மை என்ற சொல்லுக்குப் பெருமை (Royal Pride) என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி பொருள் தந்துள்ளது. பக்.1192. கோயின்மை செய்தவர் தொழில் அறியக்கூடவில்லை.

129A. திரு. வே. மகாதேவன் நால்வர் என்று குறிப்பிடுகிறார். மு.கு. நூல், மு.கு.ப.

130. காவிதி என்ற சொல் மத்யஸ்தன் என்ற பொருளிலேயே கல்வெட்டுகளில் பயின்றுவந்துள்ளது. முதலாம் இராசேந்திரரின் கரந்தைச் செப்பேடுகள் காவிதிப்பங்கு என்று குறிப்பிடுமிடத்து அப்பங்கிற்குரியவர்களாக மத்யஸ்தர்களையே குறிக்கிறது. Karandai Tamil Sangam Plates of Rajendra Chola I, Ed. by K.G. Krishnan, A.S.I. Publication, 1984, p.190-91.

உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் காணப்படும் பரகேசரிவர்மரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இதை நிறுவுகிறது. இக்கல்வெட்டில் திரிபுவனமாதேவிச்சேரி மத்யஸ்தன் திருவெள்ளறைப் பெருங்காவிதியும் கோதண்டராமச்சேரி மத்யஸ்தன் வானவன் மகாதேவிப் பெருங்காவிதியும் இடம்பெறுகின்றனர். தனிச்சேரிக் கல்வெட்டிலும் காவிதிமை செய்தவர்கள் பெருங்காவிதி என்றே சிறப்புடன் அழைக்கப்பெறுகின்றனர். இவையனைத்தும் நோக்க இக்காவிதிமைப் பணியை மத்யஸ்தர் பணியென்று அய்யத்திற் கிடமின்றி நிறுவலாம்.

131. தய்யான் ஒருவர் என்று கூறும் திரு. வை. சுந்தரேச வாண்டையாரின் கூற்று பிழையானது. மு.கு. நூல், பக்.23.

132. கல்வெட்டில் 'துன்னானுக்கு' என்று முதலில் வெட்டிப் பிறகு 'தய்யானுக்கு' என்று அதைத் திருத்தியுள்ளனர். தய்யான் என்பதே சரியான பாடம்.

133. கல்வெட்டில் 'துன்னான்' என்று வெட்டிப் பிறகு அதைக் 'கன்னாண்' என்று திருத்தியுள்ளனர். இச்சொல்லைக் கன்னானாகக் கொள்வதா

அல்லது துன்னானாகக் கொள்வதா என்ற குழப்பத்திற்கு இடமில்லாத படி 'பெருங்' என்ற முன்னொட்டு உதவுகிறது. இதிலுள்ள 'ங்' பின்னாலுள்ள சொல்லைக் கன்னான் என்று நிறுவுகிறது. கன்னார் பித்தளை வேலை செய்பவர். துன்னான் என்ற சொல் தோல் வினைஞரைக் குறிக்கும். இச்சொல் 'துன்னகாரரும் தோலின் துன்னரும்' என்று சிலப்பதிகாரத்திலேயே ஆளப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

134. திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் இவர்களையும் தச்சாச்சார்யர் களாய்க் கொண்டு, இக்கோயிலில் ஐந்து தச்சாச்சார்யர்கள் இருந்ததாகக் கூறுகிறார். தஞ்சாவூர், பக்.270. இக்கூற்று பிழையாகும். கல்வெட்டு வீரசோழன் குஞ்சரமல்லனை மட்டுமே தச்சாச்சார்யன் என்கிறது.

திரு. இரா. நாகசாமி வீரசோழன் குஞ்சரமல்லனான இராஜராஜப் பெருந்தச்சனோடு இவர்களையும் இணைத்து, இம்மூவருமே இராஜராஜீசுவரத்தைக் கட்டிய சிற்பாசிரியர்கள் என்று கூறியிருப்பதும் சரியல்ல. மு.கு. நூல், பக்.20.

135. SII.3, ins. 151A.

136. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர், பக்.270. திரு.வை. சுந்தரேச வாண்டையார் பாணர் மூவர் என்று குறித்திருப்பதும் பிழையாகும். மு.கு. நூல், பக்.23. கல்வெட்டுத் தொகுதி இவர்களைத் தையற்காரர்களாய் அடையாளம் காட்டுவது பொருந்தாது. SII.2, ins.66, பக்.303, வரி 506.

136A. SII.5, ins.705.

136B. 'ராஜராஜீசுவரம் உடையார்க்குத் திருவாய்க்கேழ்வி செய்த' இராஜகேசரி கோதண்டராமனான ஜயங்கொண்ட சோழக் கடிகைமாராயன் என்னும் இப்பெருமகனார் இக்கோயிலில் திருப்பறை அறைவுக்காகக் கொடையளித்துள்ளார். ஆட்டைப் பெரிய திருவிழா கொடியேற்று நாளன்று திருப்பறையறைவு கேட்பிக்கும் ஐந்து கடிகையார்க்கும் 'ஆடவல்லார் எழுந்தருளும் நாள் இன்று உள்ளிட்டு மூன்று நாள்' என்று திருப்பறையறைவு கேட்பிக்கும் ஐந்து கடிகையார்க்கும் தலைக்கு அரைக்காசு வரும்படியாக இவரது கொடையமைந்தது. SII.2, ins.25.

137. இருவர் என்று திரு. வை. சுந்தரேச வாண்டையார் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். மு.கு. நூல், பக்.23.

'இக்கோயிலில் திருவாய்க்கேழ்வியாக மும்முடிச்சோழ கடிகைமாராயன், ராஜராஜ கடிகைமாராயன், ஜயங்கொண்ட சோழ கடிகைமாராயன் என்பவர்கள் இருந்தனர்' என்று திரு. இரா. நாகசாமி மூவர் பெயர்களை மட்டுமே குறிப்பிடுகிறார். மு.கு. நூல், பக்.9.

138. இத்திருவாய்க்கேள்விகளை 'உடையார் ராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருவாய்க்கேழ்வி செய்யும்' அலுவலர்களாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இறைவன் குறித்த செய்திகளை மக்களுக்கு

அறிவிக்கும் பணி செய்த இவர்களை அந்த அறிவிப்புப் பணி கருதியே 'கடிகை' என்ற சொல்லால் குறித்தனர் போலும்.

139. தலைமைக் கணக்கர்கள் நால்வரும் இவர்தம் கீழ் பணியாற்றிய கணக்கெழுதுவார் எண்மருமாக மொத்தம் பன்னிரண்டு கணக்கர்கள் இக்கோயிலில் பணியாற்றியுள்ளதாகக் கல்வெட்டு கூறுகிறது. ஆனால் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன், 'தலைமைக் கணக்கர் ஒருவரும் கீழ்க்கணக்கர் 7 பேரும்' என்று இவர்களை எண்மராய்க் குறைக்கிறார். தஞ்சாவூர், பக்.270.

திரு. இரா. நாகசாமி, 'செம்பங்குடியான் தன்னிச்சை சதுரவிடங்கன் என்பவன் இந்தக் கோயிலில் கணக்கெழுதுவோர்களில் தலைமை யாகவும் அவனுக்குக் கீழ் எண்மரும் இருந்தனர்' என்று ஒன்பதின்மரை மட்டுமே காட்டுகிறார். மு.கு.நூல், பக்.9.

139A. இவரை 'Superintending goldsmith' என்று கல்வெட்டுத் தொகுதியின் ஆங்கிலப்பகுதி அடையாளப்படுத்துவது சரியன்று. SII.2, ins.66, p.303, வரி 510.

140. 'உடையார் தஞ்சாவூர்ப் பெரும் பண்டாரத்தே அளக்கக் கடவ நெல்' என்ற கல்வெட்டு வரி இதற்குச் சான்றாகவல்லது. SII. 2, ins.28.

141. திரு. வே. மகாதேவன் '29ஆவது ஆட்சியாண்டில் நியமித்த' என்று கூறுவது சரியல்ல. மு.கு. நூல்.

## பின்னிணைப்பு

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி இரண்டில் வெளியாகி யிருக்கும் தளிச்சேரிக் கல்வெட்டின் (க.எண்.66) பாடத்திற்கும் இராஜராஜீசுவரத்திலுள்ள தளிச்சேரிக் கல்வெட்டின் பாடத்திற்கும் உள்ள வேறுபாடுகள் இங்குத் தரப்பட்டுள்ளன. எண், வரிசை எண்ணையும் பிரிவு, பதிப்பிலுள்ள 'செக்ஷன்' என்ற ஆங்கிலச் சொல்லையும் வரி, பதிப்பிலுள்ள வரியையும் குறிக்கின்றன. 'பதிப்பு' என்ற தலைப்பின் கீழுள்ளவை கல்வெட்டுத் தொகுதியில் காணப்படும் பாடம். 'இருப்பு' என்ற தலைப்பின் கீழுள்ளவை கோயிலிலுள்ள கல்வெட்டில் காணப்படும் பாடம்.

| எண் | பிரிவு | வரி | பதிப்பு | இருப்பு |
|---|---|---|---|---|
| 1 | முதல் | 28 | ஆரா அமுது | ஆராவமுது |
| 2 | இரண்டாம் | 2 | நக்கன் நாஞ்சூரி | நக்கன் நாஞ்சூர் |
| 3 | இரண்டாம் | 10 | நக்கன் மருகமாணிக்கம் | நக்கன் மருதமாணிக்கம் |
| 4 | இரண்டாம் | 13 | நக்கன் நம்புகரி | நக்கன் நம்புகழி |
| 5 | இரண்டாம் | 16 | எழுபத்தைஞ்சாம் வீடு - - ந்தளி | எழுபத்தைஞ்சாம் வீடு தெந்தளி |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | இரண்டாம் | 17 | நக்கன் சீலதுளாமணி | நக்கன் தில்லைக்கூத்தி |
| 7 | இரண்டாம் | 19 | எட்டாம் வீடு இவ்வூர் | எட்டாம் வீடு வேளூர் |
| 8 | இரண்டாம் | 19 | நக்கன் . . க்கு | நக்கன் பூதிக்கு |
| 9 | இரண்டாம் | 22 | நக்கன் சோமகோன் | நக்கன் சோழகோன் |
| 10 | இரண்டாம் | 28 | நக்கன் வீரபொகி | நக்கன் வீரப்பாகி |
| 11 | மூன்றாம் | 1 | நக்கன் நம்புகமரி | நக்கன் நம்புகாரி |
| 12 | மூன்றாம் | 2 | நக்கன் அசங்கி | நக்கன் அரங்கி |
| 13 | மூன்றாம் | 7 | தலைவீடு . . . . . | தலைவீடு மிறையிலி |
| 14 | மூன்றாம் | 7 | நக்கன் . . . . . க்கு | நக்கன் ஐயாற்றுக்கு |
| 15 | மூன்றாம் | 7 | நாலாம் வீடு அரபுரத்து | நாலாம் வீடு நந்திபுரத்து |
| 16 | மூன்றாம் | 8 | தங்கத்தார் தளி | நங்கத்தார் தளி |
| 17 | மூன்றாம் | 8 | நக்கன் சுணங்கை | நக்கன் வாணங்கை |
| 18 | மூன்றாம் | 9 | நாடகமய்யனுக்கு | நாடகமாராயனுக்கு |
| 19 | மூன்றாம் | 9 | மெ. . வியம் | மெராவியம் |
| 20 | மூன்றாம் | 10 | கானபாடி | காண பாட |
| 21 | மூன்றாம் | 10 | காலவரில் | காந்தர்வ்வரில் |
| 22 | மூன்றாம் | 10 | ப₃ஹூ . . விடங்கனுக்கு | ப்₃ரஹ்ம விடங்கனுக்கு |
| 23 | மூன்றாம் | 12 | . ள . . க்கு காணியாக | பிள்ளைக்கு காணியாக |
| 24 | மூன்றாம் | 12 | கண்டிகாளி | கண்டிகாரி |
| 25 | மூன்றாம் | 14 | சகடை கொட்டிகளில் . ழி | சகடை கொட்டிகளில் பாழி |
| 26 | மூன்றாம் | 16 | செயதரன் நெத்தானன் | நெயதீரன் நெத்தானன் |
| 27 | மூன்றாம் | 16 | கோலினமை செய்வார் | கோயின்மை செய்வார் |

இந்த இருபத்தேழு பாட வேறுபாடுகளால் நந்திபுரம், மிறையில், வேளூர், தென்தளி போன்ற ஊர்ப்பெயர்களும் பாழி, பூதி, ஐயாறு, அரங்கி, வாணங்கை, தில்லைக்கூத்தி, பிரம்மவிடங்கன் போன்ற ஆள்பெயர்களும் காண பாட, கோயின்மை, காந்தர்வர் போன்ற தொழில் மற்றும் தொழில் சார்ந்த பெயர்களும் மெராவியம் எனும் இசைக்கருவியின் பெயரும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5. பொதுப்பகுதி

## 1. நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூல் | : | திருவதிகை வீரட்டானம் |
| ஆசிரியர் | : | முனைவர் நா. மார்க்சிய காந்தி |
| வெளியீடு | : | அமுதன் பதிப்பகம்<br>ஏ.ஆர்.1, பட்டினப்பாக்கம்,<br>சென்னை — 600 028. |
| பக்கங்கள் | : | 96 |
| விலை | : | ரூ. 15.00 |

'இருபது ஆண்டுகளாக என் நினைவில் நிறைந்து, கோயிலின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு சிற்பமும் என் மனதில் பதிந்து, அதிலுள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்து எழுதிய நூல்'. நூலாசிரியர் 'என்னுரை'யில் இந்நூலை அறிமுகப்படுத்தும் வரிகள் இவை. 'இத்தலத்தைப் பற்றிக் கல்வெட்டு, தலபுராணம் மற்றும் செவிவழிச் செய்திகள் ஆகியவற்றைத் துணையாகக்கொண்டு மிகச் சிறந்த முறையில் ஒரு சிறந்த நூலை உருவாக்கித் தந்துள்ளார்' என்று தம் அணிந்துரையில் இந்நூலாசிரியரைப் பாராட்டியுள்ளார் திரு. நடன. காசிநாதன்.

நூல் பதினொரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நீண்ட வரலாறு, அப்பரும் அதிகையும் என்னும் தொடக்கப் பகுதிகள் திருவதிகையை ஏழாம் நூற்றாண்டுவரை படம்பிடிக்கின்றன. அடுத்தமைந்துள்ள நான்கு பகுதிகள் கோயிலின் கல்வெட்டுகள், சிற்பங்கள், வார்ப்புத் திருமேனிகள், கட்டட அமைப்புப்பற்றிப் பேசுகின்றன. தொடரும் மூன்று பகுதிகள் கோயில் நடைமுறை, விழாக்கள், புராணம் சொல்லப் பத்தாம் பகுதி ஊரைச் சுற்றிக்காட்டுகிறது. இறுதிப் பகுதியில் சமய வரலாற்றில் அதிகையின் இடம் ஆராயப்பட்டுள்ளது.

கையடக்கமான இந்த நூலைத் தம் முதுகலை பட்டயப் படிப்பு ஆய்வாகக் குறிப்பிடும் நூலாசிரியர், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இதை அச்சு வடிவில் கொணர்ந்திருக்கிறார். இந்த இடைவெளிக் காலத்தில் நூலாசிரியர் பெற்ற பயிற்சியும் அநுபவமும் நூலின் அமைப்புமுறையில் பளிச்செனத் தெரிகின்றன.

இலக்கியத் துணையோடு வரலாற்றையும் வடிவங்களையும் நூலாசிரியர் அணுகியிருக்கும் முறை பாராட்டற்குரியது. இந்த நோக்கு 'என்னுரையில்' சொல்லியிருப்பது போல், அவரது ஆசிரியப் பெருந்தகையின் கொடை. அதை நன்கு உள்வாங்கிக்கொண்டு உரிய இடங்களில் சிறக்க வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு நூலாசிரியரின் தனித்திறமையைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

எளிய, இனிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்திக் கோயில் வரலாற்றைச் சுவையோடு சொல்லியிருக்கிறார். வரலாற்றுப் பெட்டகங்கள் பகுதியைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். கல்வெட்டுகளில் நூலாசிரியருக்குள்ள ஆழமான பயிற்சி இப்பகுதியில் பளிச்சிடுகிறது. என்றாலும் சில இடங்கள் பொருள்விளக்கமின்றி அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டாமலிருக்க இயலவில்லை.

'சமுதாயப் பிரிவில் சிலர் சிறப்பிடம் பெற்றிருந்திருக்கின்றனர். கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு ஒன்று இவ்வூர் அரசக்கோன் பெரியான் அரசன் என்று ஒரு சிறப்புப் பட்டம் பெற்றதை இது குறிப்பதாகலாம். அதே கல்வெட்டு இவ்வூர் குடிமக்களில் தொண்டைமான் கோன் செல்வன் வடவாயில் ஒருவனைச் சுட்டுகிறது. குடிமக்கள் என்பது குறிப்பிட்ட ஊரில் காணியுடையரல்லராய் விவசாயப் பணிபுரியும் குடிகள் (கீழ்வாரம் போல) எனப் பொருள் படும்' (பக். 29) என்னும் இப்பகுதியில் நூலாசிரியர் என்ன சொல்ல நினைக்கிறார் என்பதையே விளங்கிக்கொள்ள முடியவில்லை. அதுபோலவே பாடி காவல் அதிகாரிகளின் சொத்துரிமை பற்றிய நூலாசிரியரின் கருத்திற்கும் அவர் தந்திருக்கும் கல்வெட்டு வரிகளே எதிராய் நிற்கின்றன (பக்.26—27).

நூலில் நிறைந்திருக்கும் அச்சுப்பிழைகளுக்குக் கணக்கில்லை. சில இடங்களில் நேர்ந்திருக்கும் சொல்லிழப்புகள் வாக்கியச் சிதைவு களுக்குக் காரணமாகிப் பொருள் குழப்பத்தில் முடிந்துள்ளன. 'கொடைகளை கொடைப் பொருளான முதலியன இவ்வணிகப் பெருஞ்சபை பெற்றுக் கொண்டு முட்டாமல் நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்றல் மரபு' (பக்.24) என்னும் பகுதியைச் சான்றாகக் கூறலாம். கவனத்துடன் மெய்ப்புப் பார்த்திருந்தால் இது போன்ற குறைகளை எளிதாகத் தவிர்த்திருக்கலாம்.

நூலில் கருத்துப் பிழைகளும் பலவாக உள்ளன. அவற்றுள் சிலவற்றையேனும் சுட்டிக்காட்டுவது கடமையாகிறது. வரலாற்றுப் பெட்டகப் பகுதியில் பரகேசரி கல்வெட்டுகள் பற்றி ஆராயும் இடத்தில் (பக்.16), 'முதலாம் பராந்தகன் 'மதிரை கொண்ட' என்ற சீரடையினை முதன்முதலாகத் தன் 16ஆம் ஆட்சியாண்டில்தான் (கி.பி. 923)

கல்வெட்டுகளில் பொறித்துள்ளான். எனவே அவனும் தன்னுடைய 16ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னுள்ள கல்வெட்டுகளில் 'பரகேஸரி' என்று மட்டுமே குறித்திருத்தல் வேண்டும்' என்று கருத்து தெரிவித்துள்ளார். இக்கருத்து முற்றிலும் பிழையானதாகும்.

முதலாம் பராந்தகரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளிலேயே 'மதிரை கொண்ட' என்ற சீரடையைக் காணமுடிகிறது.[1] கீழப்பழுவூர் திருஆலந்துறையார் கோயில் கருவறை மேற்குச் சுவரில் லிங்கோத்பவருக்கு இடப்புறமுள்ள இரண்டு கல்வெட்டுகளும் முதலாம் பராந்தகரின் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுகளில் வெட்டப்பட்டவை. இவையிரண்டுமே பராந்தகரை 'மதிரை கொண்ட' என்ற சீரடையுடன்தான் குறிக்கின்றன.[2]

'பரகேஸரிவர்மன் காலத்திலேயே ஸ்ரீகார்யம் ஆராய்வான் ஒருவனும் குறிக்கப்பெறுகிறான். அரச ஆணைகள் நிறைவேறும் திறனைப் பார்வையிடும் அதிகாரி இவர்' (பக்.25) என்று வரலாற்றுப் பெட்டகங்கள் பகுதியில் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். ஸ்ரீகார்யம் என்ற சொல்லுக்கு நூலாசிரியர் தரும் இந்தப் பொருள்விளக்கம் சரியானதல்ல. நூலாசிரியர் சுட்டும் கல்வெட்டில் குறிக்கப்படும் அலுவலர், கோயிற் செயற்பாடுகளை ஆராய்பவர். கோயிற் கொடைகளைக் குறிக்கும் பல கல்வெட்டுகளில் இது போன்ற ஸ்ரீகார்ய அலுவலர்கள் குறிக்கப்பெறுகிறார்கள். ஸ்ரீகார்யம் என்பதற்குக் 'கோயில் மேலாண்மை'[3], 'முகவர்'[4], 'தெய்வத்திற்கான பணி'[5] என்று பல பொருள்விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இப்பொருள்விளக்கங்களுக்குப் பொருந்துமாறு பல கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

i) 'திருநெடுங்களத்து மகாதேவர்க்கு உத்தமசோழ பிரம்மாதராஜ கன்மி செம்பியன் வடபுறையூர் நாட்டு மூவேந்தவேளாரர்க்காய் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற வெல்வெட்டிக் கோவிந்த பட்டன்'[6] (பரகேசரிவர்மரின் பதினான்காம் ஆட்சியாண்டு — முகவர்).

---

1 ARE 11 - 1931; 157 - 1928.

2 SII vol.5, ins. 680; ARE 231 - 1926.

3 SII vol.2, part IV, p.574; SII vol. 13, p. XII (Management of a Temple).

4 SII vol.19, p. XIII (Agent).

5 சி. கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பக். 165.

6 SII vol.3, ins.140.

ii) 'ஸ்ரீராஜராஜீசுவரம் உடையார்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்'[7] (முதலாம் இராசராசரின் இருபத்தொன்பதாம் ஆட்சி யாண்டு — கோயில் மேலாண்மை, தெய்வத்திற்கான பணி).

iii) 'திருக்காளத்தி மகாதேவர் ஸ்ரீகார்யம் செய்கின்ற வெளிபாக்கிழான் கோயில் மாராயநும்'[8] (முதலாம் இராசேந்திரரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு — கோயில் மேலாண்மை, தெய்வத் திற்கான பணி).

iv) 'திருக்களாஞ்செடி உடையார் கோயில் ஆதி சண்டேசுவர தேவர் திருவருளால் இக்கோயில் ஸ்ரீமாகேசுவர கண்காணி செய்வார் களுக்கும் சிகாரியஞ் செய்வாற்கும் தேவர்கன்ம்மி கோயில்க் கணக்கற்கும்'[9] (கோப்பெருஞ்சிங்கரின் பதினொன்றாம் ஆட்சியாண்டு — தெய்வத்திற்கான பணி).

சிற்பங்களைப் பற்றி எழுதியிருக்கும் பகுதியில் பிழைகள் மலிந்துள்ளன. இதற்குக் காரணம் குறிப்பெடுப்பதில் நேர்ந்த கவனக் குறைவாகலாம். இக்கோயிலின் தென் திருச்சுற்றுமாளிகையிலுள்ள மகிடாசுரமர்த்தினி சிற்பம் மேற்கு நோக்கியிருப்பதாக ஆசிரியர் எழுதியுள்ளார் (பக். 40). ஆனால் சிற்பம் கிழக்குப் பார்வையாக உள்ளது. விமானத்தின் புறச்சுவர்கள் மற்றும் விமான அங்காலயங் களில் இடம்பெற்றிருக்கும் சுதையுருவங்களை விவரித்திருக்கும் இடத்தில் பிழைகள் இல்லாத இடமேயில்லை எனலாம்.

தென்திசையிலுள்ள நாயகர்களுள் ஒருவரான பிட்சாடனரை வண்ணிக்கும் இடத்தில், 'இடக்கரம் ஒன்று மானுக்குத் துளிருட்ட மற்றொன்று மழுவேந்தி இருக்க மற்றொரு இடக்கரம் கபாலம் ஏந்த வலக்கரம் மானினை ஏந்தியுள்ளது' என்று குறிக்கிறார் (பக்.44). நூலாசிரியரின் இக்குறிப்புகளைப் படிப்பவர்கள், பிட்சாடனருக்கு மூன்று இடக்கரங்களும் ஒரு வலக்கரமும் இருப்பதாகவே கொள்வர். ஆனால் இறைவன் இரண்டு வலக்கரங்களும் இரண்டு இடக்கரங்களும் கொண்டுள்ளார். மேலும் நூலாசிரியர் சொல்வது போன்ற கருவி களைப் பிட்சாடனரின் கைகள் ஏந்தியிருக்கவில்லை. அவரது வலக் கரங்களில் முன்கை மானுக்குப் புல் தரும் மெய்ப்பாட்டில் காட்டப்

7 SII vol.2, part II, ins. 26.

8 SII vol. 17, ins. 319.

9 SII vol.12, ins. 166.

பட்டுள்ளது (நூலாசிரியர் இடக்கரம் என்கிறார்). வலப் பின்கையில் உடுக்கை (நூலாசிரியர் வலக்கையில் மான் என்கிறார்). இடக் கைகளில் முன்கை அபயம் காட்டப், பின்கை திரிசூலம் கொண்டுள்ளது (நூலாசிரியர் கபாலமும் மழுவும் இருப்பதாகக் கூறுகிறார்).

இப்பிட்சாடனரின் செவிகளில் நக்ர, மகர குண்டலங்கள் இருப்ப தாகவும் இவரருகே உள்ள குள்ளச் சிறுபூதம் தட்டைத் தாங்கி வருவதாகவும் நூலாசிரியர் எழுதியுள்ளார். பிட்சாடனரின் செவிகளில் பனையோலைக் குண்டலங்களே காட்டப்பட்டுள்ளன. குள்ளச் சிறு பூதம் பாத்திரம் சுமக்கிறது; தட்டல்ல. பிச்சை புகும் பெருமான் அருகில் மூன்று ரிஷிபத்தினியர் அவரழகில் மயங்கி, ஆடை நெகிழக் கரண்டியுடன் நாணி நிற்பதாக நூலாசிரியர் சொல்கிறார். அப்படி யாரையுமே பிட்சாடனரின் அருகில் காணமுடியவில்லை. பிட்சாடனரின் இடப்புறம் தனித்தொகுதியாக மூன்று உருவங்கள் உள்ளன. இவை கிருஷ்ணனும் கோபிகையருமாகும். கிருஷ்ணன் நடுவில் நின்று இருபுறமும் கோபிகையரை, அவர்தம் இடுப்பில் கை வைத்து அணைத்தவாறு காட்சி தருகிறார். நூலாசிரியரின் பார்வைக்கு இவர்களே ரிஷிபத்தினிகளாகத் தோன்றியுள்ளனர் போலும்! நடுவி லிருக்கும் கிருஷ்ணன் தனக்கேயுரிய கொண்டையுடன் ஆண்மகனாக நின்றும் ரிஷிபத்தினியாகும் பேறு பெற்றிருக்கிறார்.

'கலாந்தக மூர்த்தி' என்று அச்சாகியிருக்கும் (பக்.44) காலாந்தக மூர்த்தியின் உருவத்தை வண்ணிக்கும் இடத்தில் எட்டுக்கரங்கள் இருப்பதாகக்கூறி அவற்றிலுள்ள கருவிகளில் ஏழினை மட்டுமே குறித்துள்ளார்; குறுவாள் விடப்பட்டுள்ளது. சொல்லியிருக்கும் ஏழில், மான், சிற்பத்தில் காணுமாறு இல்லை. அதற்குப் பதிலாகத் தீச்சுடர்தான் உள்ளது. பாம்பு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். இருப்பது பாம்புப் பாசம். இறைவன் நக்ர, பத்ர குண்டலங்கள் அணிந்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் மகர குண்டலங்களே உள்ளன. இறைவனின் கால் கீழ் இருப்பவனை வண்ணிக்கும்போது, 'கருப்பு வில் தனிக் கொடும்பூண் காமன் கையில் பாசம் பிடித்தவனாய்' என்கிறார். காலாந்தகரின் கால் கீழ் பாசத்தோடு இருப்பவன் இயமன். அவனை ஏன் 'கருப்பு வில் காமன்' என்கிறார் நூலாசிரியர் என்பது விளங்கவில்லை. இயமனும் காமனும் ஒருவரோ?

உமாசகித மூர்த்தியில் தேவி மலரேந்தியிருப்பதாகக் கூறுகிறார். தேவியின் கையோ அபயத்தில் உள்ளது (பக்.44). அடுத்துள்ள வலம்புரி விநாயகரை இடம்புரியாக்கியுள்ளார் (பக்.45). ஆட வல்லானை வண்ணிக்கும்போது 'கீழ் இடக்கரம் வீசிய நடன முத்திரை' காட்டுவதாக எழுதியுள்ளார் (பக். 46). வீசிய நடன முத்திரை என்று

ஒரு முத்திரையை எந்த நாட்டிய நூலிலும் காணமுடியவில்லை. இவர் சொல்லும் ஆடவல்லானின் கீழ் இடக்கை அர்த்த ரேசிதத்தில் உள்ளது. இது நாட்டிய சாத்திரம் சுட்டும் நிருத்தக்கைகளுள் ஒன்றாகும். பெரும்பாலான ஊர்த்வஜாநு வடிவங்களில் இந்தக் கையைப் பார்க்கலாம்.[10]

'ஆடவல்ல பெருமானின் எழில் தாண்டவம் ஒன்றினை' என்று நூலாசிரியர் இதைச் சுட்டுவதிலிருந்தே, இதை அவர் ஊர்த்வஜாநுவாய் அடையாளம் காணாமை தெள்ளிதின் புலனாகிறது.

கருவறையின் தெற்கு அங்காலயங்களுள் முதல் அங்காலயத்தினுள் அஞ்சலித்த கைகளுடன் நந்திகேசுவரரும் பத்துக் கைகளுடன் சதாசிவ மூர்த்தியும் இருப்பதாக நூலாசிரியர் எழுதியுள்ளார் (பக். 45—46). ஆனால் நந்திகேசுவரர் மட்டுமே முதல் அங்காலயத்தில் இருக்கிறார். சதாசிவர் இரண்டாம் அங்காலயத்தில்தான் காணப்படுகிறார். முதல் ஆலயத்தில் இருக்கும் நந்திகேசுவரரின் வலமுன்கை அபயத்திலும் இடமுன்கை வரதத்திலும் உள்ளன. இவற்றை அஞ்சலித்த கைகளாக ஆசிரியர் பார்ப்பது வியப்பூட்டுகிறது.

திரிபுராந்தக மூர்த்திக்குப் பன்னிரு கைகள் இருப்பதாகக் கூறி எட்டுக் கைகளுக்கு மட்டுமே கருவிகளைச் சுட்டியுள்ளார். அவற்றுள்ளும் ஒன்று பிழையாக உள்ளது. கீழிருந்து மேலாக வல நான்காம் கையில் இறைவன் அம்பு கொண்டுள்ளார். நூலாசிரியர் இதைக் குறுவாளாக அடையாளம் கண்டுள்ளார் (பக். 46).

கஜசம்கார மூர்த்தியின் அருகே நிற்கும் அன்னை தம்மிரு குழந்தைகளை அணைத்து நிற்பதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார் (பக். 47). ஆனால் அம்மையின் வலப்புறம் நிற்கும் பிள்ளையார் தனித்தே காட்டப்பட்டுள்ளார். அம்மையின் வலக்கையோ கடியவலம்பிதத்தில் உள்ளது. கடியவலம்பிதக்கை எப்படிப் பிள்ளையாரை அணைக்க முடியும்?

'கங்காள மூர்த்தி தம் கையில் துடியும் கோலும் ஏந்திய கோலத்துடன் பிட்சாடனரினின்றும் பெரிதும் மாறுபடாது நிற்கின்றார்' எனும் கட்டுரையாசிரியரின் கூற்று (பக். 47) முற்றிலும் பிழையானது.

---

10 திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயில், சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயில், திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில், புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் எனப் பல திருக்கோயில்களில் ஊர்த்வஜாநு சிற்பங்கள் அர்த்தரேசிதக் கையுடன் உள்ளன.

கங்காள மூர்த்தியின் கையில் துடி உள்ளது. ஆனால் கோல் இல்லை. இடக்கையில் கொண்ட துடியை வலக்கையால் தட்டி இசையெழுப்புகிறார். பிட்சாடனரின் பின் கைகளில் உடுக்கையும் திரிசூலமும் உள்ளன. கங்காளரின் பின் கைகளிலோ மழுவும் மானும் உள்ளன. பிட்சாடனரின் வலப்புறம் மான் இல்லை. கங்காளரின் வலப்புறம் மான் உள்ளது. கங்காளரின் அருகே ரிஷிபத்தினிகள் காட்டப்பட்டுள்ளனர். பிட்சாடனர் அருகே இவர்கள் இல்லை. இப்படி அனைத்து நிலைகளிலும் உடை, அணிகலன்கள் உட்பட மாறுபட்டிருக்கும் இவ்வடிவங்களைப் 'பெரிதும் மாறுபடாது நிற்பதாக' நூலாசிரியர் எப்படிக் கூறுகிறார் என்பதுதான் விளங்கவில்லை.

இனி 'மேற்றிசை நாயகர்களைப்' பார்ப்போம். கல்லால் ஆன லிங்கோத்பவர் திருமேனியைச் சுற்றிக் காணப்படும் சுதைக்கோளத்தின் மேலும் கீழும் முறையே அன்னமும் பன்றியும் உருவகம் செய்யப் பெற்றிருப்பதாக (பக்.47) நூலாசிரியர் கூறுகிறார். ஆனால் இந்த வடிவங்கள் லிங்கோத்பவர் திருமேனியிலேயே இடம் பெற்றுள்ளன.

இந்த லிங்கோத்பவருக்கு வலப்புறம் திருமாலும் இடப்புறம் நான்முகனும் நிற்க, 'அருகில் இவ்விருவருக்கும் நடுவில் கங்காதர மூர்த்தி' இருப்பதாக நூல் கூறுகிறது (பக்.47). ஆனால் கங்காதர மூர்த்தி இந்தச் சாலைப்பத்தி ஆலயப்பகுதியிலேயே இல்லை. அவர் சாலை ஆலயத்துக்கும் கர்ண ஆலயத்துக்கும் (தென் மேற்கு) இடைப் பட்ட ஒடுக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறார்.

வடதிசைத் தெய்வங்களுக்கும் தென்திசை போலவே இடமாற்றமும் நிலைமாற்றமும் தந்திருக்கிறார் நூலாசிரியர். நின்ற கோலத்தில் உள்ள நான்முகனையும் சந்திரசேகரரையும் வீற்றிருந்தவர் களாய்ச் சுட்டுகிறார்.

'அங்க ஆலயங்களின் உள்ளே முதலில் பிரம்மனும் அடுத்ததில் சந்திரசேகர மூர்த்தியும் வீற்றிருக்கின்றனர். கையில் அக்கமாலையும் குண்டிகையும் ஏந்தி ஞானத்தின் உருவமாக பிரம்மனும் மான், மழு ஏந்திய கையராய் இடப்புறம் தேவி விளங்கச் சிவபிரானும் இருக்கும் இக்கோட்டத்தின் வெளியே முறையே இராவணன் கயிலையை அசைக்கும் தோற்றமும் ரிஷபாரூட மூர்த்தியும் இருக்கின்றார்'.

இந்தப் பத்தியில்தான் எத்தனைக் குழப்பங்கள்! பிரம்மனும் சிவனும் இருப்பது அங்க ஆலயங்கள் என்று முதல் வரி சொல்கிறது. இரண்டாம் வரியோ அவற்றைக் கோட்டம் என்கிறது. முதல் வரி ஆலயங்கள் என்று பன்மையில் பேசுகிறது. இரண்டாம் வரி இருவரும் இருப்பது ஒரே இடம் என்பது போல் 'கோட்டம்' என்று ஒருமையில்

சுட்டுகிறது. கோட்டம், அங்க ஆலயம் எனுமிரண்டும் இரு வேறுபட்ட கலைச்சொற்கள். ஒவ்வொன்றுக்கும் தனிப் பொருள் உண்டு. அங்க ஆலயம் கோட்டமாகாது. கோட்டத்தை அங்க ஆலயமென்று கூற முடியாது. ஆனால் நூலாசிரியர் இரண்டு சொற்களையும் பொருள் குழப்பமூட்டும் நிலையில் பயன்படுத்தியிருக்கிறார்.

இராவண அனுக்கிரக மூர்த்தி கதைத் தொகுதியில் இராவணன் 'அன்னமுகத் தேரொன்றில்' வருவதாக நூலாசிரியர் (பக்.48) எழுதியுள்ளார். ஆனால் இராவணன் வருவது அன்னமுகத் தேரில் அல்ல. அன்னங்கள் இழுக்கும் தேர் அது. அன்னமுகத் தேர் என்றால் தேரின் முகப்பு அன்னம் போல் அமைந்திருப்பதாகப் பொருள்.

கோபுரச் சிற்பங்களைப் பற்றிப் பேசுமிடத்தில் கோபுரத் தூண்கள் ஒன்றில் 'இடுப்பிற்கு மேலே மனித உருவமும் கீழே விலங்கு உருவமும் கொண்டதாய் வழிபாடு செய்யும் உருவம்' ஒன்று காட்சியளிப்பதாக நூலாசிரியர் கூறுகிறார் (பக். 42). இந்த உருவம் கோபுர உள்ளிடைத் திண்ணையின் தெற்குப் பகுதித் தூணொன்றில் கிழக்குப் பார்வையாக உள்ளது. இது வியாக்கிரபாத முனிவரைக் குறிப்பதாகும். புலிக்கால் முனிவர் என்று அடியவர்களால் அன்போடு அழைக்கப்படும் இவரது சிற்பத்தை நூலாசிரியரால் அடையாளம் காண முடியாமல் போனது வியப்பூட்டுகிறது.

'இக்கோபுரத்தில் 108 ஆடற்கரணங்களையும் உருவகிக்கும் நாட்டியச்சிற்பங்களும் காணப்படுகின்றன' (பக்.43) என்று ஓரிடத்திலும் 'பரதநாட்டியக் கரணங்களும் இதில் உள்ளன' என்று மற்றோரிடத்திலும் (பக்.71) நூலாசிரியர் குறிப்பது கோபுர உட்சுவர்களில் உள்ள தூண் சதுரங்களில் காணப்படும் ஆடற்சிற்பங்களைத்தான். நூலாசிரியரின் இந்த இரண்டு கருத்துக்களுமே பிழையானவை. இங்குள்ள ஆடற்சிற்பங்கள் இருவகையின. நாட்டிய சாத்திரத்தின் தாண்டவ லட்சணப் பகுதியிலுள்ள கரணக் கோலங்களைப் படம்பிடிக்கும் சிற்பங்கள் ஒரு வகை. இக்கோபுரம் கட்டப்பட்ட காலத்தே தமிழ்நாட்டில் அல்லது இப்பகுதியில் வழக்கிலிருந்த ஊரக ஆடல்களைப் படம்பிடிக்கும் சிற்பங்கள் மற்றொரு வகை. இந்த ஊரக ஆடற்சிற்பங்களைப் பெரும்பாலான விசயநகர, நாயக்கக் கோபுரங்களில் காணலாம்.[11]

---

11 இவற்றைப் பற்றி 1991–92இல் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் விரிவான அளவில் ஆய்வு செய்துள்ளது.

நூலாசிரியர் 'பரதநாட்டியக் கரணங்கள்' என்று குறிப்பதும் '108 ஆடற்கரணங்கள்' என்று குறிப்பதும் தாண்டவ லட்சணத்தின் கரணக் கோலங்களைத்தான். இக்கரணக்கோலங்களை 'பரதநாட்டியக் கரணங்கள்' என்றழைப்பது பெரும் பிழையாகும். நாட்டிய சாத்திரத்தில் இடம்பெற்றுள்ள கரணங்களுக்கும் இன்றைய பரதநாட்டியத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை. இதை என்றைக்குத் தான் தமிழ்நாட்டுக் கோயிற்கலை ஆய்வாளர்கள் விளங்கிக்கொள்ளப் போகிறார்களோ தெரியவில்லை. நூலாசிரியர் சொல்லியிருப்பது போல் இங்கு 108 கரணங்களும் இடம்பெறவில்லை என்பது கரணப் பார்வையுள்ள யாரும் கண்டறியக்கூடிய தகவலாகும்.[12]

ஏற்றமிகு கட்டடங்கள் பகுதியிலும் பல பிழைகள் உள்ளன. 'ஏதத் அனிஷ்டகம்' எனத் தொடங்கும் புகழ் பெற்ற மகேந்திரரின் கல்வெட்டு மண்டகப்பட்டில் இருப்பதை வரலாற்று நோக்குடைய அனைவரும் அறிவர். ஆனால் நூலாசிரியர் அக்கல்வெட்டு மாமண்டூரில் இருப்ப தாகக் குறிப்பிடுகிறார் (பக்.60). அனைவர்க்கும் தெரிந்து நன்கு அறிமுகமான இந்தக் கல்வெட்டைப் பற்றிப் பலரும் பிழையாகவே எழுதி வருகின்றனர்.[13] இதற்கு என்ன காரணம் என்றே தெரிய வில்லை.

விமானம் என்ற கலைச்சொல் தாங்குதளம் (அதிட்டானம்) தொடங்கித் தூபி வரையிலான கட்டட அமைப்பைக் குறிப்பதாகும்.

---

வே.கல்பகம், இரா. கலைக்கோவன், 'தமிழகத் திருக்கோயில்கள் சிலவற்றில் ஊரக ஆடற்சிற்பங்கள்', பதிப்பிக்கப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

12 இக்கோயிலின் முதற்கோபுர ஆடற்சிற்பங்களை 1991–92 இல் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் விரிவான முறையில் ஆய்வு செய்துள்ளது. வே. கல்பகம், இரா. கலைக்கோவன், 'திருவதிகைக் கோபுர ஆடற்சிற்பங்கள்', பதிப்பிக்கப்படாத கருத்தரங்கக் கட்டுரை.

13 தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வெளியிட்டுள்ள தமிழர் நாகரிகம் என்ற நூலின் முதற் கட்டுரையில் இக்கல்வெட்டைப் பற்றிக் குறிப்பிடும் திரு. கி. ஸ்ரீதரன் (பக்.5) மகேந்திரவர்மர் 'கல் இன்றி, மண் இன்றி, உலோகம் இன்றிச், சுதை இன்றிக்' கோயில் கட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார். இதே துறையைச் சேர்ந்த ஸ்தபதி திரு.வே. இராமனும் தினமலர் நாளிதழில் (29.10.95) இதே கருத்தை வெளியிட்டுள்ளார். பாவம் மகேந்திரவர்மர். உயிருடன் இருந்திருந்தால் இவற்றையெல்லாம் படித்துப் பதறிப்போயிருப்பார்.

நூலாசிரியர், விமானம் அதிஷ்டானத்தின் மேல் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார் (பக்.61). இது 'உடல், கால்களின் மேல் நிற்கிறது' என்று கூறுவதற்கு ஒப்பானது.

கருவறையும் அர்த்தமண்டபமும் என்ற தலைப்பின் கீழ் 'இக்கோயில் கட்டப்பட்டபோது இவ்விரு பகுதிகள் மட்டுமே (கருவறை, அர்த்தமண்டபம்) இடம்பெற்றிருத்தல் வேண்டும்' என்கிறார் (பக்.64). ஆனால் அடுத்த வரியிலேயே 'அர்த்தமண்டபத் தூண்களும் கருவறை அடுத்த அந்தராள நிலைக்கால்களும் பெரும்பாலும் பல்லவர் காலக் கல்வெட்டுகளைத் தாங்கிநிற்கின்றன' என்று சொல்கிறார். அடுத்த பக்கத்தில் அந்தராளம் என்றால் என்ன என்று வரையறுக்கிறார். 'முற்காலத்தில் கருவறையும் அதே அளவுள்ள சிறிய அர்த்த மண்டபமும் இருக்கும். அவ்விரண்டையும் இணைக்கும் பகுதி அந்தராளம் (இடைக் கழி) எனப்படும்.' ஒரு வரி தள்ளி, 'அந்தராளத்தினை முற்காலச் சோழர் கோயில்களில் மட்டுமே காண்கிறோம்' என்று முத்தாய்ப்பு வைக்கிறார். இக்கருத்துக்களிலுள்ள முரண்களை என்னென்று சொல்வது!

இக்கோயிலில் அந்தராளமே இல்லை. கருவறையும் அடுத்து முகமண்டபமும் (அல்லது அர்த்தமண்டபம்) அதற்கு முன்னால் ஒரு சிறு முன்மண்டபமும் அதையடுத்து மகாமண்டபமும் அதன் முன்னால் அலங்கார மண்டபமும் அமைந்துள்ளன. முன்னிரண்டையும் பின் மூன்றையும் கட்டுரையாசிரியரும் குறிக்கிறார் (பக்.64,65). இவை தவிர அந்தராளம் என்னும் ஒன்றைச் சொல்கிறாரே அதைத்தான் கோயிலில் பார்க்க முடியவில்லை.

நூலாசிரியர் அந்தராள நிலைக்கால்களாகக் குறிப்பிடுவது முகமண்டபத்தின் வாயில் நிலைக்கால்களைத்தான். இவற்றில்தான் தென்புறம் நிருபதுங்கரின் கல்வெட்டும் வடபுறம் தெள்ளாறு எறிந்த நந்திவர்மரின் கல்வெட்டும் காணப்படுகின்றன. இதைக் கட்டுரை யாசிரியரும் நூலின் தொடக்கத்தில் சரியாகவே சுட்டியிருக்கிறார் (பக். 15). என்றாலும் நூலின் பிற்பகுதியில் குழப்பமேற்பட்டுள்ளது. முன் மண்டபம், மகாமண்டபம் பற்றிப் பேசுமிடத்திலும் நூலில் குழப்பமான தகவல்களே தரப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் உட்புறத்தே நுழைவாயிலருகே தென்கிழக்குத் தூணொன்றில் காணப்படும் பிற்கால உருவத் திருமேனியை முன்மண்டபத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டு, இம்மண்டபம் திருப்பணியானமைக்கு இதையும் ஒரு சான்றாகச் சுட்டுகிறார் நூலாசிரியர்.

இந்தக் கோயிலின் விமான அமைப்பு இருவகையில் சிறப்புக் குரியது. ஆனால் நூலாசிரியர் அவற்றைப் பற்றி விரிவாக ஏதும் எழுதவில்லை.[14]

கோயிலின் ஆதி தளப் புறச்சுவரில் காட்டப்பட்டிருக்கும் யாளிகளைச் சிம்மங்கள் என்று தவறாகக் குறிக்கும் நூலாசிரியர், கருவறை, அதிஷ்டானம் என்ற தலைப்பின் கீழ் இரண்டு வரைபடங் களைத் தந்துள்ளார். இவற்றுள் வலப்புறம் இருப்பதுதான் அதிட்டானத்தின் படம். இடப்புறம் இருப்பது உபபீடத்தின் படம். உபபீடத்தை அதிட்டானம் என்று சொல்லும் மரபில்லை (காண்க மயமதம்). இந்த வரைபடங்களில் கட்டட உறுப்புகளின் பெயர்கள் சுட்டப்படாதது பெருங்குறை. இரண்டு வரைபடங்களிலுமே தவறுகள் உள்ளன. உபபீடப்பகுதியின் படத்தில் பத்ம ஜகதியின் மேல் வரும் தாமரை வரியை அடுத்து மூன்று சிற்றுறுப்புகள் காட்டப்பட்டுள்ளன. கட்டட அமைப்பில் இருப்பவையோ இரண்டுதான். தாமரை வரியை அடுத்து ஒரு கம்பும் அதன்மேல் மீண்டும் ஒரு தாமரை வரியும் காட்டப் பட்டுள்ளன. படத்தில், மேல் தாமரை வரி கம்பு போலக் காட்டப் பட்டுள்ளது. அதே போல் குமுதத்திற்கு மேலுள்ள தாமரை வரியை அடுத்து இரண்டு மேலுறுப்புகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. ஆனால் கட்டடத்தில் இருப்பதோ இரண்டு சிற்றுறுப்புகளும் ஒரு மேலுறுப்பும் ஆகும். இரண்டு கம்புகளின் தழுவலில் கண்டம் காட்டப்பட்டுள்ளது.

---

14 இக்கோயிலின் கருவறை இரண்டு சுவர்களைக் கொண்டுள்ளது. இந்த இரு சுவர்களுக்கும் இடைப்பட்ட பகுதி ஒருகாலத்தில் உள்திருச்சுற்றாகப் பயன்பட்டிருக்கிறது. பின்னாளில் இப்பாதையைச் சுவரெடுத்து அடைத்திருக்கிறார்கள். (இதைக் கட்டுரையாசிரியரும் குறித்துள்ளார் — பக்.64.) இப்படி இரு சுவர்களுடன் அமையும் விமானத்தைச் சாந்தார விமானம் என்பர். காஞ்சிபுரத்து இராஜசிம்மேசுவரமே தமிழகத்தின் முதல் சாந்தார விமானம். அதைத் தொடர்ந்து விஜயாலய சோழீசுவரமும் மேலப் பழுவூர்ப் பகைவிடை ஈசுவரமும் சாந்தார விமானங்களாய் எழுந்தன. பின்னாளில் இராஜராஜீசுவரமும் அம்முறையைப் பின்பற்றி, ஆனால் சற்று மாறுபட்ட அமைப்பில் சாந்தார விமானமாய் எழுப்பப்பட்டது.

இவ்விமானத்தின் அங்க ஆலயக் கட்டுமானம் தனித்துவம் வாய்ந்தது. பனைமலையீசுவரம்தான் இதுபோன்ற அங்க ஆலய அமைப்பின் முதற்படி. அது முழுமையுற்ற இடம் காஞ்சிபுரத்து இராஜசிம்மேசுவரம். அதன் மறுபதிப்பே திருவதிகை வீரட்டானம் எனலாம்.

அதிட்டான வரைபடத்தில் பத்ம உபானத்தை அடுத்து இரண்டு சிற்றுறுப்புகள் காட்டப்பட்டுள்ளன. இருப்பதோ ஒரே ஒரு சிற்றுறுப்பு தான். படம் வரைந்தவர் அதன் கீழ் விளிம்பை மற்றொரு உறுப்பாகக் காட்டியுள்ளார். இது போன்ற வரைபடங்கள் கோயில் கட்டுமானத்தை நேரில் பார்க்காதவர்கள் பார்த்து விளங்கிக்கொள்வதற்காகவே நூல் களில் இணைக்கப்படுகின்றன. இவற்றைப் பிழையின்றி வரைவதிலும் இவற்றின் உறுப்புகளைப் பெயர் சுட்டிக் காட்டுவதிலும் நூலாசிரி யர்கள் கூடுதல் அக்கறை கொள்ளுதல் மிக இன்றியமையாததாகும்.

இக்கோயிலின் கருவறையுள் சிவலிங்கத்திற்குப் பின்னாலுள்ள சுவரில் காணப்படும் சுதையுருவத் தொகுதியை நூலாசிரியர் உமாமகேசுவரர் என்று (பக்.43 மற்றும் படத்திற்குக் கீழுள்ள பெயர்) சில இடங்களிலும் சோமாஸ்கந்தர் என்று ஓரிடத்திலும் (பக். 44) குறிப்பிடுகிறார். சோமாஸ்கந்தர் என்று குறிப்பிடுமிடத்தில் பிறைக்குறி களுக்குள் 'தற்போது உமாமகேசுவரர்' என்று எழுதுகிறார். இதற்கு என்ன பொருள் என்று தெரியவில்லை. கோயில் கட்டப்பட்ட காலத்தில் சோமாஸ்கந்தராக இருந்த இத்தொகுதி காலப்போக்கில் உமாமகேசுவரராகிவிட்டதாக நூலாசிரியர் கருதுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படியாயின் அந்த மாற்றத்திற்கான காரணங்களை நூலாசிரியர் தக்க சான்றுகளுடன் விளக்கியிருக்க வேண்டும். அணிந்துரையில் திரு. நடன. காசிநாதன் 'உண்ணாழி கையின் பின்புறச்சுவர் உட்பக்கத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியின் சுதை உருவம் காணப்படுகிறது' என்று நிகழ்காலத்தில் கூறுகிறார். இது மேலும் குழப்பம் தருவதாய் அமைகிறது. சோமாஸ்கந்தராக இருந்த வடிவம் உமாமகேசுவரராகியுள்ளது என்பது போல நூலாசிரியர் சொல்கிறார். ஆனால் அணிந்துரையாளரோ இப்போதிருப்பதே சோமாஸ்கந்தர்தான் என்கிறார். கோயிலில் இருப்பதோ நூலாசிரியர் சுட்டுவது போல் உமாமகேசுவரர்தான்.

அணிந்துரையில் திரு. நடன. காசிநாதன் மேலும் இரு கருத்துக் களைத் தெரிவித்துள்ளார். 'இக்கோயில் அமைப்புமுறை வேறு எங்கும் காணமுடியாத ஒரு சிறப்பான முறையாகும்' என்பது முதல் கருத்து. இக்கருத்தின் பிற்பகுதி உண்மையே. இவ்வமைப்புமுறை சிறப்புக் குரியதுதான். ஆனால் இதை வேறெங்கும் காணமுடியாது என்ற கூற்று பிழையானது. காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரத்தின் கட்டுமானத்தை யொட்டியே திருவதிகை கட்டப்பட்டுள்ளது. பனைமலையீசுவரம் இம் முயற்சிகளின் முதற்படி. இவ்விரண்டு கோயில்களையும் பார்த்தாலே இது தெளிவாய் விளங்கும்.

'தெள்ளாறு எறிந்த மாமன்னனான மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில் திருவதிகையில் எழுப்பப்பட்டது என்பது கோயில் உண்ணாழிகையின் வாயில் நிலைகளில் காணப்பெறும் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது' என்பது திரு. நடன. காசிநாதனின் இரண்டாம் கருத்து. திரு. நடன. காசிநாதன் சுட்டும் கல்வெட்டுகள் உண்ணாழிகையின் (கருவறை) வாயில் நிலைகளில் இல்லை. அவை முகமண்டபத்தின் (அர்த்த மண்டபமென்றும் அழைக்கலாம்) வாயில் நிலைகளில்தான் உள்ளன. இங்குள்ள கல்வெட்டுகளில் எதுவும் 'தெள்ளாறு எறிந்த நந்தியின் காலத்தில் திருவதிகைக் கோயில் எழுப்பப்பட்டது' எனும் கருத்தைத் தரவில்லை.

வாயில் நிலைகளில் தென்புறம் நிருபதுங்கரின் கல்வெட்டும் வடபுறம் நந்திவர்மரின் கல்வெட்டும் உள்ளன. நந்திவர்மரின் கல்வெட்டு விளக்கெரிக்கத் தரப்பட்ட கொடையைச் சொல்கிறது. நிருபதுங்கரின் கல்வெட்டு கோயிலைப் புதுக்கியதாகப் பேசுகிறது. அப்பர் காலத்திற்கு முன்பிருந்தே இவ்விடத்து இருந்த இப்பழங் கோயிலுக்கு விளக்கெரிக்கக் கொடையளித்தார் நந்திவர்மர். அப்பர் காலத்துக் கோயிலை நிருபதுங்கர் புதுக்கினார். செய்திகள் இத்தனைத் தெளிவாக இருந்தும் கருத்துக்கள் ஏனோ பிழையாக உள்ளன.

நூலாசிரியரின் நினைவில் இருபதாண்டுகளாக நிறைந்து கோயிலின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு சிற்பமும் மனதில் பதிந்து இருந்தும்கூட இந்நூலில் கருத்துப் பிழைகள் பலவாக இடம் பெற்றிருப்பது வியப்பூட்டுகிறது. திரு.நடன. காசிநாதன் கூறியிருப்பது போல் 'மிகச் சிறந்த முறையில் வந்திருக்கும் ஒரு சிறந்த நூல்' என்று இதைக்கூற முடியாதபடி அந்த வியப்பே நம்மைத் தடுக்கிறது.

*— டாக்டர் இரா. கலைக்கோவன்.*

---


*நன்றி*

இந்த இதழ் உருவாகப் பல புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும் விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர் கட்கும் அவற்றை வாங்கித் தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

## உ. அன்புள்ள உங்களுக்கு

'வரலாறு 4' கனமான, ஆழமான கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி நிற்கிறது. *அமணி கல்வெட்டும் அறிஞர்* கருத்துரையும், தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு, நூல் மதிப்புரை ஆகியன போற்றத்தகுந்த முறையில் அமைந்துள்ளன. நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு போன்ற நூல்களில் உள்ள செய்திகள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டிருப்பது பயனுடையதாக அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் உள்ள வரலாற்றுச் செய்திகளைத் தனியே கட்டுரைகளாக வெளியிடலாம்.

பேரா.க. இந்திரசித்து,
தமிழ்த்துறை,
வித்யாசாகர் கலை அறிவியல் கல்லூரி,
உடுமலைப்பேட்டை — 642 126.

வரலாறு முழுவதுமாகப் படித்தேன். எனக்குத் திருப்தியாக இருந்தது. நிறைய விஷயங்களை அறிந்துகொள்ளமுடிந்தது. பழைய இதழ்களையும் படிக்க ஆர்வமாக இருக்கிறது. மிகுந்த பயனுள்ள காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். பல்கலைக்கழகங்கள் செய்யவேண்டியதை, செய்யத் தவறியதைத் தனிநபராக இருந்து சாதிக்கிறீர்கள். தமிழ் வரலாற்று உலகில் தங்கள் பணி, உழைப்பு தனித்து நிலைபேறுடையதாக இருக்கும். தங்களுக்கு என் போன்றவர்கள் எப்போதும் நன்றி பாராட்டிக் கொண்டிருப்போம்.

பிரபஞ்சன்,
54, வ.உ.சி. வீதி, பாண்டிச்சேரி — 605 001.

தாங்கள் அனுப்பிய வரலாறு நான்காம் இதழ் கிடைக்கப் பெற்றேன். எப்பொழுதும் போல, தங்களுடைய முயற்சிகள் மிகவும் பாராட்டத்தகுந்தபடி இந்த இதழ் அமைந்துள்ளது. தங்களுடைய முயற்சிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

பேரா. முனைவர் மு. ஆனந்தகிருஷ்ணன்,
துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்,
சென்னை — 600 025.

இந்த பிப்ருவரி இதழைத் திறந்தபோது பொக்கிஷப் பெட்டியைத் திறக்கும் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. எத்தனை நறுமணங்கள், எத்தனைச் சுவைகள். உங்கள் துணுக்குச் செய்திகளைப் படித்தபோது Reader's Digest படிப்பது போல் இருந்தது. உங்கள் முகவுரை படித்து

ரசித்தேன். பற்களைப்பற்றிய சிறு உரை வியப்பைத் தந்தது. அலகாபாத் தூணைப்பற்றி மேலும் அறிய விரும்புகிறேன். பூக்காரிகளைப் பற்றிய செய்தி இரசிக்கத்தகுந்தது. நூல் மதிப்புரை நேர்த்தியாக அமைந்திருக்கிறது. தவறான ஆராய்ச்சிநூல் தவறான கருத்துக்களைப் பதியவைப்பது உண்மையே.

எஸ். ரவீந்திரன்,
11/1, அலெக்ஸாண்டிரியா ரோடு,
திருச்சிராப்பள்ளி — 620 001.

பல்லவர் குடைவரைக் கோயில்களைப் போல் பாண்டியரின் குடைவரைக் கோயில்களையும் விளக்கும் வகையில், தனியே ஒரு நூல் இல்லாத குறையைப் போக்கும் வகையில் தங்களது ஆய்வு மையக் கட்டுரைகள் அமைந்துள்ளன. மிக அருமையான, ஆழ்ந்த, கருத்தமைந்த ஆராய்ச்சியின்பாற்பட்ட கட்டுரைகளை அந்நூலில் காண்கின்றேன். அவற்றுள் செவல்பட்டிக் குடைவரை பற்றிய தங்களது கட்டுரையும் மலையடிப்பட்டிக் குடைவரைகளைப்பற்றித் தாங்களும் தங்களது மாணவிகளும் எழுதியுள்ள கட்டுரையும் மிகச் சிறந்த கட்டுரைகள் என்பதில் ஐயமில்லை. தங்களுடைய மாணவர்கள், முக்கியமாக மாணவியர்கள் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டு, கள ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளது பெரிதும் போற்றற்குரியது. ஆண்கள் கூட ஏறப் பயப்படும் மலைகள், குன்றுகள் மீது அவர்கள் ஏறிச் சென்று கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது உண்மையிலேயே வியப்பிற் குரியது. ஏனைய பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். அமணி கல்வெட்டு பற்றிய அறிஞர் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாயுள்ளன. தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு யாவர்க்கும் முக்கியமாக மாணவர் களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது. இத்தகைய கட்டுரைகள் மூலம் தாங்கள் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு நிலையான பல கருத்துச் செல்வங்களை வழங்கி வருகிறீர்கள்.

பேரா. முனைவர் கி.ர. அனுமந்தன்,
செயலாளர் — தமிழ்நாடு வரலாற்றுப் பேரவை,
8—A, முதல் குறுக்குச் சாலை,
சீத்தம்மா காலனி, ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை — 600 018.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் நிறுவி, அதன் வாயிலாகத் தமிழ்நாட்டுக்குப் புதியனவாகக் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டுகளை அறிமுகஞ் செய்வது காலத்தால் புரிந்திடும் சீரிய

தொண்டாகும்; பல கோயில்களில் அமைந்துள்ள சிற்பச் செல்வங்களைப் பற்றி எழுதுவதும் நிழற்படங்களுடன் சிலவற்றை வெளியிடுவதும் தமிழ்ப் பெருமக்கள் நன்றியுணர்வுடன் போற்றிப் பாராட்ட வேண்டியவையாகும்.

தமிழக வரலாற்றில் பல்லவர்களுக்குக் கிடைத்த மிகுதியான அறிமுகம், குடைவரைகளை நிரம்ப அமைத்த பாண்டியர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை வரலாறு பயில்பவர்கள் பலரும் உணர்வர். அந்தக் குறையைப் போக்கும் நோக்கில், பாண்டி மண்டலம், முத்தரையர் கட்டுப்பாட்டிலிருந்த பகுதி ஆகியவற்றில் காணலாகும் குடைவரைகளைப் பற்றி விளக்கமான கட்டுரைகளை வரலாறு ஆய்விதழ் வாயிலாக வெளியிடுவதை நெஞ்சார வரவேற்கிறேன்.

கல்வெட்டுகளேயன்றிச் செப்பேடுகள், நாணயங்கள், கட்டடக் கலை வரலாறு முதலிய தலைப்புகளில் தேவையான சுவைமிகு செய்திகளை வெளியிட்டிருப்பது, வரலாற்றில் தெளிவு காண விரும்பிய அமரர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்கு புரிந்திடும் நன்றி வழிபாடாகவே அமையும்.

வரலாறு வாயிலாக அருமையான பல தமிழ்ப் பண்பாட்டுக் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளமை, தமிழர்களின் நற்பேறாகும். திருத்தவத்துறைக் (லால்குடி) கல்வெட்டில் எட்டாம் வரியில் வரும் நீலகண்டி எனுஞ் சொல்லாட்சி, அக்காலத்து மக்கள் சிவபிரானின் நீலகண்டத்தில் கொண்ட ஈடுபாட்டைப் புலப்படுத்தும். சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் கொற்றவைக் கோலம் பூண்ட குமரியை, நஞ்சுண்ட கறுத்த கண்டி எனக் குறிப்பிட்டதன் தாக்கம், கல்வெட்டில் நீலகண்டி என வந்துள்ளதாகக் கருதுகிறேன். இது போன்று பல ஆராய்ச்சிச் சிந்தனைகளுக்கு இடந்தரும் வகையில் வரலாறு தமிழகத்தில் நன்கு உலா வரட்டும்!

*செ. வைத்தியலிங்கன்,*
தமிழ் ஆராய்ச்சி இணைஞர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

வரலாறு இதழ் பருவத்துக்குப் பருவம் மெருகேறி வருகிறது. அடிகளாரைப் போலவே தாம் சரியெனத் தீர்மானித்ததைச் செயல் படுத்துவதில் தடுமாற்றமடையாத (decisive ஆன) தங்கள் மனவுரமும் ஊக்கமும் வாழ்க! பிணம்படு மாகேச்வரச் சிங்காதனமிடுதல், பிச்சும் பிராந்தும் அமணி போன்ற வழக்குகள் தொடர்பாக அறிஞர்கள்,

ஆர்வலர்களின் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளீர்கள்; வெளியிட எண்ணியுள்ளீர்கள். இம்முயற்சி பரவலான பாராட்டைத் தங்களுக்குப் பெற்றுத்தரும்; பட்டிமன்றம் போல, ஆர்வலர்களை ஈர்க்கவும் செய்யும்.

குடைவரைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் மிகவும் தேவை யானவை. தூண் அமைப்புகள் போன்றவற்றை, அவற்றின் வளர்ச்சி நிலைகளோடு புரிந்து கொள்வதற்கு நிழற்படங்கள் இன்னமும் கூடுதலாக வெளியிடலாமே!

எஸ். இராமச்சந்திரன்,
10-A, ரகு பில்டிங், ஏரல் – 628 801.

வரலாறு நான்காம் இதழ் கண்டேன். அடிகளாரின் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தித் திருவருவப்படத்தை முகப்பிலிட்டு 'வரலாறு' பெருமைப்படுத்தியுள்ளது. பாரதியார் பாடல்களைத் தக்கவாறு எடுத்துக்காட்டியவிதம் மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது. அடிகளார் இந்த வையத்தார் நெஞ்சமெல்லாம் என்றென்றும் நிறைந்திருப்பார்.

பெருமைச்சுவடுகள் பகுதியில் மேதைகளின் வாழ்க்கையையும் சாதனைகளையும் எடுத்துக்காட்டிவருவது மிகவும் நன்றாக உள்ளது. அவர்கள் படைத்த நூல்களை ஆண்டு வாரியாகப் பட்டியலிட்டு பின்னிணைப்பாகக் கொடுத்தால் இளம் வரலாற்று ஆய்வாளர் களுக்குப் பேருதவியாக இருக்கும்.

அங்கும் இங்கும் பகுதியில் வெளியிடப்படும், நடைபெற்ற கருத்தரங்குகள், கள ஆய்வரங்குகள் போன்றவை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். மேலும் அரிதாக நடைபெறும் இக்கருத்தரங்குகள் நடைபெறும் இடம், காலம் முதலியவற்றை முன்கூட்டியே வரலாறு இதழில் இடம்பெறச் செய்தால் ஆய்வாளர்கள் அவற்றில் கலந்து கொண்டு அரிய கருத்துக்களை அறிந்துகொள்ள முடியும்.

அ. சம்பத்குமார்,
நூலகர், எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி,
திருப்பனந்தாள் – 612 504.

தங்களுடைய வரலாறு இதழ் நான்கு வாசித்து முடித்தேன். மிகவும் பயனுள்ள நூல். இந்த வகையில் தங்களின் பணி தொடர இறைவனை வேண்டுகிறேன்.

தே. ரஃபேல்,
துகில் இண்டர்நேஷனல்,
57/2, ஆறாவது நிழற் சாலை,
சென்னை – 600 101.

தமிழகக் கல்வெட்டுக்கள், புதை பொருட்கள், கோயிற் கட்டிடக் கலைகள், சிற்பக்கலை போன்றவற்றின் மாட்சி தெரிவிக்கும் தனி இதழ் இல்லாத குறையினை நிறைவு செய்யும் வகையில் 'வரலாறு' அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. பல ஆண்டுகட்கு முன்னர் வெளிவந்த Tamilian Antiquary, கிறித்துவக் கல்லூரி இதழ் போன்று இந்த இதழ் தொடரும் எதிர்காலத்தில் வரலாற்றுச் சான்றேடாகத் திகழ வேண்டுமென்பது என் விருப்பம்; திகழுமென்பது என் நம்பிக்கை.

பேரா. முனைவர் அ.மா. பரிமணம்,
C 151, நகராட்சிக் குடியிருப்பு,
தஞ்சாவூர் – 613 007.

'வரலாறு' என்ற சொல் பொருத்தமாய் இவ்வாய்விதழுக்கு அமைந்துள்ளது! "சொல்வது தெளிந்து சொல்" சொற்றொடர் நயமானது. உங்களின் சீரிய பணிக்கு மட்டுமல்ல, யாவருக்குமே இது பொருந்தும். நற்றிணைச் செய்திகள் ஆர்வத்தைத் தூண்டுபவையாய் உள்ளன. எவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருந்தால் இத்தகையதொரு இதழ் வெளிவர முடியும் என்பதை எண்ணுகையில் ஆச்சரியமாய் உள்ளது. இந்த உன்னதமான பணி தொடர டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்கு என் வாழ்த்துக்கள்.

வ. உமா,
17, பாரதிதாசன் முதல் தெரு,
இராஜகீழ்ப்பாக்கம், சென்னை – 600 073.

---

***எண்ணங்களை எழுதுங்கள்***

வரலாறு ஐந்தாம் இதழைப் படிக்கும் அன்பர்கள் இந்த இதழின் அமைப்பு, இதில் இடம் பெற்றிருக்கும் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப்பற்றித் தத்தம் கருத்துக்களை எழுதுமாறு வேண்டுகிறோம். புதியனவாகவும் பயனுள்ளவையாகவும் எவ்வெப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதற்கும் வழிகாட்டுங்கள். இவ்விதழில் வெளியாகியுள்ள ஆய்வுக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தெரிவித்தருள்க. வரலாறு உரியவற்றை வெளியிட்டு மகிழும்.

# 3. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
முனைவர் ஆய்வர்,
டாக்டர் மா.இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி – 620 017.

2. எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை,
10A, ரகு பில்டிங்,
ஏரல் – 628 801.

3. இரா. கலைக்கோவன்
இயக்குநர்,
டாக்டர் மா.இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி – 620 017.

4. ம. காந்தி
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
வேலூர் – 632 004.

5. ஆறுமுக சீதாராமன்
11, உமா நகர்,
தஞ்சாவூர் – 613 007.

6. மு. நளினி
மதிப்புறு கல்வெட்டாய்வர்,
டாக்டர் மா.இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி – 620 017.

7. இரா. லலிதாம்பாள்
இசை ஆசிரியை,
கோயிலூர் பெரியநாயகி
மகளிர் மேனிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை – 614 704.


நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி : 468642

**ஆனந்தா அச்சகம்**

மலைவாசல்,

திருச்சிராப்பள்ளி – 620 002.

*With Best Compliments From*

Phone : 25986
Fax : 0091431 - 468688

# SHREE AKILA NURSING HOME

- **KIDNEY MEDICAL CENTRE**
- **RESEARCH CENTRE FOR**

**HYPERTENSION**
**&**
**BONE MARROW TRANSPLANTATION**

SALAI ROAD, TIRUCHIRAPALLI - 620 018.

*With Best Compliments From*

Phone : 469955

**M/s. KALKI JEWELLERY**

43, CHINNAKKADAI STREET,

**TIRUCHIRAPALLI - 620 002.**

*With Best Compliments From*

**Dr. A. ZAMEER PASHA**

**M.S., F.I.C.S., F.A.I.S., F.I.A.M.S.,**

**Dr. (MRS) SHAKILA ZAMEER**

**M.B.B.S., D.G.O., F.I.A.M.S.,**

**SHANAWAZ NURSING HOME**

A-20, MAIN ROAD, THILLAI NAGAR,

**TIRUCHIRAPALLI - 620 018.**

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி

கடை : 24361

வீடு : 27161

மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி முதலிய
நகரங்களில் தயாராகும் மணம் மிக்க
ஊதுபத்திகளை வாங்கச் சிறந்த இடம்

ப. மூக்கப்பிள்ளை

பல்பொருள் அங்காடி

265, பெரியகடை வீதி,

திருச்சிராப்பள்ளி - 620 008.

வரலாறு இதழுக்கு வாழ்த்துக்கள்

## திருமுருகன் மருந்துக்கடை
## &
## மகாலட்சுமி நிதிநிறுவனம்

18/1, கீழச்சத்திரம் சாலை,
தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

உ. சிவமயம்.

"வாழ்க வளமுடன்
வளர்க வி.சி.ஐ. சீட்டுடன்"

ரூ. 6,000/–த்திலிருந்து ரூ. 2,00,000/– வரை
ஏலச்சீட்டுகள் கடந்த 25 ஆண்டுகளாக
சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்.

பணத்தைச் சேமித்து வளர உதவிடும்
பணத்தேவையில் கொடுத்து உதவிடும்
உங்களின் உற்ற நண்பன்

## விசாலாக்ஷி சிட்
## இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

811, ஒப்பணக்கார வீதி,
கோயம்புத்தூர் – 641 001.

(ஹரிஹரன் & கோ. குரூப்ஸ்)

*With Best Compliments From*

# DOLLAR MARK DIAMONDS

BIG SOWRASTRA STREET,

**TIRUCHIRAPALLI - 620 008.**

*With Best Compliments From*

Phone : 29815

**Dr. R. SUNDARARAJAN**

**Consultant Neurologist**

**NEURO CENTRE**

4–B, Tenth Cross (East),

Thillai Nagar,

**TIRUCHIRAPALLI - 620 018.**

With Best Compliments From

**J.M. HOSPITAL**

5, ALLITHURAI ROAD,

**TIRUCHIRAPALLI - 620 017.**

நல்வாழ்த்துக்கள்

**ஹெர்பல் ப்ளஸ்**

கேசப் பராமரிப்புக்கு இது
ப்ளஸ் மார்க்.

REETHA

SHIKAKAI

HIBISCUS

**ஹெர்பல் பவுடர்**

பாரம்பரியச் சிறப்புடன்
கேசப் பராமரிப்பு
With all the Glamour

Marketed By :
**J.K. Chemicals Ltd.,**
Bombay - 400 038.
Madras - 600 078.

நல்வாழ்த்துக்கள்

**SUN TAILORS**

TRUNK ROAD,
THIRUVANAIKOIL,
TIRUCHIRAPALLI - 620 005.

நல்வாழ்த்துக்கள்

*பட்டு, மில் ஜவுளிகள் மற்றும் ரெடிமேட்*
*ஆடைகளுக்கு*

**ஆனந்தா**

**சில்க் பாரடைஸ்**

என்.எஸ்.பி. ரோடு,
*திருச்சிராப்பள்ளி - 620 002.*

தொலைபேசி : 31728

நல்வாழ்த்துக்களுடன்

22 காரட் தங்க நகைகள்
மற்றும்
வெள்ளி ஆபரணங்களுக்கு

# தேவி ஜுவல்லர்ஸ் A/c,

மலைவாசல்
38, சின்னக்கடை வீதி,
திருச்சிராப்பள்ளி - 620 002.

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி
அலுவலகம் : 31525
29355
தொழிலகம் : 622301

*தரம், எண்ணிக்கை, அளவு*

இவைகளைக் கருத்தில் கொண்டு செங்கல்
உற்பத்தி செய்து விநியோகிப்பது

**ஸ்ரீலெக்ஷ்மி செங்கல்**
**தொழிற்சாலை**

டி—331, ஐந்தாவது குறுக்கு,
அண்ணா நகர் மேற்கு, தென்னூர்,
திருச்சிராப்பள்ளி — 620 017.

# Sri Maheswari Finance Corporation
# Sri Nathan Finance
# &
# NATHAN CHITS

PHONE : 31642

## HIGH RATE OF INTEREST FOR FIXED DEPOSITS

| நிரந்தர வைப்பு நிதிகளுக்கு | | FOR FIXED DEPOSITS | |
|---|---|---|---|
| காலம் | வட்டிவிகிதம் | Period | Rate of interest |
| கால் டெபாசிட் | 12% | Call Deposits | 12% |
| 6 மாதங்கள் | 15% | 6 Months | 15% |
| 13 மாதங்கள் | 18% | 13 Months | 18% |
| நான்கு வருடங்கள் | இரட்டிப்புத் தொகை | Four years | Double the Amount |

| ஏலச்சீட்டு | | | | AUCTION CHITS | | | |
|---|---|---|---|---|---|---|---|
| குரூப் | தவணை | மாதம் | சீட்டுத் தொகை | Group | Instalment | Months | Chit Amount |
| A | 5000 | 20 | 100000 | A | 5000 | 20 | 100000 |
| B | 2500 | 20 | 50000 | B | 2500 | 20 | 50000 |
| C | 1250 | 20 | 25000 | C | 1250 | 20 | 25000 |
| D | 500 | 20 | 10000 | D | 500 | 20 | 10000 |
| E | 250 | 20 | 5000 | E | 250 | 20 | 5000 |

## எங்கள் நிறுவனங்களின் சிறப்பு அம்சங்கள்

1. வைப்பு நிதிகளுக்கு வட்டித்தொகை மாதா மாதம் உங்கள் வீடு தேடி வரும்.
2. ஏலம் எடுத்த மறு நிமிடமே சீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. கடைசி மாதம் முழுத்தொகையும் எவ்விதப் பிடித்தமுமின்றிக் கொடுக்கப்படும்.
4. முதல் மாதமும் ஏலம் உண்டு. 2வது சீட்டைத்தான் கம்பெனி எடுத்துக்கொள்ளும்.
5. கம்பெனி கமிஷன் முதல் 15 மாதங்களுக்கு மட்டுமே 5% கமிஷன்

   | | |
   |---|---|
   | 16வது மாதம் | 4% கமிஷன் |
   | 17வது மாதம் | 3% கமிஷன் |
   | 18வது மாதம் | 2% கமிஷன் |
   | 19வது மாதம் | 1% கமிஷன் |

   20வது மாதம் (கடைசி) கமிஷன் இல்லை.
6. ஏலத் தேதிக்குள் சீட்டுப்பணம் செலுத்துபவர்களுக்குத் தவணைத் தொகையில் 1% ஊக்க போனஸாக வழங்கப்படும்.

தொலைபேசி : 469971

நல்வாழ்த்துக்கள்

நவீன டிசைன் தங்கநகை

வெள்ளிப் பாத்திரங்கள் வாங்கக்

கைராசியான ஸ்தாபனம்

**ஸ்ரீ லெக்ஷ்மி ஜுவல்லரி A/c**

லெக்ஷ்மி காம்ப்ளெக்ஸ்

73-B/1, சாலைரோடு,

தில்லைநகர்,

திருச்சிராப்பள்ளி — 620 018.

தொலைபேசி : 24211

நல்வாழ்த்துக்கள்



# திருச்சி எக்ஸ்ரேஸ்

தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் அருகில்

மெயின்கார்டு கேட்

திருச்சிராப்பள்ளி – 620 002.

*நல்வாழ்த்துக்கள்*

இன்றைய நாகரிகத்திற்கு ஏற்ற பல
புதுப்புது மாடல்களில் கூலிங்கிளாஸ்,
போட்டோ கிரே, போட்டோ பிரவுன், பவர் கிளாஸ்
அனைத்தையும் சரியான விலையில் வாங்கிடச்
சிறந்த கண் மருத்துவர்களால்
பரிந்துரைக்கப்படும் இடம்



# டைமண்ட் ஆப்டிகல்ஸ்

120, ஏ. கே. எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில்,
பாளையம் பஜார், உறையூர்,
திருச்சிராப்பள்ளி - 620 003.

---

தொலைபேசி : 29090

# டைமண்ட் ஆப்டிகல்ஸ்

2-A, ஈ. வே. ரா. சாலை,
புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

*With best compliments from*

Phone : Off : 31854
Resi : 24448

A. MASAN C.A.,
A. NATARAJ B.B.A.,
R. MANIKANDAN

# M/s. SASTHA PHARMA

1, ELEVENTH CROSS,
**THILLAI NAGAR,**
**TIRUCHIRAPALLI - 620 018.**

STOCKISTS FOR

1. RAMARAJU SURGICAL COTTON MILLS LTD.
2. GEM LABORATORY & GENERAL LABS.
3. GLASSVAN SYRINGES
4. INDU DRUGS, HYDERABAD.
5. LINCOLN PHARMACEUTICALS PVT. LTD.
6. AQVILA LABS.
7. IMPORTED DISPOSABLES
8. BHARATIYA LABORATORIES, AHMEDABAD.

OUR NEW SISTER CONCERN

# M/s. CHITRA AGENCY

22J, KAMARAJAPURAM WEST,
**KARUR-639 002.**

Jothi Printers, Tiruchirapalli-2. Phone : 700416.